விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி

## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு.14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 29 புதன்கிழமை (12.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 175

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லாண்
சிமெந்து (O.P.C.) ராம்கோ சிமெந்து

# வட - கிழக்கை இணைத்தால் சிங்களவர் சிறுபான்மையாவர்

## அதிகாரங்களை குறையுங்கள் என்கிறார் முஸ்தபா



(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைப்பதன் மூலம் கிழக்கில் உள்ள சிங்கள முஸ்லிம் மக்கள் தமிழர்களுடன் ஒப்பிடும் போது சிறுபான்மை இனத்தவர்களாக மாற்றப்படுவர். இது இனங்களுக்கிடையில் இடைஞ்சலை உருவாக்கும். எனவே மாகாண சபை அதிகாரங்களை குறைக்க வேண்டியது அவசியம் என தொழில்நுட்ப மற்றும் ஆய்வு பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் மீது தாக்குதல்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் மீது கொலை வெறித் தாக்குதல்



மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பலபிட்டிய - மீகெட்டுவத்த பிரதேசத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக

(20ஆம் பக்கம் பார்க்க)

## வாஸ் குணவர்த்தன சி.ஐ.டியினரால் கைது

(கொழும்பு)

மேல்மாகாணத்தின் வடக்கு பிராந்தியத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுமுன் தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார். பம்பலப்பிட்டி முஸ்லிம் வர்த்தகரின் கொலைச் சம்பவம்



தொடர்பிலேயே குற்றப்புலனாய்வு பிரிவினர் அவரை கைதுசெய்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக்க சிறிவர்த்தன தெரிவித்தார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை இராணுவத்தினருக்கு தமிழகத்தில் தொடர்ந்தும் பயிற்சி!

## முகாமைச் சுற்றி 3 அடுக்கு பாதுகாப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவ வீரர்கள் பயிற்சி பெறும் தமிழகத்தின் நீலகிரி மாவட்டம் குன்னூர் அடுத்த வெலிங்டன் கன்டோன்மெண்ட் பகுதியில் மூன்று அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீலகிரி மாவட்டம் குன்னூர் அடுத்த வெலிங்டன் கன்டோன்மெண்ட் பகுதியில் இராணுவ முகாம் மற்றும் இராணுவ பயிற்சிமையம் மற்றும் 27 கிராமங்கள் உள்ளன. 7 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர். இராணுவ பயிற்சி மையத்தில் இந்தியா உட்பட பல்வேறு நாடுகளை சேர்ந்த இராணுவத்தினருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இங்கு பயிற்சி பெற கடந்த 27ம் திகதி இலங்கையை சேர்ந்த விங் கொமாண்டர் எம்.எஸ்.பந்தார தசநாயக, மேஜர் சி.எஸ்.ஹரிஷ் சந்திர ஹெட்டியராச்சி ஆகியோர் வந்தனர். இவர்களுக்கு பயிற்சி அளிக்க முதல்வர் ஜெயலலிதா, திமுக தலைவர் கருணாநிதி, வைகோ, ராமதாஸ், திருமாவளவன் உள்ளிட்டோர் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

இலங்கையை சேர்ந்த அதிகாரிகளுக்கு இங்கு எவ்வித பயிற்சியும்

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்து அகதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை!

### கோருகிறார் - மாவை

(கொழும்பு)

பிரான்ஸில் தேர்தல் நடைபெற்றால் இந்தியாவின் பாண்டிச்சேரியிலிருந்து வாக்களிக்கும் நிலை இருக்கின்றது. எனவே,



குறைந் தபட்சம் இந்தியா விலுள்ள ஈழ அகதிகளுக்காவது இலங்கை அரசாங்கம் வாக்களிக்கும்

(19ஆம் பக்கம் பார்க்க)

# அத்வானியின் ராஜினாமா வாபஸ்

(புதுடில்லி)

பாரதிய ஜனதா கட்சியில் குஜராத் முதல்வர் நரேந்திர மோடிக்கு கட்சியின் தேர்தல் குழு தலைவர் பதவி கொடுக்கப்பட்டதை எதிர்த்து தான் வகித்த அனைத்துப் பொறுப்புக்களில் இருந்தும் ராஜினாமா செய்வதாக கூறியிருந்த கட்சியின் நிறுவுநர்களில் ஒருவரான எல்.கே. அத்வானி, 24 மணி நேரத்துக்குள் தனது முடிபை திரும்பப் பெற்றுவிட்டார்.

கட்சியின் பல்வேறு தலைவர்கள் மற்றும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கோரிக்கையின்படி அவர் தனது முடிபை மாற்றிக் கொண்டதாக எல்.கே.அத்வானியின் வீட்டில் அவரின்றி நடைபெற்ற நிருபர்கள் சந்திப்பின் போது பாரதிய ஜனதா கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

அத்வானி அவர்கள் கட்சி தொடர்பாக எழுப்பிய கரிசனைகள் கவனிக்கப்படும் என்று நான் கட்சியின் சார்பாக தெரிவித்தேன். இது குறித்து அவரோடு இணைந்து செயல்படுவோம் என்றும் கூறினேன்.

இன்று (நேற்று) மதியம் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் தலைவரான மோகன் பகவத், அத்வானியை தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

(19ஆம் பக்கம் பார்க்க)




இலங்கைக்கு விஜயம் செய்துள்ள மாலைதீவின் பாதுகாப்புப்படை பிரதானி மேஜர் ஜெனரல் அஹமட் சியாமுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் அலரிமாளிகையில் நேற்று முன் தினம் மாலை சந்திப்பு இடம் பெற்றபோது ...

பொருத்தமான தொழில் தகைமை இல்லாமல் வெளிநாடு சென்று பணம் சம்பாதிக்க முடியாது!

இதோ உங்களுக்காக நாம் தரும்
UK, Australia, Canada, Malaysia, Singapore என
விரும்பிய நாட்டுக்குச் சென்று பணம் சம்பாதிப்பதற்கான
வருமானத்துடன் கூடிய
தொழிற்பயிற்சி & தொழில்வாய்ப்பு
[உணவு, தங்குமிட வசதி இலவசம்]



3 in 1
City & Guilds
aets
UEL University of East London
SkillsMalaysia INVITE

. பயிற்சிக் காலத்தில் 50,000 ரூபா வருமானம்
. பயிற்சி நிறைவில் UK, Australia, Malaysia சர்வதேச தரச் சான்றிதழ்கள்
. பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்தபின் Work Permit உடன் வேலைவாய்ப்பு
. UK, Australia, Canada என விரும்பிய நாட்டில் சட்டபூர்வமாக ...

IELTS, வங்கிப்பண வைப்பு
தூதரக நேர்முகத் தேர்வு } அவசியமில்லை
யாழ்ப்பாணத்திலேயே விசாவைப் பெற்று உடனே பயணிக்கலாம்!

வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பிரதிநிதியை நேரில் சந்தித்து அனுமதி பெற
ஜூன் 15 சனி ▸▸▸ யாழ்ப்பாணம்
ஜூன் 16 ஞாயிறு ▸▸▸ வவுனியா
ஜூன் 17 திங்கள் ▸▸▸ கிளிநொச்சி
ஜூன் 18 செவ்வாய் ▸▸▸ மீண்டும் யாழ்ப்பாணம்

பிரவேசம் இலவசம் முற்பதிவுகளுக்கு: 077 36 16 798
இதுவரை 3 அணிகளாக 30க்கு மேற்பட்ட மாணவர்கள் பயணமாகியுள்ளனர்
வெளிநாடு செல்லும் வசதியில்லாத மாணவர்களுக்கு உள்நாட்டு தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கான சிகரம் தொழில் வழிகாட்டல் ஆலோசனை முற்றிலும் இலவசம்!

சிகரம்
கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(DAMROவுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11 நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com இணையம்:www.sikaram.lk
(3596)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்







வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே. : 021 321 0815, 021 567 1540
E-mail : valampurii@yahoo.com,
valampurijaffna@gmail.com

# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளிற்கு 20-50 வயது வரையான ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சனி, ஞாயிறு வேலை நாளாகும். வெள்ளி ஓய்வாகும்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேசத்தவர்கள் மாத்திரம் நேரில் வரவும்.

**✪ முகாமையாளர்**

பல்கலைக்கழக பட்டம் ஒன்று. அத்தோடு சேவை முன்னனுபவம் மேலதிக தகைமையாகும். ஆங்கில சிங்கள மொழியாற்றல் முக்கியம். மாதாந்த வேதனம் 35 000.00 முதல் இணைந்த படிகளும்.

**✪ முகாமைத்துவ உதவியாளர்/ Clerk**

க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி . அத்தோடு சேவை முன்னனுபவம் மேலதிக தகைமையாகும். ஆங்கில சிங்கள மொழியாற்றல் முக்கியம். வேதனம் நேரில் தீர்மானிக்கப்படும்.

**✪ அலுவலக சிற்றூழியர் (பியோன்)**

8 ஆம் தரச்சித்தி. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
நேர்முகப்பரீட்சை சனி 15.06.2013 மு.ப. 10 மணிக்கு நடைபெறும்.

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-3601)

# கிருஷ்ணா அடைவு சேவை

இல. 370, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
இல 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
பதிவு இல. J/DS/BR/ 472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2012ஆம் ஆண்டு (31.05. 2012) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி (15.07.2013) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும்.

புதுப்பிக்கத் தவறின் 15.07.2013 ஆம் திகதி விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

இல. 370, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 4900311

இல. 09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 2225046

(சி-3584)

# REPAIRING

சகல விதமான கணனிகளும் (Laptop & Desktop) CPU, Monitor (LCD, CRT), LED TV, Printer, UPS மற்றும் இலத்திரனியல் உபகரணங்களும் ஒரே நாளில் உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து ஒரே நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களை குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

NORTH LEAD COMPUTER SALES & SERVICE
No : 328, Staly Road, Jaffna
(ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, Mob : 0772533390, Fax : 222 4460

# ஆங்கில, சிங்கள, கணனி வகுப்புகள்

உயர் வகுப்பு மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

S L R W திறனை குறுகிய காலத்தில் விருத்தி செய்ய அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் வழிகாட்டலில்...

NORTH LEAD EDUCATIONAL CENTER
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

# கனடா: கணவன் - மனைவி ஒரு மாதத்தில் பறக்கலாம்

படிக்க, உழைக்க சட்ட ஆலோசனை
அரிய வாய்ப்பு 2 குடும்பங்களிற்கே

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 2219016, 021 5689090



(சி-3602)


# நன்றி தெரிவிக்கின்றோம்






முல்லைத்தீவு மாவட்ட
மக்களுக்கு சமுர்த்தி
ஊடாக ஒளியூட்டிய
கௌரவ அமைச்சர்
**டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கு
சமுர்த்தி உத்தியோகத்தர்கள்
சார்பில் நன்றியையும்

இன்னும் எமது முல்லைத்தீவு மாவட்ட
மக்களுக்கு ஒளியூட்ட அமைச்சர் பல
சேவைகளை வழங்க வேண்டும் என்றும் கோரி
உங்கள் பணி தொடர எங்கள் வாழ்த்துக்கள்.
அத்துடன் எம்மை சமுர்த்தி
உத்தியோகத்தர்கள் ஆக்கத் துணைபுரிந்த
எமது முல்லைத்தீவு மாவட்ட
ஈ.பி.டி.பி இணைப்பாளர் ஜெயராஜ் அண்ணா
அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறோம்.

சமுர்த்தி நியமனம் பெற்ற
முல்லைத்தீவு உத்தியோகத்தர்கள்.

(சி-3603)

# பாராட்டி வாழ்த்துவதில் பெருமை அடைகின்றோம்







நிரந்தர நியமனமின்றி
நித்தம் நாம் தவித்த வேளை
உளம்தனை தேற்றினீர்
ஓர் நியமனம் எமக்குத் தந்து
உளக்காயம் ஆற்றினீர்
எம் நிலையறிந்து -நீர்
தம் சேவை செய்ததை
எள்ளளவும் மறவோம்
என்றும் இதயத்தில் வைத்திடுவோம்
வறுமை அற்ற தேசத்திற்கு
வசந்தம் காட்டிய தலைவா
உங்கள் இனமதமற்ற
உரிமைக்குரல் தொடர்ந்து ஒலிக்க
எங்கள் உறவுக்கரம் இன்னமும் உயர
உங்கள் கரம் பலம் சேர்ப்போம்.

புதிய நியமனம் பெற்ற
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
புதுக்குடியிருப்பு பிரதேசம்

(சி-3600)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அசோகச் சக்கரவர்த்தி

ஒருநாள் அசோகமன்னர் உலா வந்து கொண்டிருக்கிறார். அவர் அருகில் ஆலோசகர்கள் அனைவரும் படைசூழ வந்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சமயத்தில் எதிரில் புத்த பிக்கு ஒருவர் வந்தார்.

புத்தபிக்குவைப் பார்த்ததும் அசோகமன்னன் ஓடிப்போய் அவரது காலில் விழுந்து வணங்கினார்.

அவ்வேளையில் அசோக மன்னரின் தலை அந்த பௌத்த துறவியின் பாதத்திற்பட்டது.

இந்தக்காட்சியைக் கண்ட அமைச்சருக்கு மிகவும் சங்கடத்தை ஏற்படுத்தியது. அவர் மிகவும் மனம் வருந்தினார்.

"நமது அசோகச்சக்கரவர்த்தி எவ்வளவு பெரியவர்! அவருடைய தலை ஒரு சந்நியாசியின் பாதத்தில் படுவதா?'' என்று நினைத்து அமைச்சர் மிகவும் கவலைப்பட்டார். அரண்மனை திரும்பியதும் அமைச்சர் மெதுவாகப் பேச ஆரம்பித்தார்.

"அரசே! நான் மிகவும் வருத்தப்படுகிறேன்! என்றார். எதற்கு நீங்கள் வருத்தப்படுகிறீர்கள்?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

"அசோகச்சக்கரவர்த்தியின் சிரம் மிகவும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய ஒன்று. அது ஒரு சந்நியாசியின் காலில் படுவதா'' என்று அமைச்சர் வினவினார்.

அதற்கு மாமன்னர் எதுவும் கூறாமல் புன்னகை செய்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். அதன்பின்னர் அசோகச் சக்கரவர்த்தி ஒரு சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தார்.

அவர் ஒருநாள் அமைச்சரைக் கூப்பிட்டு எனக்கு மூன்று சிரங்கள்... அதாவது தலைகள் வேண்டும்! என்று கட்டளை பிறப்பித்தார்.

"முதலில் ஓர் ஆட்டின் தலை...இரண்டாவது ஓர் புலியின் தலை...மூன்றாவது ஒரு மனிதனின் தலை... இந்த மூன்று தலைகளையும் நீ எங்கிருந்தாவது கொண்டு வா'' என்று அரசர் கூறினார்.

அமைச்சர் அதற்கு இசைந்து உடனே புறப்பட்டார்.

அவருக்கு ஆட்டுத்தலை உடனே கிடைத்தது. சிறிது நேரமும் செல்ல சிரமப்பட்டு காட்டிலிருந்து ஒரு புலித்தலையையும் சேகரித்தார். அவர் அதன்பின்னர் ஒரு சுடுகாட்டிற்குப் போய் ஒரு மனிதத் தலையையும் சேகரித்தார். "அரசே! உங்கள் ஆணைப்படி மூன்று தலைகளையும் கொண்டு வந்திருக்கிறேன்!'' என்றார். அவற்றைப் பார்த்த அசோக மன்னர் "மிகவும் நல்லது. இப்போது இந்த மூன்று தலைகளையும் எடுத்துக் கொண்டு சந்தையில் விற்றுவிட்டு வாருங்கள் என்று கூறினார். அமைச்சர் மூன்று தலைகளையும் எடுத்துக்கொண்டு சந்தைக்குச் சென்றார். சந்தையில் ஆட்டுத்தலையைத் வாங்குவதற்குப் பலர் முன்வந்தனர். உடனே அது விற்றுவிட்டது. அடுத்தபடியாக புலித்தலையை ஒருவர் வாங்கிக் கொண்டார். அந்தச் சந்தையில் மனிதத் தலையை மட்டும் வாங்குவதற்கு யாரும் முன்வரவில்லை. அதை எல்லோரும் பார்த்து விட்டு விலகிச் சென்றார்கள்.

அமைச்சர் அரசரிடம் திரும்பிவந்து "அரசே! இந்தத்தலையை மட்டும் யாரும் வாங்கமாட்டேன் என்கிறார்கள்'' என்றார்.

அதைக்கேட்ட அரசர் சரி பரவாயில்லை. அதை இனாமாகவே கொடுத்துவிடுங்கள் என்றார்.

அமைச்சர் மறுபடியும் சந்தைக்குச் சென்று இலவசமாகத் தருகிறேன்... இதை வாங்கிக் கொள்ளுங்கள்... என்றார்.

அப்போது அதை யாரும் வாங்குவதற்கு முன்வரவில்லை எனக்கு வேண்டாம்! என்று சொல்லி எல்லோருமே முகத்தை திருப்பிக் கொண்டு சென்றார்கள்.

அமைச்சர் மறுபடியும் அரண்மனைக்கு திரும்பி வந்து மன்னனிடம் கூறினார்.

அப்போது அசோகச்சக்கரவர்த்தி சொன்னார். அமைச்சரே உயிர் இருக்கும் வரையில்தான் இந்தத் தலைக்கு மதிப்பு .உயிர் பிரிந்த பின்னர் அதன் மதிப்பும் போய் விடுகிறது. அதனால் மதிப்பு இருக்கும் போதே பெரியவர்கள் பாதம் பணிந்து அவர் புனிதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். என்றார்.பணிவு என்பது வேறு... அடிமைத் தனம் என்பது வேறு... பெரியவர்களைப் பணிந்து நமக்குப் பெருமை தரக்கூடிய ஒரு விடயமாகும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தே.க.கல்லூரிக்கான தெரிவில் புறக்கணிக்கப்பட்டுள்ளோம்

## பாதிக்கப்பட்டவர்கள் அமைச்சர் டக்ளஸ்க்கு கடிதம்

கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சி திறமைச் சித்தி பெறுபேறு இன்மையால் கல்வியியற் கல்லூரியின் அனுமதியில் புறக்கணிக்கப்பட்டதாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் இது தொடர்பாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவிற்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். அக்கடிதத்தில் அவர்கள் தெரிவித்திருப்பதாவது,

நாங்கள் கடந்த 2011 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியிருந்தோம். இப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையிலேயே கல்வியியற் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பித்திருந்தோம். ஆனால், க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் C (திறமைச் சித்தி) பெறுபேறு இல்லாமையால் நேர்முகத் தேர்வில் நாம் நிராகரிக்கப்பட்டுள்ளோம்.

இவ்விடயம் தொடர்பாக சாதாரண தரம் பயின்ற வேளையோ, உயர் தரம் பயின்ற வேளையோ, பரீட்சை எழுதிய பின்போ இது தொடர்பாக எமக்கு எதுவும் அறிவுறுத்தப்படவில்லை. அறிவுறுத்தப்பட்டிருந்தால் நாம் மாற்று ஏற்பாடுகள் செய்திருப்போம்.

எனவே, யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரியிலோ ஏனைய கல்வியியற் கல்லூரிகளிலோ இவ் வருடம் தமிழ் மாணவர்கள் தெரிவு வீழ்ச் சியடைந்துள்ளது. எனவே இது தொடர்பாக உரியவர்களுடன் தொடர்பு கொண்டு எம்மை கல்வியியற் கல்லூரியில் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

க.பொ.த உயர்தரம் பயில்வதற்கு க.பொ.த சாதாரண தர பரீட்சையில் 3C, 3S போதுமானது. எனினும் அறிவுறுத்தலின் காரணமாக நாம் ஏனைய பாடங்களில் கவனத்தை செலுத்தவில்லை என்பதை வேதனையுடன் சுட்டிக்காட்டுகின்றோம்.

நாம் கல்வியியற் கல்லூரிக்கு தெரிவு செய்யும் பட்சத்தில் க.பொ.த சாதாரண தர தகைமையை இந்த வருடத்திலோ அல்லது அடுத்த வருடத்திலோ உறுதி செய்வோமென தெரிவித்துக் கொள்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# வடமாகாணத்தின் கல்வி நிலை 10.5 வீதத்தால் உயர்வடைந்துள்ளது- வட மாகாண ஆளுநர்

ஏனைய மாகாணங்களை விட வடக்கு மாகாணம் கல்வியில் சராசரியாக 10.5 சதவீதம் உயர்வடைந்து வருகின்றது என வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு நடைபெற்ற பரீட்சைகளில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள், அவர்களை வழி நடத்திய ஆசிரியர்கள், கல்வி கற்ற பாடசாலையின் அதிபர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டின் அபிவிருத்திற்கு பெரிய தடையாகவிருந்த பயங்கரவாதம் அழிக்கப்பட்ட பின்பு சகல துறைகளும் முன்னேற்றம் கண்டு வருகின்றன. குறிப்பாக வடக்கு மாகாண கல்வித்துறையானது தற்போது வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்றது.

கடந்த வருடம் இடம் பெற்ற க.பொ.த சாதாரண தரம்,க.பொ.த உயர் தரம் ஆகிய பரீட்சைகளில் எமது மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் உயர் பெறுபேறுகளைப் பெற்றதனால் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் 10.5 வீதம் சராசரியாக வடமாகாண கல்வி நிலை உயர்வடைந்து வருவதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன எனக்கு தெரிவித்தார். இச் செய்தியையிட்டு இங்குள்ள ஆசிரியர்கள்,அதிபர்கள்,மாணவர்கள் பெருமையடைய வேண்டும். மேலும் வடக்கிலுள்ள 91 இரண்டாம் நிலைப்பாடசாலைகள் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 24 பாடசாலைகளுக்கு ஆய்வுகூட வசதிகள் விரைவில் செய்து கொடுக்கப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 70 | 80-120 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 120 | 120 |
| தக்காளி | 100 | 80 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 | 40 |
| கோவா | 80 | 110 | 100 | 120 |
| கரட் | 100 | 160 | 120 | 120 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 30 | 30 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 200 | 150-160 | 140-200 | 120-200 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | -- | 100 |
| பயற்றங்காய் | 60 | 80 | 60 | 60 |
| லீக்ஸ் | 140 | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 70 | 70 | 100 | 120 |
| கறிமிளகாய் | -- | 140 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 400 | 400 |
| போஞ்சி | 160 | 120 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 160 | 70 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 35 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 140 | 120 | 100 |

# இராசி பலன்

12.06.2013
(வைகாசி 29, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 4.48 மணிவரை
பூசம் முழுவதும்
இராகுகாலம் 11.52-1.22 மணிவரை
சுபநேரம் 4.22-5.52 மணிவரை
நமிநந்தியடிகள், சேக்கிழார் குருபூசை
சதுர்த்தி விரதம்

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்விக்காக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு.

**இடபம்** உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, உடன் பிறப்புகள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவங்கள் நடைபெறலாம், தொழில் நன்மையுண்டு, தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள்.

**மிதுனம்** தொழிலில் உயர் அதிகாரிகளின் ஆறுதலைப் பெறுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், நாவன்மையால் நற்பெயர் கிடைக்கும்.

**கடகம்** பயணங்களால் பலன் கிடைக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், விருப்பங்களை நிறைவேற்ற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**சிங்கம்** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள், சயன சுகக் குறைவான நாள், திடீர் பயணமொன்று உருவாகலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும்.

**கன்னி** யோகமான நாள், இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், விரதங்களில் நம்பிக்கை கூடும், போசன நன்மையுண்டு.

**துலாம்** செய்தொழிலுக்கு அதிக பிரயாசை காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படும் நாள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, காரியங்கள் கைகூட கணபதியை வழிபட வேண்டிய நாள், தொலைபேசி மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு** எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செயற்பட வேண்டிய நாள், கௌரவக் குறைவான சில சம்பவங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம்.

**மகரம்** எடுத்த காரியங்கள் கைகூடும், புதிய பொருட்கள் வாங்குவதற்கான வாய்ப்புண்டு, நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், வாய்த்த நண்பர்களால் வளர்ச்சி கூடும்.

**கும்பம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடைவீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**மீனம்** தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்கள் இன்று கைகூடும், பிள்ளைகளால் பெருமை காண்பீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறை வயோதிபப் பெண் கொலை தொடர்பில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில்நடைபெற்றவயோதிபப் பெண்ணின் படுகொலை தொடர்பில் தாம் சந் தேகத்தின் பேரில் இருவரை கைதுசெய்துள்ள தாகவல்வெட்டித்துறைபொலிஸார்தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும் படுகொலை செய்யப்பட்ட வயோதிபப் பெண் மணியின் உறவினர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை ஊரணி பிரதேசத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தாயாரான திருமதி சோதிலிங்கம் தெய்வமலர் (வயது 64) என்பவர் நேற்று முன்தினம் படு கொலை செய்யப்பட்டிருந்தார்.





குறித்த வயோதிபப் பெண்மணியின் ஏழு பிள்ளைகளும் திருமணம் முடித்து வெவ் வேறு இடங்களில் வாழ்ந்து வரும் நிலையில் இவர்தனிமையில் இருந்தபோதே இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இக் கொலைச்சம்பவம் இடம்பெற்ற இடத் திற்கு சென்ற வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்ததோடு தடயப் பொருட்களையும் ஆராய்ந்தனர்.

இந்நிலையில் குறித்த கொலை சம்பவத்தின் சந்தேகத்தின் பேரில் கொலையுண்ட வயோதிபப் பெண்மணியின் உறவினர்கள் இருவர் வல்வெட் டித்துறை பொலிஸாரினால் நேற்று முன் தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் குறித்த வயோதிபப் பெண்மணி அணி ந்திருந்த சில தங்க ஆபரணங்களை காண வில்லை என உறவினர்களால் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என வும் அவர்கள் தெரிவித்தனர். (அ-3-4-24-60)




நன்றி: ஐலண்ட்


கல்வியாண்டு 2013
விண்ணப்பம் கோரல்

(CIMA) CHARTERED INSTITUTE OF MANAGEMENT ACCOUNTANTS – U.K இன் கற்கை நெறியை யாழ் நகரில் K-AIMS கல்வி நிறுவனத்தினூடாக மேற்கொள்வதற்னகான விண்ணப்பம் கோரப்படுகிறது.

CIMA கற்கை நெறியானது ஐந்து நிலைகளைக் கொண்டது.
1. Certificate Level
2. Operational Level
3. Management Level
4. Strategic Level
5. Top CIMA

*O/L, A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் **Certificate** நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்.
* AAT பூர்த்தி செய்த மாணவர்கள் Operational நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்.

**Operational** மற்றும் **Management Levels** ற்கான விண்ணப்ப முடிவுத்திகதி **21st June 2013**

விசேட புலமைப்பரிசில்கள் கீழ்க்காணும் பிரிவினருக்கு வழங்கப்படும்.

* உயர்தரத்தில் அதிவிசேட சித்திகள். (கணிதம், விஞ்ஞானம், கலை மற்றும் வர்த்தகப்பிரிவு)
* யாழ் பல்கலைக்கழக மாணவர்கள்
* HNDA மாணவர்கள்

மேலதிக தகவல்களுக்கும், விசாரணைகளுக்கும், பதிவுகளுக்கும்
**077 372 2104**
**021 221 9422**

**Colombo**
No 35-1/2, Upatissa Road
Colombo 04

**JAFFNA**
No 3-1/2, Sirambiyadi Lane
[ Off stanley Road]
JAFFNA

பரிந்துரைகளுக்கும், முறைப்பாடுகளுக்கும். **0772 555 814**

(சி-3589)


# தீவக கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

யாழ்.அனலைதீவு சதாசிவம் மகா வித்தி யாலயத்தில் காணப்படும் அதிபர் பதவி வெற் றிடத்தை நிரவுவதற்கான விண்ணப்பங்கள் தகுதியுள்ள அதிபர்களிடமிருந்து கோரப்பட்டுள்ள தாக வேலணை தீவக வலயக் கல்விப் பணிப் பாளர் ரி.ஜோன் குயின்ரன்ஸ் அறிவித்துள்ளார்.

ஆயிரம் பாடசாலைத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும் தீவக கல்வி வலயத்தின் 1 சி தர பாடசாலையான மேற்படி வித்தியாலயத்தின் அதிபர் வெற்றிடத் திற்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1,2-I ஐச் சேர்ந்த அதிபர்கள் விண்ணப்பிக்க முடி யும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1,2-I ஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பங்களில் தீவக கல்விவலயத்திற்குட்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1, இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-I இனைச் சேர்ந்த பட்டதாரிகள், இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-II ஐச் சேர்ந்த பயிற்றப்பட்ட பட்டதாரிகளின் விண் ணப்பங்களும் கவனத்திற் கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறித்த வகுதிகளை சேர்ந்த ஆசிரியர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் அடுத்த தரத்தி லுள்ள ஆசிரியர்களின் விண்ணப்பங் கள் பரிசி லிக்கப்படும் எனவும் மேற்படி பதவி வெற்றி டத்திற்கான விண்ணப்பங்களை தீவக கல்வி அலுவலகத்தில் பெற்று பூர்த்திசெய்து எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தீவக கல்வி அலுவ லக த்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ-5)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் 177 ஆவது ஆண்டு நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன் கிழமை முற்பகல் 9 மணிக்கு அழகட்ரட்ணம் மண்டபத்தில் பாடசாலை அதிபர் த.மாதவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற் கைகள் பீட பேராசிரிசியர் க.தேவராஜா, சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய பிர திக் கல்விப்பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.சிவானந்தராஜா, யா/ மானிப்பாய் மெதடி ஸ்த ஆரம்ப பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் ச.சிவகடாட்சம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக சமூக சேவையாளர் க.பற்குண ராஜாவும் பங்கு கொள்ளவுள்ளனர். (அ-5)

# பளு தூக்கும் போட்டியில் தங்கம் வென்று சாதனை

வடமாகாணங்களுக்கு இடையில் பெண் களுக்கான பளு தூக்கும் போட்டியில் மகா ஜனாக் கல்லூரியின் மாணவி தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

மகாஜனாக் கல்லூரியின் மாணவியான வி.சுசந்திகா என்ற மாணவியே 48 கிலோ எடைப்பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

இப்போட்டியானது வெளிவாரியாக நடை பெற்றது என்பதோடு போட்டிகள் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றன என்பதும் குறிப் பிடத்தக்கது. (அ-3-6-23)

# விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு செயலமர்வு

தொண்டைமானாறு வெளிக்கள நிலை யத்தினரால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பரீட் சைக்கு தோற்றவுள்ள க.பொ.த விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான செயலமர்வு நாளை வியாழக்கிழமை முதல் தொடர்ந்து இரு தின ங்கள் காலை 8.30 மணிக்கு வேம்படி மக ளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிமனை அறிவித்துள்ளது.

இதற்கமைய நாளை வியாழக்கிழமை உயிரியல், மறுநாள் வெள்ளிக்கிழமை இர சாயனவியல், 17-ம் திகதி திங்கட்கிழமை பௌதிக வியல் ஆகிய பாடங்களின் செயலமர்வுகள் நடை பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)




ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கும் நிகழ்வும் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாணவர்களுக்கு புலமைப்பரிசிலை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.ஆர்.கரன் ,என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கு ஜனாதிபதி துணை போகின்றார்

## கூட்டமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு

**ஜாதிக் ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகியவற்றின் கோரிக்கைகளுக்கிணங்க 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தை ஒழிப்பதற்கு அல்லது அர்த்தமற்றதாக, பெறுமதியற்றதாக செய்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயல்வது மிகவும் ஆச்சரியத்துக்குரிய நடவடிக்கையாகும். இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த முயற்சியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கைவிட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளதாக இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

13 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்து என்னவென ஊடகமொன்று வினவியபோதே கூட்டமைப்பின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குமாறு தேசிய சுதந்திர முன்னணி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளைத் தவிர வேறெந்த கட்சிகளும் கோரிக்கை விடுக்கவில்லை.

இந்தக் கட்சியினருக்கு உதவியாக ஜனாதிபதி செயற்படுவது வேடிக்கையான விடயமாகும். இந்த நடவடிக்கையை ஒருபோதும் ஏற்க முடியாது. இந்த முயற்சியைக் கைவிடுவது நாட்டுக்கும் நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் நன்மையான முடிவாக அமையும்.

உலகில் பல்வேறு நாடுகளில் வெவ்வேறுபட்ட இன மக்கள் வாழும் பகுதிகளில் இவ்வாறான ஆட்சிமுறை நிலவி வருகின்றது. நாகரிகமான முறையில் இத்தகைய ஆட்சிமுறை அமுல்படுத்தப்படுகின்றது. இனங்களிடையே அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் வகையில் அரசியல் சாசனம் அமைந்திருக்க வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ கடந்த 2006 ஆம் ஆண்டு சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவை நியமித்தார். அதற்கு உதவுவதற்காக இனங்களை சார்ந்த நிபுணர்குழுவொன்றை நியமித்திருந்தார். இந்த நிபுணர் குழுவை நியமித்த ஜனாதிபதி பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தம் முதல் மேற்கொள்ளப்பட்ட அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை ஆராய்ந்து பார்க்கும்படியும் பல்வேறு நாடுகளில் எந்தவிதமான அரசியல் தீர்வுகள் காணப்பட்டுள்ளன என்பது குறித்து ஆராயுமாறும் இந்தியாவின் தீர்வு முறையையும் ஆராய்ந்து அதன்பின் உரிய சிபாரிசைச் செய்யுமாறும் அந்தக் குழுவிடம் கோரியிருந்தார்.

இந்த நிபுணர் குழு பல இன மக்கள் வாழும் நாட்டில் ஒரு இனம் பெரும்பான்மையாக வாழும் பகுதிக்கான அரசியல் தீர்வு சம்பந்தமாக தெளிவான அறிக்கையை வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கையில் பல்வேறு இனங்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் அதற்கான அடிப்படையான பல விடயங்கள் தொடர்பிலும் சிபார்சுகள் செய்திருந்தது.

இந்த நோக்கத்தில்தான் 13 ஆவது அரசியல் அமைப்பு சாசனமும் உருவாக்கப்பட்டது. அரசியல் தீர்வுக்கு இது ஒரு ஆரம்ப முயற்சியாகவே அமைந்தது. அதற்குப் பின்னர் 13 ஆவது அரசியல் அமைப்பு சட்டத்தை திருத்தி அமைத்து அதிகாரங்களை அதிகரிக்கும் வகையில் ஜனாதிபதி பிரேமதாசவின் காலத்தில் மங்கள முனசிங்க தலைமையில் பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டது. அதன் அறிக்கையும் தற்போது உள்ளது.

இதேபோல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் காலத்தில் 1995,1997, 2000 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அவரால் இந்த விடயம் தொடர்பில் பல்வேறு பிரேரணைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இவ்விதம் நடைபெற்றிருந்தது. இதனை நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன்.

13 ஆவது அரசியல் அமைப்பு சாசனம் உருவாக்கப்பட்ட பின்னர் பதவி வகித்த ஒவ்வொரு ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்திலும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை திருத்தி அமைத்து அதிகாரத்தை கூட்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

சமீபகாலத்தில் விசேடமாக யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் என்றும் அர்த்தபுஷ்டியான அதிகாரப்பகிர்வை கட்டியெழுப்புவேன் என்றும் பகிரங்கமாக வாக்குறுதி அளித்திருந்தார். இந்த வாக்குறுதியை இந்தியாவிற்கு மட்டுமல்ல சர்வதேச சமூகத்திற்கும் ஐ.நாவிற்கும் அளித்திருந்தார்.

இந்த வாக்குறுதிகளை எல்லாம் மீறி ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகளின் கருத்துக்களின் நிமித்தம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிப்பதற்கு அல்லது பெறுமதியற்றதாக்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சி எடுப்பது மிகவும் ஆச்சரியமளிக்கும் நடவடிக்கையாகும். இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்கும் நிலைப்பாட்டை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கருத்தாகவோ, அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சிகளின் கருத்தாகவோ, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கருத்தாகவோ, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கருத்தாகவோ, ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்தாகவோ நாம் கருதவில்லை. எனவே, இந்த விடயம் தொடர்பில் தங்களது பங்காளிக் கட்சிகளுக்குள் அலசிப் பார்த்திருந்தால் இத்தகைய நிலைப்பாடு ஏற்பட்டிருக்கமாட்டாது

வெறுமனே ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகளின் கருத்தாகவே 13 ஆவது திருத்த சட்ட ஒழிப்பு அமைய முடியும். இவர்களுக்கு உதவியாக ஜனாதிபதி செயற்படுவது வேடிக்கையான விடயமாகும். இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, 13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்கும் முயற்சியை ஜனாதிபதி கைவிட வேண்டும். இந்த முயற்சியைக் கைவிடுவது என்பது நாட்டுக்கு மட்டுமல்ல நாட்டிலுள்ள சகல இன மக்களுக்கும் சிறந்த முடிவாக அமையும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கமாக அளித்த வாக்குறுதிகளுக்கு அமைய சகல மக்களும் ஏற்கும் வகையில் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு நேர்மையாகவும் விசுவாசமாகவும் செயற்பட வேண்டும். அத்தகைய முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு தயாராக இருக்கின்றது என்பதை பகிரங்கமாக இந்த வேளையில் கூறி வைக்க நாம் விரும்புகின்றோம். (அ-2)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>உயரம்: 5'11" 9ல் சூ,செவ்<br>தகைமை/தொழில: A/L<br>வியாபாரம் கடை<br>தொ.இ:B1974 | பிறப்பு: 1979 இந்து(செட்டி)<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5'11", 12ல் செவ்<br>தகைமை/தொழில்: B.E,IT Manager<br>சைவபோசனம், விவாகரத்தானவர்<br>தொ.இ:B1983 |
| பிறப்பு:1981இந்து(விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>கிராமசேவகர்<br>தொ.இ:B1980 | பிறப்பு: 1980 இந்து(குருகுலம்)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா : 24<br>உயரம்: 6'4", 2ல் செவ்<br>தகைமை/தொழில்:மீன்பிடியியல் துறை, பட்டதாரி ஆசிரியர்<br>தொ.இ:B1985 |
| பிறப்பு: 1988 இந்து(V)<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா : 43<br>உயரம்: 5'2" ,12ல் செவ்<br>தகைமை/தொழில்:A/L<br>Auto Electrician, அரச வேலை<br>தொ.இ:B1981 | பிறப்பு:, 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா : 6.5<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L, முகாமையாளர<br>UK Citizen<br>தொ.இ:B1986 |
| பிறப்பு: 1979 இந்து(குருகுலம்)<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>உயரம்: 5'8" ,8ல் சூ,செவ்<br>தகைமை/தொழில்: BBA, MBA<br>கணக்காளர், பயிலுநர்<br>தொ.இ:B1982 | பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா : 45<br>உயரம்: 170 செ.மீ<br>7ல் செவ்<br>தகைமை/தொழில்:விவசாய போதனாசிரியர்<br>தொ.இ:B1987 |

சகல தொடர்புகளுக்கும்:-

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி





ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்

இன்று கொடியேற்றம்

அருள்தாராய் கணபதியே

நீராவியடி உறையும் வீரகத்தி விநாயகரே!
நின்மலர்த் தாள்பணிந்தோம் இன்னருள் புரிந்திடுவாய்!
சீரான வாழ்வுவேண்டி எம் சிந்தை மகிழ்ந்திடவே
சிறப்பான இன்றுனக்குக் கொடியேற்றி விழாவெடுத்து
ஊரார்கள் ஒன்றுகூடி உன்னருட் காட்சி கண்டே
உன்னதமாய் நாம் வாழ அடிகோலி நிற்கின்றோம்!
வாராய் எலிவாகனத்தில் அருள்தாராய் கணபதியே
வணங்கியே துதிக்கின்றோம் திருவடி சரணம்! சரணம்!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஷ்ட, அதிகஷ்ட பிரதேச கொடுப்பனவு 20ஆம் திகதி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள 61 பாடசாலைகளில் இருந்து 54 பாடசாலைகள் கஷ்டப் பிரதேசம் மற்றும் அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளாக தெரிவாகியுள்ளனவெனவும் இதன்மூலம் சுமார் 400 இற்கு மேற்பட்ட அதிபர், ஆசிரியர்கள் பயனடையவுள்ளனரெனவும் மேற்படி பிரதேசங்களில் இவர்களுக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் 20ஆம் திகதி சம்பளப் பணத்துடன் வழங்கப்படவுள்ளதெனவும் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள 61 பாடசாலைகளில் இருந்து அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளாக 46 பாடசாலைகளும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளாக 8 பாடசாலைகளும் தெரிவாகியுள்ளன.

வெளிமாவட்டங்களில் இருந்து வருகைதரும் அதிபர், ஆசிரியர்கள் உட்பட இங்கு கடமையாற்றும் 400 இற்கு மேற்பட்ட அதிபர், ஆசிரியர்களுக்கு கஷ்டப் பிரதேச ஊக்குவிப்பு படியாக ஆயிரத்து 500 ரூபாவும் அதிகஷ்ட பிரதேச ஊக்குவிப்பு படியாக 2 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவுகள் போருக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த நிலையில் இடைநிறுத்தப்பட்டு தற்போது மீண்டும்தொடரப்படவுள்ளதால்வெளி மாவட்டங்களில் இருந்து வருகைதரும் ஆசிரியர்கள் பெரிதும் நன்மையடையவுள்ளனரெனவும்அவர்மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# புதூர் நாகதம்பிரான் திருவிழாவில் பல இலட்சம் ரூபா பணம் பறிபோனது

(மல்லாவி)

வரலாற்று புகழ்மிக்க புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய திருவிழாவின் போது அர்ச்சனை பணமும் ஆலய வளர்ச்சிக்காக சேகரிக்கப்பட்ட பணமும் பைகளுடன் மாயமாக மறைந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவரு வது, இலட்சக்கணக்கான பக்தர்கள் திரண்டிருந்த ஆலய திருவிழாவில் நாகதம்பிரானுக்கு அர்ச்சனை பொருட்களை விற்பனை செய்து கொண்டும் ஆலய வளர்ச்சிக்குரிய நிதி அன்பளிப்புக்களை பெற்றுக் கொண்டும் பையொன்றினுள் பணத்தை வைத்துக் கொண்டு ஆலய அறங்காவல் சபை உறுப்பினர்கள் வந்துள்ளனர்.

திடீரென பணப்பை மாயமாக மறைந்துள்ளது.

இப்பையயினுள் பல இலட்சம் ரூபாய்கள் இருந்ததாக தெரியவருவதுடன் இத்திருட்டு தொடர்பாக ஆலய ஒலி பெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு திருடர்களை பிடிக்க முயன்ற போதும் அது முடியவில்லை.இதே போன்று பல அடியவர்களின் தங்க நகைகளும் திருட்டு போயுள்ளன.

கோயில் திருவிழாவில் கடமையில் இருந்த புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-15)

# வேலை பெற்றுத் தருவதாக கூறி பாரிய பண மோசடி

## நடு வீதியில் இளைஞர்கள் அந்தரிப்பு

**வெளிநாடுகளில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறியவரை நம்பிய நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் ஏமாற்றமடைந்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.**

வேலை கிடைக்கும், வெளிநாட்டிற்குச் செல்லலாம், விசா கிடைக் கும் என்ற ஆவலோடு சென்ற வட பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் வவுனியா நகர வீதிகளில் கைவிடப்பட்ட நிலையில் இருந்தனர்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றுள்ளது.

புருணை நாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத் தரலாம் எனக் கூறிய வேலைவாய்ப்பு முகவர் ஒருவரை நம்பி மூன்று மாதங்களுக்கு முன்னர் 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணத்தைக் கட்டியதாக அவ் இளைஞர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

கடந்த திங்களன்று விசா தருவதாக கூறி நேர்முகப் பரீட்சைக்குத் வருமாறு வவுனியா ஈரப்பெரிய குளத்தில் உள்ள விருந்தினர் விடுதியொன்றுக்கு எங்களை அழைத்திருந்தார்கள். காலையிலேயே அங்கு சென்று காத்திருந்தோம். வருவதாகக் கூறியவர்கள் வரவே இல்லை. மதியத்தின்பின்னர் அவர்கள் தொலைபேசிகளையும் துண்டித்து விட்டார்கள். அவர்களுடன் தொடர்புகொள்ள முடியவில்லை. நாங்கள் பணம் செலுத்திய மதவாச்சி நகரில் உள்ள அலுவலகத்திற்குச் சென்று விசாரித்த போதிலும் சரியான பதில் எங்களுக்குக் கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்ட இளைஞர்கள் தெரிவித்தனர்.

ஜயசிங்க என்பவர் தான் விமானப்படையில் பணியாற்று வதாகவும் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகவும் தெரிவித்தார்.

ஆனால் அவர் சொன்னபடி எதுவும் நடக்கவில்லை என்றும் அவர்கள் புலம்புகின்றனர்.

காலை எட்டு மணிக்கெல்லாம் ஈரப்பெரியகுளத்திற்கு வாருங்கள் விசா பெற்று தருவோம் என்றார்கள். அங்கு போய் காத்திருந்ததுதான் மிச்சம். ஒருவருமே வரவில்லை. அங்குள்ள விடுதி ஒன்றில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகக் கூறினார்கள்.

அங்கு எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. ஏமாற்றத்தோடு திரும்பிய நாங்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்ற போது அவர்கள் மதவாச்சியில் பணம் கட்டியமையால் அந்த மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் சென்று முறையிடுமாறு கூறி அனுப்பி விட்டார்கள்.

இனி என்ன செய்வது என்று தெரியாது நடு வீதியில் நிற்கின்றோம் என்று அவர்கள் கவலை வெளியிட் டனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைதீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 150 பேர் இவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகப் பணம் செலுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் முடிந்த பிறகும் வடக்குப் பகுதிகளில் வேலைவாய்ப்புக்கள் பெரிதாக உருவாகவில்லை. இதன் காரணமாகவும் அங்கேயிருக்கும் பல்வேறுநெருக்கடிகள்காரணமாகவும்பலர் இலங்கையில் இருந்து வெளியேற முற்படுகின்றனர். (அ-3-250)




## கணுக்கேணி மேற்கில்

# கிராம அபிவிருத்தி சங்கத்தின் நிர்வாக தெரிவு இடம்பெறவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள கணுக்கேணி மேற்கில் கிராம அபிவிருத்தி சங்கத்தின் நடப்பாண்டிற்கான நிர்வாகத் தெரிவு இடம் பெறவில்லைஎன அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மேற்படி கிராமத்தில் 250 குடும்பங்களுக்கு மேற்பட்டோர் வாழ்ந்துவரும் நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் புதிய நிர்வாக தெரிவு இடம் பெற்றபின் இன்னமும் நிர் வாகத் தெரிவு இடம்பெறவில்லை.

இக்கிராமத்தில் நிரந்தரவீடுகள் முன்பள்ளிபொதுநோக்குமண்டபம், மண்டபத்திற்கான காணி என் பன இல்லை.

இவற்றை நிவர்த்தி செய்வதென்றால் நிர்வாகத் தெரிவு இடம் பெறுவதன் மூலம் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கமுடியும் .

அத்துடன் அக்கிராமத்தில் உள்ள வீதிகளும்புனரமைக்கப்படவில்லை.

இவற்றை உரிய தரப்புக்களுக்கு எடுத்துரைப்பதற்கு இளம் நிர் வாகிகள் தெரிவு செய்யப்பட வேண்டியதுஅவசியமாகும்.

எனவே உடனடியாக இளம் சமூகத்தினரை புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்து உதவு மாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

# தனியார் கட்டடத்திலிருந்து இராணுவத்தினர் வெளியேறினர்

கடந்த மூன்றாண்டு காலமாக படைத்தரப்பு முகாமாக இயங்கி வந்த பூநகரி ப.நோ.கூ.சங்கத்தின் கட்டடத் தொகுதியையும் அரிசியாலையையும் தனியாருக்கு சொந்தமான பத்து வரையான வீடுகளையும் விட்டு படையினர் வெளியேறியுள்ளனர்.

சென்ற வாரம் முதல் அம்முகாமில் இருந்த பொருட்கள், தளபாடங்கள் என்பவை ஏற்றிச் செல்லப்பட்டன.

பூநகரிநகரப்பகுதியில்நாகதேவன் துறை வீதியில் கடந்த மூன்றாண்டு காலமாக இயங்கி வந்த படை முகாமில் இருந்து கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் இராணுவத்தினர் படிப்படியாக வெளியேறியுள்ளனர்.

குறித்த படைமுகாம் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுக் சங்கத்தின் இருகட்டடங்களிலும் பத்துக்கு மேற்பட்ட தனியார் வீடுகளிலும் இய ங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

முகாம் பொருட்கள் அகற்றப்பட்டமையை அடுத்து தமது வீடுகளை மீண்டும் திருத்தும் பணிகளில் உரிமையாளர்கள் ஈடுபட்டுள்ளமையை காணமுடிகிறது. (அ-2- 84)

## 375 மாணவர்களுக்கு

# ஒரு வாரத்துக்குள் தேசிய அடையாள அட்டை

முல்லை கல்வி வலயத்தின் முன்மாதிரிகையான செயற்பாடு காரணமாக நடப்பாண்டில் க.பொ.த. சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர் தரத்தில் பரீட்சை எழுதவுள்ள 375 மாணவர்களுக்கு ஒரு வாரத்திற்குள் தேசிய ஆள் அடையாள அட்டை பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் முல்லை வலயக்கல்வி பணிப்பாளர் மாணிக்கவாசகர் ராஜகுமாரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, எமது கல்வி வலயத்தின் கீழுள்ள கரைதுறைப்பற்று கல்வி கோட்டத்தின் கீழ் 19 பாடசாலைகளிலும் புதுக்குடியிருப்பு கல்வி கோட்டத்தின் கீழ் 17 பாடசாலைகளிலுமாக மொத்தம் 36 பாடசாலைகளில் இருந்து நடப்பாண்டில் க.பொ.த சாதாரணதரம் மற்றும் க.பொ.த. உயர்தரத்தில் பரீட்சைக்கு தோற்ற மாணவர்களுக்கு இம்முறை தேசிய ஆள் அடையாள அட்டை கட்டாயம் என அறிவிக்கப்பட்டுள்ளதால் அதனை விரைவாக பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

வலயக்கல்வி திணைக்கள கல்வி அதிகாரிகளை பயன்படுத்தி 36 பாடசாலைகளுக்கும் நேரில் சென்று விண்ணப்பப்படிவங்களை மாணவர்களிடம் வழங்கி விபரங்களை திரட்டினோம்.

இதன்மூலம் 375 மாணவர்களின் விபரங்கள் பூரணப்படுத்தப்பட்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆட்பதிவு திணைக்களத்தில் இருந்து நேரடியாக அழைக்கப்பட்டிருந்த அதிகாரிகளிடம் கையளித்துள்ளோம்.இன்னும் சில மாண வர்களுக்கு போதிய ஆவணங்கள் இல்லாது இருப்பதால் அவற்றை பூர ணப்படுத்தி எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை ஒப்படைக்கவுள்ளோம்.

முன்னர் இந்நடவடிக்கை பாடசாலைகளின் அதிபர்களினூடாக நடைபெற்றதால் காலதாமதங்கள் ஏற்பட்டதன் காரணமாக தேசிய ஆள் அடையாள அட்டை கிடைப்பதில் சிரமங்கள் ஏற்பட்டதாகவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# உடற்பயிற்சி போட்டியில் இரண்டாமிடம்

(குருமன்காடு)

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயது பிரிவு மாணவர் அணிகளுக்கிடையிலான உடற்பயிற்சி போட்டியில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தினை பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாடங்கில் நேற்று இவ் உடற்பயிற்சி போட்டி நடைபெற்றது.

இப்போட்டியில் மானிப்பாய் இந்து கல்லூரி முதலாம் இடத்தையும் வேம்படி மகளிர் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-3-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போசாக்கு உணவு பொதிகளை இராணுவத்தினர் வழங்கினர்



இலங்கை இராணுவத்தின் சமூக நலன்புரித் திட்டங்களை விரிவுபடுத்தும் முகமாக மருதங்கேணி அரச வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான போசாக்கு உணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வை கட்டைக்காடு பிரதேசத்தில் அமைந்துள்ள இராணுவத்தின் 55 ஆவது படைப் பிரிவினர் ஏற்பாடு செய்ததுடன், இத் திட்டத்திற்கு கொழும்பு டெல்மகே சந்தைப் படுத்தல் நிறுவனம் நிதியுதவி வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது 1.1 மில்லியன் ரூபாய் பெறுமதியான யாழ்.சுகாதார பிரிவினால் பரிந்துரைக்கப்பட்ட 3 ஆயிரம் போசாக்கு உணவுப் பொதி கள் வழங்கப்பட்டன.

இதேவேளை கடந்த வாரம் இராணுவத்தின் 521 ஆம் படைப் பிரிவினால் பருத்தித்துறை, தும்பளை சிவப்பிரகாச பாடசாலையில் பல் மருத்துவ முகாமொன்றும் ஏற்பாடு செய்யப்படடிருந்தது.

இந் நிகழ்வு பாடசாலை மாணவர்களின் சுகாதார நலனை விருத்தி செய்யும் நோக்குடன் மந்திகை வைத்தியசாலை மற்றும் நடமாடும் பற்சிசிக்சை பிரிவு என்பவற்றின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது 378 மாணவர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் இனம் காணப்பட்ட 72 மாணவர்களுக்கு வைத்தியர்களால் தேவையான சிகிச்சைகளும் வழங்கப்பட்டன. (அ-2)

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் பதவியேற்பு நிகழ்வு 15 இல்

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகப் பதவியேற்பு நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு பருத்தியோலை, மயிலணி, சுன்னாகம் எனும் முகவரியிலமைந்த லயன்ஸ் சி.ஹரிகரனின் வாசஸ்தலத்தில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் த.தேவராஜன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ மற்றும் அவரது பாரியார் லயன் டில்கானி ரஞ்சித் பெர்னாண்டோ ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட நிர்வாகச் செயலாளர் லயன் ஆர்.ஜெயபாலன், மாவட்ட நிர்வாகப் பொருளாளர் ரி.அன்பானந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கழகத்தின் புதிய தலைவராக வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன், செயலாளராக லயன் சி. கஜன், பொருளாளராக தொழிலதிபர் லயன் சண்முகவேல் ஆகியோர் மேற்படி பதவிகளை ஏற்கவுள்ளனர்.

தொடர்ந்து புதிய தலைவர் லயன் சி. ஹரிகரன் தலைமையில் நடைபெறும் இரண்டாவது அமர்வில் உடுவில் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கடந்த ஆண்டு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி அதியுயர் பெறுபேறுகளை பெற்ற மாணவிகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும் 2012 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் உடுவில் கல்விக் கோட்டத்தில் சித்தியடைந்து குறித்த கல்விக் கோட்டப் பாடசாலைகளிலேயே சிரேஷ்ட கல்வியை தொடரும் 25 மாணவர்களும் லயன்ஸ்கழக மாவட்ட ஆளுநர் ரஞ்சித் பெர்னாண்டோவின் நிதியிலிருந்து ஒரு சிறு தொகைப் பணம் அன்பளிப்பாக வழங்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும் சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலய மேற்கத்தேய வாத்தியக் குழுவினருக்கும் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. (அ-5)

# ஹெரோயின் பாவித்த இராணுவ வீரனுக்கு தண்டம்

(கொழும்பு)

ஹெரோயின் பாவித்த கொண்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்ட இராணுவ வீரருக்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

குறித்த நபர் கம்பனி வீதியில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார். இவருக்கு எதிரான குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்த பொலிஸார் இவரை கைது செய்யும் போது அவரிடம் 20 மில்லிகிராம் ஹெரோயின் இருந்ததாகவும் குற்றஞ்சாட்டினார்.

இராணுவவீரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தனது தரப்பைச் சேர்ந்த பிரதிவாதி குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளதாகவும் தப்பான நண்பருடன் சேர்ந்தமையினால் அவர் இந்தக் குற்றத்தை இழைக்க நேர்ந்ததாகவும் குற்றங்களுக்காக அவர் மனம் வருந்துவதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனையடுத்து அரச செலவாக 10 ஆயிரம் ரூபாவை செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ-2)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு: 28.04.1938
இறப்பு:13.05.2013

அமரர் திருமதி பரமு பாலயோகம்

கடந்த 13.05.2013 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி அமரர் திருமதி பரமு பாலயோகம் அவர்களது மரணச் செய்தியறிந்து நேரில் வந்து அனுதாபம் தெரிவித்த உள்ளங்களுக்கும் தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள்,

இரங்கல் செய்திகள் மற்றும் ஸ்ரீஅம்மா பகவான் பக்தர்களுக்கும் பொது அமைப்புக்களின் நிர்வாகிகளுக்கும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்து கொண்ட அன்புள்ளங்களுக்கும் உணவுகள், சிற்றுண்டி வகைகள், வாகன உதவிகள் செய்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 10.06.2013 திருவடி நிலை புனித தீர்த்தக்கரை மண்டபத்தில் இடம்பெற்று வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று 12.06.2013 புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறவிருப்பதால் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்
0777651719, 021 7200524

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

(C-3586)



## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அமரர் திருமதி பரமு பாலயோகம்

பிறப்பு
28 - 04 - 1938



இறப்பு
13 - 05 - 2013

ஓம் சச்சிதானந்தப் பரம்பிரம்ம
புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீ பகவதி சமேத
ஸ்ரீ பகவதே நமஹ

சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகக் கெண்ட அமரர் திருமதி பரமு பாலயோகம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவையிட்டு காரைநகர் மத்தி சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரா தேவஸ்தானத்திற்கு அருகாமையில் இயங்கிவரும் காரை - மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தில் விசேட ஆத்ம சாந்திப் பிராத்தனை நிகழ்வும் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம் பெறவுள்ளதால் சகல முதியோர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

குடும்பத்தினர் சார்பாக
எஸ்.கே.சிவலிங்கம்
முன்னாள் காரை- மத்தி
ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்

(C-3585)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமேல் மாகாணசபை கலைக்கப்படவுள்ளது

(கொழும்பு)

வடமேல் மாகாணசபை எதிர்வரும் வாரமளவில் கலைக்கபடக் கூடிய சாத்தியம் இருப்பதாக ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரி வித்துள்ளார்.

வடமாகாணசபையுடன் சேர்த்து வடமேல் மாகாணசபைக்கான தேர்தல்களையும் நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன்படி வடமேல் மாகாண சபையின் தேர்தலும் எதிர்வரும் செப்டெம்பர் மாதமே நடைபெறவுள்ளது.

மூன்று மாகாணசபைகளுக்கான தேர்தலை ஒரே தடவையில் நடத்தாது இரண்டு மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

முன்னதாக மத்திய மாகாண சபைக்கான தேர்தலை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

எதிர்வரும் காலங்களில் வேறு ஓர் மாகாணசபையுடன் மத்திய மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படும் என குறித்த அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வெளிநாட்டு இலங்கையர்களுக்கு இரட்டை பிரஜாவுரிமை கிடைக்கும்

(கொழும்பு)

வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்று வாழுகின்ற இலங்கைப் பிரஜைகளுக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்கு முன்னர் இரட்டைப் பிரஜாவுரிமை வழங்க அரசு தீர்மானித்துள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்ற இலங்கையர் 3 முதல் 5 இலட்சம் பேர் வ்ரை ஐரோப்பா உட்பட்ட பல்வேறு நாடுகளிலும் வசிக்கின்றனர்.

அவர்கள் இலங்கைப் பிரஜைகளாக இலங்கை வர விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் உள்ளோர் அங்கு பிரஜாவுரிமை பெற்ற பின்னர் இலங்கை பிரஜாவுரிமை இரத்தாகிறது.

வெளிநாடுகளில் வசிக்கும் இலட்சக்கணக்கான இலங்கையரின் கோரிக்கையின் பேரில் புதியீ நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் ஒரு இலட்சம் பேருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# தனியார் பேருந்துகளில் முற்கொடுப்பனவு அட்டை

தனியார் பேருந்துகளில் சிட்டைகளுக்கு பதிலாக முற்கொடுப்பனவு அட்டையை அறிமுகப்படுத்தும் முதற் கட்ட நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

கொட்டாவ-கொழும்பு, மத்தேகொட-கொழும்பு ஆகிய பேருந்து மார்க்கங்களினூடாக பயணிக்கும் பேருந்துகளில் முதலில் இந்த சேவை ஆரம்பிக்கப்பட்டதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜே ரத்ன கூறியுள்ளார்.

விரைவில் ஏனைய பேருந்து மார்க்கங்களிலும் முற்கொடுப்பனவு அட்டைகள் அறிமுகப்படுத்தவுள்ளதாகக் கூறிய அவர், அடுத்து ஏனைய மாகாணங்களுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும் எனவும் புதிய முற்கொடுப்பனவு அட்டையை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக நேற்று முன்தினம் 138 பேருந்து மார்க்கத்தினூடாக பயணிக்கும் பயணிகளுக்கு இலவசமாக முற்கொடுப்பனவு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

முதலில் 200 ரூபாவை வைப்புச் செய்து முற்கொடுப்பனவு அட்டையைப் பெற முடியும் எனவும் அதன் பின் தேவையான தொகையை வைப்பிலிட்டு பேருந்துகளில் பயணிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி அட்டைகள் , பேருந்து தரிப்பிடங்கள், மக்கள் வங்கிக் கிளைகள் மற்றும் தொலைபேசி முற்கொடுப்பனவு அட்டை விற்கும் இடங்கள் என்பவற்றினூடாக விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

முற்கொடுப்பனவு அட்டையில் பணம் முடிந்தால் மீண்டும் பணத்தை இட்டு இதனை பயன்படுத்த முடியும் எனவும் அவர் கூறினார். (அ-2)

## இலங்கை வங்கி கிளை அங்குரார்ப்பண நிகழ்வு

இலங்கை வங்கியின் வட்டுக்கோட்டை கிளை அங்குரார்ப்பண வைபவம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு வட்டுக்கோட்டை இலங்கை வங்கி வளாகத்தில் நடைபெறவுள்ளது. இலங்கை வங்கியின் மானிப்பாய் முகாமையாளர் ஜி. சகாதேவன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக விற்பனை நெறிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பிரதிப் பொது முகாமையாளர் ஜி.எம். முதியான்சே, சிறப்பு விருந்தினர்களாக, வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் ரி.எம்.ரி. தென்னக்கோன், சங்கானை பிரதேச செயலர் ஏ.சோதிநாதன் ஆகியோர் கல'ந்து கொள்ளவுள்ளனர். கௌரவவிருந்தினர்களாக வட்டு. யாழ்ப்பாண கல்லூரி அதிபர் நோயல், ஏ.விமலேந்திரன், வட்டு. மத்திய கல்லூரி அதிபர் எஸ்.என். சுபாரட்ண சிங்கி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# கடத்தப்பட்ட சிறுவன் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

தங்கொட்டுவ ,வேகட பிரதேசத்தில் வானில் வந்த இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்ட 12 வயதுடைய பாடசாலை சிறுவன் ஒருவன் கிரில்ல பிரதேச காட்டுப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் பிரதேச வாசிகளால் மீட்கப்பட்டு தமபதெனி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வேகட பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 6இல் கல்வி பயிலும் சந்துன் பிரியங்கர என்ற சிறுவனே மேற்படி கடத்தப்பட்ட பின்னர் கைவிடப்பட்டவராவார்.

கடததல் சம்பவம் தொடர்பாக சிறுவனின் பாட்டி தெரிவிக்கையில்,

வழமை போல் நேற்று முன்தினம் காலை சிறுவன் வேகட பிரதேசத்தில் உள்ள பாடசாலைக்கு பேருந்தில் சென்றுள்ளார். பேருந்திலிருந்து இறங்கிய பின்னர் பாடசாலைக்கு அருகில் உள்ள சில்லறை கடையில் பனடோல் ஒன்றை வாங்கிக் கொண்டு பாதை மாற முயன்ற போது வானில் வந்த நபர்களால் திடீரென்று கடத்தப்பட்டு பின் கடத்தியோரால் காட்டில் கைவிடப்பட்டு தற்போது பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றார். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மஞ்சள்

Botanical Name-
Curcuma longa
Family-Zingideraceae
Engl- Turmeric
Sinh-Kaha

(கடந்தவாரத் தொடர்ச்சி...)

**மேகநோய், மேகப்புண்**


மஞ்சளை கருக்கி பொடியாகச் செய்து வெந்நீருடன் உட்கொண்டு வந்தால் இருபது நாட்களில் மேக நோய் குணமாகும். மஞ்சள் கறித்தூளை காயம், புண், கட்டிகள் ஆகியவை காணப்பட்டால் காலை, மாலை என 90 நாட்கள் உட்கொண்டு வர மேகநோய் தொடர்புடைய மேகப்புண், தோல் தடிப்பு, ஊறல் இவையெல்லாம் குணமாகி விடும்.-மஞ்சள் செடியின் இலையையும் அவரை இலையையும் சம அளவு எடுத்து, அரைத்து ஒரு வேளைக்கு பாக்கு அளவு என ஒரு நாளைக்கு இரண்டுவேளை உட்கொள்ளவேண் டும். தொடர்ந்து 18 நாட்கள் உட் கொள்ளவேண்டும். முழுமையான குணம் இல்லையென்றால் மேலும் 20ள நாட்கள் உட்கொள்ளவேண்டும். இந்த மருந்து உட்கொண்டு வரும் நாட்களில் உப்பில்லாப்பத்தியம் இருக்கவேண்டும். புளி தவிர்க்க வேண்டும்.

**பிரசவமான பெண்களுக்கு**

பிரசவமான பின்பு வயிற்றில் கட்டுப்பட்ட விச நீரினை வெளிப்படுத்தி, வயற்றைச் சுத்தப்படுத்திக் கொள்ள கீழ்க்கண்டவாறு ஒரு பக்குவம் செய்யவேண்டும்.

அரை லீற்றர் நீரில் 50 கிராம் மஞ்சள்பொடியைப்போட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி வடி கட்டிக் கொள்ளவேண்டும். இந்தக் குடிநீரைப்பிரசவமான பெண்கள் காலை வேளையில் மட்டும் உட்கொள்ள வேண்டும். இரண்டு நாட்கள் உட்கொள்ள குணம் தெரியும்.வீட்டில் மஞ்சளை வளர்த்து வரும்போது மஞ்சள் கிழங்கை பக்குவப்படுத்தும் முறை தெரியாமல் இருப்பதால் மஞ்சள் விரயமாகின்றது. இதனைத் தடுக்க மஞ்சளைப் பதப்படுத்தும் முறையை அறிவது இன்றியமையாத ஒன்றாகும்.

மஞ்சளை பதப்படுத்தும் முறை மஞ்சள் 10 மாதங்கள் வரைக் கூடிய பயிராகும். இந்த மட்ட நிலத் தண்டுகள் ஜனவரி முதல் மார்ச் மாதத்திற்குள் மண்ணிலிருந்து தோண்டி எடுத்து சேகரித்து பின் சல்லி வேர்களை வெட்டியெடுத்து நீரில் கழுவ வேண்டும். அவ்வாறு சேகரித்த மட்ட நிலத்தண்டுகளை சேகரித்த இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் பதப்படுத்தி உலர்த்த வேண்டும். முதலில் உருண்டைவடிவதாய் மட்ட நிலத்தண்டிலிருந்து விரல் வடிவ கிளைமட்ட நிலத்தண்டுகளை பிரித்தெடுக்க வேண்டும். பிரித்தெடுத்த விரல் வடிவ மட்ட நிலத் தண்டுகளை பாத்திரத்தில் சுத்த மான நீரில் அல்லது சோடியம் காபனெற் $Na_2Co_3$ கலந்து காரத் தன்மையுடைய நீரில் 100 கிராம் $Na_2Co_3$ $+100ml\ H_2O$ 45 நிமிடம் முதல் 60 நிமிடம் வரை வேக வைக்க வேண்டும். அவ்வாறு வேக வைக்கும்பொழுது உண்டாகும் நறுமணத்தின்மூலம் அவை சரியான பருவத்தில் வெந்துள்ளன எனத் தெரிந்து கொள்ளலாம். நன்றாக வெந்துள்ளன என அறிவதற்கு கம்பியின் மூலம் மட்ட நிலத் தண்டைக் குத்திப்பார்ப்பதும் உண்டு பின் வெந்தவற்றைவெளியே எடு த்து மூங்கில் பாய்களில் அல் லது சீமெந்து தளங்களில் 5-7 செ. மீற்றர் உயர அளவில் பரப்பி வேக வைத்து வெயிலில் 10 முதல் 15 நாட்கள் உலர்த்த வேண்டும். அல் லது குவிய லாக வைக்க வேண்டும். உலர்ந்த மஞ்சள் துண்டுகளை குறுக்காக கம்பி வளைகள் அமைக்கப்பட்டுள்ள தகரப் பீப்பாய்களில் போட்டு தகரப் பீப்பாய்களை கை மூலம் அல்லது மோட்டார் மூலம் சுழற்ற வேண்டும். அப்போது உலர்ந்த மஞ் சள் துண்டுகள் ஒன்றோடொன்று உராய்வதன்மூலமும் பீப்பாயின் உட்பக்கமுள்ள கம்பிகளில் உராய்வதன் மூலமும் மெருகும் (Polish) கிடைக்கின்றது. (முற்றும்)



திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எனது கேள்விகளுக்கு சித்தர் அளித்த பதில்கள்"




ஆன்மீகம் 31

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

அடியேன்:- அவரைத் தான் ஒருவன் சுட்டுவிட்டானே?

சித்தர்:-நதிகள் உயிர்களை வாழ வைப்பதற்காக இறைவன் கொடுத்த வரம்! இயற்கையாய் வரும் நதிகளை மனிதன் செயற்கை முறையால் அணையிட்டுத் தேக்கி அதை தன் ஆசைப்படி ஆண்டு கொண்டிருக்கிறான். அப்படிச் செய்ய எந்த மனிதனுக்கும் உரிமை இல்லை. நதிகள் எல்லோருக்கும் பொதுவானவை! அதில் உரிமை கொண்டாட எந்த நாட்டிற்கும் தர்ம வழியில் இடமில்லை! அனுமதியில்லை! ஆனால், மொழியால் இனத்தால் நிறத்தால் ஜாதியால் பிரிந்து கிடக்கும் மனித இனம் இயற்கையிலும் பிரிவினையை செய்து கொண்டிருக்கிறது! இந்த காவேரி பிறந்த கதை கன்னடர்களுக்கு மறந்து போய்விட்டதுபோலும்! சோழ மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க அகஸ்திய மாமுனியின் கமண்டலத்திலிருந்து பிறந்து வந்த காவிரியால் சோழவள நாடாக மாறியது! பொன்னிற நெற்கதிர்களை விளைத்த காரணத்தால் காவிரி- பொன்னி என்ற காரணப் பெயரைப் பெற்றது! இந்த நதி பிறக்கவே முயற்சி எடுத்தவன் சோழ மன்னன்! தமிழன் அப்படி இருக்க மொழிவாரி மாகாணங்கள் என்ற புதுப்பிரிவினையால் தோன்றிய இந்த கன்னடர் நாடு- கர்நாடகா என்ற புதுப்பெயர் பெற்றது! இதனால் அவர்கள் பூமியில் பிறக்கும் காவிரி அவர்களுக்கே சொந்தம் என்ற எண்ணம் பிறந்தது! இன்று வான் பெய்தாலும், தான் பொய்யாகாத காவேரி, என்று பெயரெடுத்தவள் இன்று பொய்யகிப்போய்



விட்டாள்! பெருமழை பொழிந்து தங்கள் அணைகள் நிரம்பினால வடிகாலாக நீரை திறந்துவிட்டு தண்ணீர் தந்ததாக நாடகமாடுகிறார்கள். தமிழ்நாடு கர்நாடகாவின் வடிகால் பூமியில்லை. இனி ஒருசொட்டு நீர்கூட இங்கு வரக்கூடாது என்று தமிழகம் சினந்தால் இவர்கள் என்ன செய்ய முடியும்? உபரிநீரை இவர்கள் எங்கு தேக்குவார்கள்! பிறகு கர்நாடாக முழுவதும் காவிரியின் நீர் பரப்பாகத் தானே மாறும். இதை கர்நாடக அரசியல் மேதைகள் புரிந்துகொள்ளும் காலம் நெருங்கிவிட்டது! இன்று காவிரிநீரை வைத்து கர்நாட்காவில் மனிதத்தன்மையை- மனச்சாட்சியை மறந்துவிட்டு அரசியல் வாதிகள் அரசியல் பிழைப்பு நடத்துகிறார்கள்! தமிழ்நாட்டிலும் உண்மையாக போராட எவருமில்லை. அரசியல் தலைவர்கள் போன்றோர் சுதந்திரம்பெற்ற துவக்க காலத்திலேயே முயன்றிருந்தால் இன்று இந்நிலைமை வந்திருக்காது! அடுத்து ஆட்சிக்கு வந்தவர்கள் மத்திய சர்காருக்கு எதிர்க் கட்சிகள் என்பதால் அவர்கள் குரலும் எடுபடவில்லை. சோழநாடு சோறுடைத்து என்று பேர் பெற்ற நாடு- சோற்றைக் கண்ணால் பார்த்தே பல காலம் ஆன மக்களைக் கொண்ட சோகபூமியாகத் துடிக்கிறது! இனி அரசியல் வாதிகளை நம்பிப் பயனில்லை! தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமாம் தஞ்சை மாநிலம் மீண்டும் நிரம்ப வேண்டுமெனில் காவிரி பாய்ந்து வர வேண்டும்! அதற்கு மக்கள் எல்லோரும் மனமொத்து வரம் வேண்ட வேண்டும்! எல்லா ஆலயங்களிலும் கோ பூஜை செய்ய வேண்டும்!

தொடரும்

# இலங்கையின் ஆதிக்குடிகள் நாகர், இயக்கர், வேடர்!

இலங்கை பௌத்த நாடு, பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமான நாடு என்ற கூக்குரல் தென்னிலங்கை சிங்கள - பௌத்த பேரினவாதிகளால் உரத்த குரலில் ஒலிக்கப்படுகிறது. ஏற்கனவே சிங்கள பேரினவாதத்தை கக்கிக் கொண்டிருக்கும் ஜாதிக ஹெல உறுமய, சுதந்திரத்துக்கான தேசிய இயக்கம் போன்ற 2 கடும்போக்கு அமைப்புகள் மட்டும் அல்லாது அண்மையில் முளைத்திருக்கும் பொதுபல சேனா, சிகலராவய, இராவணலாவய போன்ற அமைப்புகளும் களத்தில் இறங்கியுள்ளன. இந்தப் பேரினவாத சக்திகளின் போர்க்கோலம் ஐம்பதுகளில் தனிச் சிங்களத்துக்கு ஆதரவாக வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்த வரலாற்றுக் காட்சிகளை நினைவுபடுத்துகிறது.

சிங்கள மட்டும் என்ற முழக்கம் அரசியலில் சிங்கள - பௌத்த மக்களதும், பௌத்த தேரர்களதம் மேலாதிக்கத்தை நிறுவியது. அதன்மூலம் அரசியல் மேலாண்மை சிங்கள - பௌத்தர்களது கைகளில் இருக்க வேண்டும் என்ற கோட்பாடு உறுதி செய்யப்பட்டது. இந்தத் தனிச் சிங்களத்துக்கு ஆதரவாகத் திரண்டவர்களில் பெரும்பாலோர் இராமண்ண மற்றும் அமரபுர பௌத்த மத பீடங்களைச் சேர்ந்த தேரர்கள் ஆவர். இந்த பௌத்த பீடங்கள் சிங்களக் கரையார், சலாகம மற்றும் துவார சமூகத்துக்கு உரியன.

கண்டிதலதாமாளிகை சியாம் பௌத்த பீடங்களான மல்வத்தை மற்றும் அஸ்கிரியா (1764) இரண்டையும் சேர்ந்த சிங்கள ரதல மற்றம் கோவிகம (வெள்ளாளர்) சாதியினருக்கு மட்டுமே உரியமஞூதாக இருக்கின்றன. எனவே தான் சிங்கள கரையார், சலாகம மற்றும் துவார வகுப்பைச் சார்ந்தவர்கள் அதற்குப் போட்டியாக இரமண்ண(1864) மற்றும் அமரபுர பௌத்தமத பீடங்களை (1800) நிறுவினார்கள். அமரபுர மதபீடம் சாதி அடிப்படையில் மேலும் 21 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஒரு பௌத்த நாடு. அது பௌத்த-ஆரிய சிங்களவர்களுக்கே சொந்தம் என்ற கூக்குரல் சென்ற நூற்றாண்டிலும் ஒலித்தது. அதை ஒலித்தவர் டொன் டேவிட் ஹேவவிதாரனே (புரட்டாதி 17, 1864) என்ற இன்று இயற்பெயரைக் கொண்ட தர்மபாலர் ஆவர். இவரது தந்தை டொன் கறோலிஸ் தளவாடக்கடை ஒன்றை நடத்தினார். சிங்கள வணிகர்களின் பண உதவியால் இயங்கி வந்த பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் அவர்களின் வணிக முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கியது. இவர்களைத் தேசபக்தர்கள் என்றும் நியாயமான வழியில் பணம் திரட்டுவோர் என்றும் புகழ்ந்தது. அன்றைய இலங்கையின் பணக்கார வணிகரின் மகனான இவர் தேரவாத பௌத்தத்தை தழுவித் தன்னுடைய பெயரை அநாகரீக தாமபாலர் என மாற்றிக் கொண்டார். இவருடைய காலகட்டத்திலே இலங்கையில் கிறிஸ்தவ மதப் பரப்புரையாளர்கள் வடக்கிலும் தெற்கிலும் மதமாற்றத்தைச் செய்து கொண்டிருந்தனர். அநாகரிக தர்மபாலர் பௌத்த மேலாண்மை கருதியலை வளர்ப்பதற்குச் சிங்கள பௌத்தாய என்ற பெயரில் செய்தி ஏடு ஒன்றினை நடத்தினார். முஸ்லிம்களின் கடைகளைப் புறக்கணிக்கும்படி வேண்டுகோள் விடுத்தார். சிங்கள பௌத்தாய என்ற சொற்றொடரை முதலில் புனைந்தவர் தர்மபாலரே.

சிங்கள நாவலின் தந்தை எனக் கூறப்படும் பியதாச சிரி சேன தனது சிங்கள ஜாதிய என்ற பத்திரிகையில் மேலைக் கலாசாரத்திற்கு எதிராக எழுதிய அதே வேளையில், சிங்களவர் அல்லாதோரைத் தாக்கி எழுதினார். தர்மபாலர் சிங்களவர் ஆரியர்கள் என்று; அவர்கள் தனித்துவமான இனம் என்றும் அவர்கள் ஆரிய நாகரீகத்தைச் சார்பு படுத்துகிறார்கள் என்றும் அவர்களை புறச்சமயிகளான தமிழர் ஆகட்டும் மூன்று நூற்றாண்டு காலம் நிலத்தையும், புராதன கோயில்களையும் நூல்நிலையங்களையும் அழித்த ஜரோப்பிய அழிவுக்காரர் ஆகட்டும் ஒரு போதும் சிங்களவர்களை வெற்றிகொள்ளவில்லை என்று எழுதினார்.

தர்மபாலர் கிறிஸ்தவ மதபரப்புரையாளர்களுக்கு மாற்றாக பௌத்தத்தை முன்வைத்ததோடு மட்டுமல்லாது சிங்கள மக்களை ஒன்றிணைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டார். இந்தியா போன்ற இடங்களில் இருந்துவந்து இலங்கையில் வியாபாரம் செய்தவர்களை அநியாயமாகப் பணம் சம்பாதிப்போர் எனக் கடுமையாகச் சாடினார்.

எப்போதும் சிங்களவருக்கு முஸ்லிம்கள் பகைவர்களே! இந்தியாவில் பௌத்தத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்றார். முஸ்லிம்கள் ஏமாற்றிச் சம்பாதிக்கிறார்கள். மண்ணின் மைந்தர்களான சிங்களவர்கள் ஏமாற்றப் படுகிறார் என எழுதினார். ஆரிய சிங்களவர்களின் புனித பூமியான இலங்கை இந்துக்களாலும் முஸ்லிம்களாலும் கிறிஸ்தவர்களாலும் அழித்தொழிக்கப்பட்டது எனவும் அதைக் காப்பது சிங்கள- பௌத்தர்களது கடமை எனவும் பரப்புரை செய்தார். அவரது எண்ணத்தின்படி இலங்கையில் தமிழர் முஸ் லிம் ஆகியோருக்கு இடமில்லை. கிறிஸ்தவ சிங்களவர்களையும் அவர் சிங்களவர் என்று ஏற்றுக் கொள்ள மறுத்தார். தர்மபாலர்தான் நடத்திய சிங்கள பௌத்த செய்தி ஏட்டின் வாயிலாக முஸ்லிம் கடைகளைப் புறக்கணியுங்கள்.



அப்படி முஸ்லிம் கடைகளைப் புறக்கணிப்பவர்கள் மட்டுமே நாட்டின் உண்மையான தேச பக்தர்கள் என்று எழுதினார்.

அவர் மேலும் பிரித்தானியருக்கு ஜேர்மனியர் எவ்வாறோ சிங்களவருக்கு முஸ்லிம்களும் அவ்வாறே. முகமதியர் சிங்களவருக்கு சமயத்தாலும் இனத்தாலும் மொழியாலும் அந்நியர்கள். பௌத்த சமயம் இல்லாவிடின் மரணத்தையே சிங்களவர் வேண்டுவர். பிரித்தானிய உத்தியோகத்தர்கள் சிங்களவரைச் சுடலாம். தூக்கிலிடலாம் சிறைப்பிடிக்கலாம். ஆனால், எப்போதும் சிங்களவருக்கு முஸ்லிம்கள் பகைவர்களே. அந்நியரால் இழைக்கப்படும் அவமானங்களை இனியும் பொறுக்க முடியாது என்பதை அமைதிமிக்க சிங்களவர் இறுதியில் உணர்ந்து விட்டனர். முழுத் தேசமும் முஸ்லிம்களுக்கு எதிராக எழுச்சியுற்றுவிட்டது.-இதற்குப் பொருளாதார ஆன்மீக அடிப்படையில் காரணங்கள் இருந்தன என்று முஸ்லிம்கள் மீது வெறுப்பைக் கொட்டினர்.


நக்கீரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




483

# புத்தி வந்தது



முன்னொரு காலத்தில் கலிங்க நாட்டை மணிமகுடன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு இந்து சர்மா என்ற ஒரு புத்திசாலியான மந்திரி இருந்தார். அவரது சொல்லிற்கு எல்லா அரசாங்க உத்தியோகஸ்தர்களும் கட்டுப்படுவார்கள். எனவே, ஆட்சி மிக ஒழுங்காக நடந்து வந்தது.

அரசனுக்கு வேடிக்கை விடயங்களைக் கூறி மகிழ்விக்க பசுபதி சாஸ்திரி என்னும் விதுஷகர் நியமிக்கப்பட்டார். அவர் தினமும் அரசரின் ஓய்வு நேரங்களில் பல விடயங்களைப் பற்றி சுவரஸ்யமாகக் கூறி அவனது மனதைச் சந்தோஷப்படுத்தி வைத்திருந்தார்.

இந்த சாஸ்திரி அரசனுடன் மட்டுமே பழகி வந்ததால் வேறு யாரையுமே லட்சியம் செய்யவில்லை. இதைக் கண்ட சர்மா அந்த சாஸ்திரிக்கு சரியான பாடம் கற்பிக்கத் தீர்மானித்துக் , கொண்டார். ஒரு நாள் அரண்மனை வாசலில் காவல் காக்கும் காவலாளியிடம் "நாளை நீ பசுபதி சாஸ்திரியை அரண்மனைக்குள் அடி எடுத்து வைக்க விடாதே" என்று உத்தரவு இட்டார்.

மறுநாள் சாஸ்திரி அரசனைக் காண வந்தபோது வாசலில் நின்ற காவலீாளி அவரைத் தடுத்து நிறுத்தி விட்டான். இது கண்டு சாஸ்திரி திகைத்தார். அரசன் தன்னிடம் கோபம் கொள்ள என்ன காரணமென யோசித்துப் பார்த்தார். ஆனால், ஒரு காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை. உடனே அவர் அரசனுக்கு ஒரு கடிதத்தில் தான் செய்த குற்றம் என்னவோ எனத் தாழ்மையுடன் கேட்டு எழுதி அனுப்பினார். ஆனால், அந்தக் கடிதம் அரசனிடம் சென்றால்தானே மந்தரியின் கைக்குப் போய் பின்னர் குப்பைக் கூடையில் இடம்பெற்றது. இப்படி இரண்டு நாட்கள் கழிந்தன.

இரண்டு நாட்களாக "சாஸ்திரி வராததால் அரசன் சாஸ்திரி ஏன் வரவில்லை?" என்று கேட்டான். யாருமே பதில் சொல்லவில்லை. அப்போது மந்திரி "அரசே, சரஸ்திரி நேற்று இறந்து விட்டார். அவருக்கு ஈமச்சடங்கு கூட நடந்துவிட்டது" என்று கூறி விட்டார்.

அரசனிடமிருந்து தனக்கு எவ்வித மறுமொழியும் கிடைக்காதது கண்டு, சாஸ்த்திரி தன் கடிதம் அரசனிடம் பேர்ய்ச் சேரவில்லை என்பதை ஊகித்துக்கொண்டார். தனக்கு யாரோ வினைவைத்து விட்டார்களெனத் தெரிந்து, இனி அரசன் அரண்மனையைவிட்டு வெளியேவரும் போது பார்த்துப்பேசுவதுதான் ஒரேவழி என நினைத்து அந்த சந்தர்பத்தையும் எதிர்பார்க்கலானார்.



ஒருநாள் அரசனும், மந்திரியும் பரிவாரங்கள் புடை சூழ நகரபவனி வரக் கிளம்பினார்கள். அரசன் சற்று தூரத்தில் பசுபதி சாஸ்திரியை பார்த்துவிட்டு "இதென்ன மந்திரியாரே, அது சாஸ்திரிதானா? உயிருடன் இருக்கிறாரா? அல்லது அவரது ஆவியா?" என்று கேட்டான்.

அதற்கு மந்திரி "ஆமாம், அவரது ஆவிதான் அது" என்றார். பக்கத்தில் இருந்தவர்களும் மந்திரி சொல்வதையே ஆமோதித்து "ஆமாம்" பாட்டு பாடினார்கள். அதை பசுபதி சாஸ்திரி கேட்டும் விட்டார்.

அப்போதுதான் சாஸ்திரிக்கு ஒரு விடயம் தெளிவாக விளங்கியது. மன்னனுக்கு மட்டும் மதிப்புக் கொடுத்து மற்றவர்களை, அதிலும் குறிப்பாக, அறிவாளிகளான அமைச்சர்களை அலட்சியம் செய்வது பெருந்தவறு என்பதை உணர்ந்தார். அவர் ஒரு செய்யுளை வடமொழியில் எழுதி அரசன் அரண்மனைக்குப் போகும்போது எப்படியோ அவருடைய கைக்குக் கிடைக்கும்படி செய்தார். அந்தச் செய்யுளின் கருத்து வருமாறு. அரசனோடு அரசனின் பரிவாரங்களையும் மதிக்க வேண்டும். அரசனே கதி என்று கிடந்தால் அதோ கதிதான். அதற்கு சரியான உதாரணம் உயிரோடு இருந்தும் இறந்ததாகக் கருதப்படும் பசுபதி சாஸ்த்திரியே.



அதைப் படித்ததும் அரசன் என்ன நடந்ததென்பதைப் புரிந்துகொண்டான். உடனே மந்திரியை வரவழைத்து "என்ன, நீங்கள் சாஸ்த்திரி இறந்துவிட்டதாக ஒரு பொய்யை என்னிடம் கூறி விட்டீர்களே" என்று கேட்டான்.

அப்போது மந்திரி உள்ளதை உள்ளபடியே கூறினார். ஒரு சாஸ்த்திரியின் பொருட்டு ஒரு புத்திசாலியான மந்திரியை அரசன் இழக்க விரும்பவில்லை மந்திரியை அவர் கடிந்தும் கொள்ளவில்லை. பசுபதி சாஸ்திரியை மட்டும் முன்போல அரண்மனைக்கு வந்து போகச் சொன்னான்.

பசுபதி சாஸ்த்திரிக்கும் புத்தி வந்தது. அரசாங்க அதிகாரிகளுக்கும் அவரவர்களுக்குரிய மரியாதையைச் செலுத்த வேண்டுமென்பதை அவரும் தெரிந்து கொண்டார்.

அதன்படியே நடந்தும் வரலானார்.

அம்புலிமாமா கதைகள்

# கற்றதனால் ஆய பயன் என் கொல்!



பெரிய பாளையத்திலும், அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களிலும் பத்திரபாதரை மக்கள் தெய்வமென மதித்துப் போற்றினர். பத்திரபாதர்களின் சிஷ்யர்களின் ஒரு கூட்டமே இருந்தது. எங்கு சென்றாலும் குருவைப் பின் தொடர்ந்து செல்வது சிஷ்யர்களின் வழக்கம். ஒருசமயம் குரு ஆற்றில் நீராடுகையில், சுழலில் சிக்கிக் கொண்டார். அதைக்கண்டு, உடனிருந்த சிஷ்யர்கள் திடுக்கிட்டனர்.

எல்லோருக்குமே நீச்சல் தெரியும். ஆனால், குருவைக் காப்பாற்றும் முயற்சியில் தங்களையும் ஆற்று வெள்ளம் அடித்துச் சென்று விடுமோ என்று அஞ்சி, பெரிதாகக் கூக்குரலிட்டு "உதவி! உதவி!" என்று குரலெழுப்ப, அவர்கள் குரல் கேட்டு மீனவன் ஒருவன் சட்டென தன்னுயிரையும் பொருட்படுத்தாமல், ஆற்றுக்குள் குதித்து குருவைக் காப்பாற்றி விட்டான்.

உடனே சிஷ்யர்கள் மீனவனிடம் "நீ காப்பாற்றியவர் மிகப்பெரிய மனிதர்! அவர் எங்கள் குரு! என்று அவனிடம் குருவின் புகழ் பாட, குரு" அவர்களைத் தடுத்து நிறுத்தி, "பாராட்டுக்குரியவன் இந்த மீனவன் ஒருவனே! இவனிடம் போய் என் புகழ்பாடி என்ன பயன்? மற்றொன்றும் புரிந்து கொள்ளுங்கள்! ஆயிரம் விடயங்களைக் கற்றறிந்தும் தகுந்த சமயத்தில் அவற்றைப் பயன்படுத்தாத உங்களைக்காட்டிலும், தனக்குத் தெரிந்த ஒன்றை தகுந்தசமயம், மிகுந்த துணிச்சலுடன் பயன்படுத்திய இவன் ஆயிரம் மடங்கு மேல்! இவனைக் கையெடுத்துக் கும்பிடுங்கள்" என்று சொல்ல, சிஷ்யர்கள் அவமானத்தில் கூனிக் குறுகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக ஒழித்துக்கட்டுங்கள்

## மகஜர் கையளிக்கிறார் அமைச்சர் விமல்

(கொழும்பு)

வடமாகாண சபை தேர்தலுக்கு முன்னர் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழு அளவில் இரத்து செய்ய வேண்டும். அதில் கொண்டு வரப்படும் திருத்தங்களை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவற்றை வலியுறுத்திய மகஜரொன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஊர்வலமாகச் சென்று கையளிக்கப் போவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தமிழீழ போராட்டத்திற்கான இரண்டாவது சந்தர்ப்பத்திற்கு இடமளிக்கப் போவதில்லை. சம்பந்தன் குழுவினர் இன்று முதலைக் கண்ணீர் வடிப்பது தமது தனிஈழக்கனவை நனவாக்கிக் கொள்வதற்கேயாகும்.

வடக்குத் தேர்தல் தற்போதுள்ள அதிகாரங்களின் படியே நடைபெற்றால், வடக்கிலிருந்து அனைத்து இராணுவமும் விரட்டியடிக்கப்படும். அதற்கு பின்னர் மத்திய அரசு தூக்கில் தொங்க வேண்டிய நிலையே ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அமைச்சர் தொடர்ந்து கூறுகையில் ,

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிப்பதற்காக நாடளாவிய ரீதியில் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வருக்கின்றோம். வட மாகாண சபை தேர்தலுக்கு முன்னர் 13 ஆவது திருத்தச் சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

இதுவே, நாட்டிக்காக நாம் செய்யும் மகத்தான பணி. இதனடிப்படையில் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிரான எதிர்ப்பு மகஜரில் கையொப்பம் பெறும் வேட்டையை ஆரம்பித்துள்ளோம்.

பொதுமக்கள் மிகவும் உற்சாகமாக மேற்படி மகஜரில் கையொப்பம் இட்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர். இந்த மகஜரை இன்று புதன்கிழமை கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஒன்றுகூடி ஊர்வலமாக சென்று நேரடியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கவுள்ளோம். இதனை ஏற்றுக் கொண்டு உரிய பதிலை நாட்டுக்கு அவர் தெரியப்படுத்த வேண்டும்.

ஏனெனில், வடமாகாண சபைத் தேர்தலிலேயே இலங்கையின் எதிர்காலம் உள்ளது. சில வேளை வட மாகாணம் கூட்டமைப்பினரிடம் சென்று விட்டால் அது தனி ஈழமாகவே பிரகடனப்படுத்தப்படும். இதற்கு ஒரு போதும் இடமளிக்கக் கூடாது.

பல்லாயிரம் இராணுவ வீரர்கள் உயிர்த்தியாகம் செய்து பெற்றுக் கொண்ட இராணுவ வெற்றியைக் காட்டிக் கொடுக்கும் வகையில் அரசாங்கமோ இந்நாட்டின் அரசியல் கட்சிகளோ செயற்படக்கூடாது.

எனவே, திருத்தங்களை மேற்கொள்ளாது 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக ஒழிக்க வேண்டும் எனக் கூறினார். (அ-2)

# கசினோ வர்த்தகத்தை மேற்கொள்ள வெளிநாட்டவர்களுக்கு அனுமதியில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டுநிறுவனங்களுக்கோ அல்லது வெளிநாட்டுப் பிரஜைகளுக்கோ இலங்கையில் கசினோ வர்த்தகத்தை மேற்கொள்ள அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு டி.ஆர். விஜேவர்தன மாவத்தையில் பாரிய கசினோ வர்த்தக மையமொன்று அமைக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதையடுத்தே கசினோ மையமொன்றை அமைக்க வாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் சுற்றுலாத் துறையை மேம்படுத்த ஹோட்டல்கள் அமைக்கப்படும் எனவும் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஏற்கனவே உள்ளூர் வர்த்தகர்கள் இலங்கையில் கசினோ வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கசினோ வர்த்தகத்தை ஊக்குவித்தால் வீதியில் இறங்கி போராடப் போவதாக கண்டி அஸ்கிரிய பீடாதிபதி உள்ளிட்ட பௌத்த பிக்குகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (அ-2)

# பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன கைது

பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்த்தன தெரிவித்தார்.

அவரிடம் குற்றப்புலனாய்வுபிரிவினர் நேற்று இரவு வாக்குமூலம்மொன்றை பெற்றுக் கொண்டதன் பின்னரே அவரை குற்றப்புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

பம்பலப்பிட்டிபிரதேசத்தைச்சேர்ந்த கோடீஸ்வர வர்த்தகரான மொஹமட் சியாம் என்பவரை கடத்திக் கொலை செய்த சம்பவம் தொடர்பிலிலேயே அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இக்கொலைச்சம்பவம் தொடர்பில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர், பொலிஸ் கான்ஸ்டபிள் இருவர் அடங்கலாக நான்கு பொலிஸாரும் இரண்டு பொதுமக்களும் கடந்த 6 ஆம் திகதி குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட பொதுமக்கள் இருவரும்பெண்கள்எனதெரிய வருகின்றது.

தொம்பே பகுதியில் வைத்து கடந்த 22 ஆம் திகதி கடத்தப்பட்ட வர்த்தகர் பம்பலப்பிட்டி பகுதியில் வைத்து கொலைச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)




❖1429 - நூறாண்டுகள் போர்: ஜோன் ஒஃப் ஆர்க் தலைமையில் பிரெஞ்சு இராணுவம் ஆங்கிலேயர்களிடம் இருந்து ஜார்கூ என்ற இடத்தைக் கைப்பற்றினர்.

❖1775 - அமெரிக்கப் புரட்சிப் போர்: பிரித்தானிய இராணுவத் தளபதி தொமஸ் கேஜ் மசாசுசெட்சில் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தார். தமது ஆயுதங்களைக் கீழே வைக்கும் அனைத்துக் குடியேற்றக்காரர்களுக்கும் மன்னிப்பு அளிப்பதாக அறிவிக்கப்பட்டது.

❖1830 - 34ஆயிரம் பிரெஞ்சுப் படைகள் அல்ஜீரியாவை அடைந்ததில் இருந்து பிரெஞ்சுக் குடியேற்றம் அந்நாட்டில் ஆரம்பமாகியது.

❖1898 - பிலிப்பைன்ஸ் ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

❖1899 - ஐக்கிய அமெரிக்காவின் விஸ் கொன்சின் மாநிலத்தில் இடம்பெற்ற சூறாவளியில் 117 பேர் உயிரிழந்தனர்.

❖1902 - அவுஸ்திரேலியாவின் நான்கு மாநிலங்களில் பெண்கள் பொதுத்தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். அவுஸ்திரேலியப் பழங்குடிகள் வாக்களிக் கும் உரிமை மறுக்கப் பட்டது.

❖1934 - பல்கேரியாவில் அரசியற் கட்சிகள் தடை செய்யப்பட்டன.

❖1935 - பொலிவியாவுக்கும் பராகுவேயிற்கும் இடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டு மூன்றாண்டுகள் போர் முடிவுக்கு வந்தது.

❖1940 - இரண்டாம் உலகப் போர்: 13ஆயிரம் பிரித்தானிய மற்றும் பிரெஞ்சுப் படைகள் பிரான்சில் ஜேர்மனியரிடம் சரணடைந்தனர்.

❖1943 - நாசி ஜேர்மனியர் மேற்கு உக்ரைனில் ஆயிரத்து 180 யூதர்களைப் படுகொலை செய்தனர்.

❖1964 - தென்னாபிரிக்க நீதிமன்றம் நெல்சன் மண்டேலாவுக்கு ஆயுட்கால சிறைத் தண்டனை விதித்தது.

❖1967 - சோவியத் ஒன்றியம் வெனேரா 4 விண்கலத்தை வெள்ளிக்கோளை நோக்கி ஏவியது. வேறொரு கோளின் வளிமண்டலத்துள் சென்று தகவல்களைப் பூமிக்கு அனுப்பிய முதலாவது விண்கலம் இதுவாகும்.

❖1987 - மத்திய ஆபிரிக்கக் குடியரசின் முன்னாள் பேரரசர் ஜீன்-பெடெல் பொக்காசாவுக்கு அவரது 13 ஆண்டு கால ஆட்சியில் இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக மரணதண்டனை அறிவிக்கப்பட்டது.

❖1990 - ரஷ்யக் கூட்டமைப்பின் நாடாளுமன்றம் சோவியத் ஒன்றியத்தில் இருந்து ரஷ்யாவின் விடுதலையை முறைப்படி அறிவித்தது.

❖1991 - போரிஸ் யெல்ட்சின் ரஷ்யக் குடியரசின் ஜனாதிபதியானார்.

❖1991 - மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் 65 தமிழர்கள் இனந் தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்டனர்.

❖1999 - நேட்டோ தலைமையிலான ஐ.நா அமைதிப் படை கொசோவோவினுள் நுழைந்தது.

❖2005 - அருளானந்தம் சுரேஸ் ஜோக்கிம் ten bin bowling என்ற விளையாட்டினை றொரண்டோவில் உலக சாதனைக்காக 100 மணித்தியாலங்கள் தொடர்ந்து விளையாடி தனது முப்பதாவது கின்னஸ் உலக சாதனையினை நிலை நாட்டினார்.

❖2006 - கூகுள் எர்த், லினக்ஸ் பதிப்பு வெளியிடப்பட்டது.

❖2006 - காஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கி சூட்டில் தொழிலாளர்கள் 8 பேர் உயிரிழந்தனர். 5 பேர் காயமடைந்தனர்.

### பிறப்புகள்

❖1924 - ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், அமெரிக்காவின் 41ஆவது குடியரசுத் தலைவர்

❖1932 - பத்மினி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (இ. 2006)

❖1942 - பேர்ற் சக்மன், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய் உடற்றொழிலியலாளர்

❖1957 - ஜாவெட் மியன்டாட், பாகிஸ்தானின் முன்னாள் துடுப்பாளர்

### பத்மினி



பத்மினி 1932ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதி பிறந்தார். இவர் பிரபல இந்திய நடிகை ஆவார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி ஆகிய் மொழிப்படங்களில் நடித்தும் நாட்டியமாடியும் புகழ் பெற்றவர். நாட்டியப் பேரொளி எனப் பெயர் எடுத்தவர்.

இவர் நான்கு வயதில் நாட்டியம் ஆடப்பயின்றார்.

பத்து வயதில் அரங்கேறி, ஏறக்குறைய 64 ஆண்டுகள் நாட்டிய உலகில் புகழோச்சி நாட்டியப் பேரொளி என அழைக்கப்பட்டார்.

குச்சிப்புடி, மோகினியாட்டத்திலும் வல்லவர். 17 வயதில் திரையுலகில் புகுந்தார். கல்பனா என்ற ஹிந்திமொழிப் படத்தில் முதலில் தோன்றிய பத்மினி 250 படங்களுக்கு மேல் நடித்தார்.

தமிழில் முதன்முதலில் வேதாள உலகம் படத்தில் நாட்டியம் ஆடினார். என். எஸ். கிருஷ்ணன் தயாரித்த "மணமகள்" என்ற படம்தான் அவரது முதல் தமிழ்த் திரைப்படம். தமிழில் சிவாஜி கணேசன், எம். ஜி. இராமச்சந்திரன், ஜெமினி கணேசன் என அனைத்து முன்னணி நடிகர்களுடனும் இவர் நடித்திருக்கிறார்.

சிவாஜியுடன் மட்டும் 59 படங்களில் நடித்துள்ளார். தில்லானா மோகனாம்பாள், இவரின் நடிப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டாக சொல்லத்தக்க திரைப்படம் ஆகும்.

இத்திரைப்படத்தில் சிக்கல் சண்முகமாக சிவாஜி கணேசனும், மோகனாங்கியாக பத்மினியும் நடித்தனர். வஞ்சிக்கோட்டை வாலிபனில் பத்மினிக்கும், வைஜயந்திமாலாவிற்கும் நடக்கும் நாட்டியப்போட்டிக் காட்சி புகழ் பெற்றது.

இவர் 2006ஆம் ஆண்டு செப்டெம்பர் 24ஆம் திகதி அன்று இரவு மாரடைப்பால் சென்னையில் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமாவின் அதிரடி நியமனங்கள்; இலங்.க்கு ஏற்பட்டிருக்கும் கலக்கம்!

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இடம்பெறவுள்ள சில மாற்றங்கள் இலங்கையின் மீது தாக்கங்களைச் செலுத்துமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. அமெரிக்காவின் அதிகாரக் கட்டமைப்பில் இடம்பெறும் மாற்றங்கள் இலங்கையின் மீது தாக்கத்தைச் செலுத்துவது ஒன்றும் ஆச்சரியமாக விடயம் அல்ல. உலகமயமாதலின் விளைவாக இன்று ஒரு நாட்டில் இடம்பெறும் மாற்றங்கள் இன்னொரு நாட்டின் மீதோ பல நாடுகளின் மீதோ தாக்கங்களை ஏற்படுத்துவது இயல்பானதாகிவிட்டது.



இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகள் தற்போது அவ்வளவு நல்ல நிலையில் இருப்பதாக கூறமுடியாவிட்டாலும் அமெரிக்க அதிகார மட்டத்தில் ஏற்படுகின்ற ஒவ்வொரு மாற்றங்களையும் கூர்ந்து அவதானிக்க வேண்டிய நிலையில் இலங்கை உள்ளது. ஏனென்றால் இந்த மாற்றங்கள் இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை.

கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில் அமெரிக்க இராஜாங்கச் செயலராக ஜோன் ஹெரி பதவியேற்ற பின்னர் ஒபாமா நிர்வாகத்தில் முக்கியமான மாற்றங்கள் இடம்பெறவுள்ளன. இந்த முக்கியமான மாற்றங்களுடன் தொடர்புடைய மூவர் இலங்கைக்குப் பரிச்சயமானவர்கள். கடந்த காலங்களில் இலங்கை விவகாரத்தை கடும்போக்குடன் அமெரிக்கா அணுகுவதற்குக் காரணமானவர்கள். அதைவிட அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு மிகவும் நெருக்கமானவர்கள்.

ஒபாமாவின் முதலாவது பதவிக்காலத்தில் இராஜாங்கச்செயலராக இருந்த ஹிலாரி கிளின்டன் இலங்கை விவகாரத்தை கடும்போக்குடன் கையாள்வதற்குக் காரணமாக இருந்தவர் என்ற கருத்து பொதுவாகவேயுள்ளது. இலங்கையில் போர் முடிவுக்கு வந்து பின்னர் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறல், நிலையான அமைதி, அரசியல் தீர்வு, நல்லிணக்கம் போன்றவற்றை ஹிலாரி கிளின்டனின் நிர்வாகம் கடுமையாக வலியுறுத்தி வந்தமை அவரது காலத்தில் தான்.

ஹிலாரியின் காலத்தில் இருந்தே இலங்கைக்கு எதிரான நகர்வுகளை மேற்கொண்டவர்களான சுசன் ரைஸ் மற்றும் சமந்தா பவர் போன்றவர்களின் கை தொடர்ந்தும் இரா்ஜாங்கத் திணைக்களத்தில் ஓங்கியே இருந்தது. அதைவிட தெற்கு மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான உதவிச்செயலாளராக இருக்கும் றொபேட் ஓ பிளேக்கும்கூட இலங்கை மீதான அழுத்தங்களை குறைக்கும் எண்ணம் கொண்டவராக இருக்கவில்லை. இது தான் ஜோன் ஹெரியின் நிர்வாகம் இலங்கை மீதான அழுத்தங்களை குறைத்துக் கொள்ளாததற்குக் காரணம்.

சுசன் ரைஸ், ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவராக இருப்பவர். இலங்கைக்கு எதிரான ஜெனீவா தீர்மானங்கள் இவரது கண்காணிப்பிலேயே கொண்டு வரப்பட்டன. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீது கொடுக்கப்படும் அழுத்தங்களுக்கு இவர் முக்கியமான காரணி. ஒபாமாவின் நெருங்கிய நண்பரான இவர்தான் ஹிலாரிக்குப் பின்னர் இராஜாங்கச்செயலராவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பெங்காசி விவகாரத்தில் இராஜாங்கத் திணைக்களத்தைத் தவறாக வழிநடத்தியதாக எழுந்த குற்றச்சாட்டினால் இவர் அந்தப் போட்டியில் இருந்து ஒதுங்கிக்கொண்டார். அதனால்தான் ஜோன் ஹெரிக்கு யோகம் அடித்தது. இப்போது இவரை ஒபாமா வெள்ளை மாளிகையில் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமித்துள்ளார். இது முக்கியமானதொரு மாற்றமாக கருதப்படுகிறது.

**அடுத்தவர் சமந்தவர் பவர்**

ஊடகவியலாளராக- பேராசிரியராக இருந்து ஒபாமாவின் ஆலோசகராக மாறியவர். ஐரிஸ் வம்சாவளிப் பெண்ணான சமந்தா பவர் ஒபாமாவின் நெருங்கிய நண்பர் என்பது மட்டுமன்றி அவரது கணவர் ஒபாமாவின் பல்கலைக்கழக தோழர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒபாமாவின் வெற்றிகளுக்குப் பின்னால் இருப்பவராக கருத்தப்படும் சமந்தா பவர், 1990களில் பொஸ்னிய போரின் போது ஒரு ஊடகவியலாளராக பணியாற்றியவர். இவர் தனது பொஸ்னிய போர் அனுபவங்களை வைத்து எழுதிய நூலுக்கு புலிட்சர் விருதும் கிடைத்தது. இந்த நூல் இனப்படுகொலைகளை அமெரிக்கா தடுக்கத் தவறிவிட்டதை கடுமையாகச் சாடும் வகையில் எழுதப்பட்டது. இவர், ஒபாமா அதிபராவதற்கு முன்னரே இவர் ஒபாமாவின் ஆலோசகராக இருந்து வந்தவர். இனப்படுகொலை விவகாரங்களைக் கையாளும் நிபுணராக- மனித உரிமைகள் விவகாரத்தில் உறுதியான போக்கைக் கடைப்பிடிப்பவராக, இருக்கும் சமந்தா பவர் இதுவரை ஒபாமாவின் தேசிய பாதுகாப்பு சபையில் அங்கம் வகித்து வந்தவர். இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் விவகாரங்களில் அமெரிக்கா கடுமையாக நடந்து கொள்ளவேண்டும் என்பதை ஒபாமாவுக்கு வலியுறுத்திய இவர் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு முக்கிய காரணமாக இருப்பவர். சுசன்ரைஸ் இராஜாங்கச் செயலராக நியமிக்கப்பட்டால் ஐ.நாவுக்கான தூதுவராக சமந்தா பவர் பொறுப்பேற்பார் என்பது ஏற்கனவே தெரிந்த விடயம்தான். ஆனால், இராஜாங்கச் செயலராக சுசன் ரைஸ் பொறுப்பேற்கமுடியாததால் சமந்தா பவர் ஐ.நா. தூதுவர் பதவியை பெறுவது சில மாதங்கள் தள்ளிப் போயுள்ளது. ஐ.நா. தூதுவரான பின்னர் சமந்தா பவர் மனித உரிமைகள் விவகாரங்களில் கூடுதலான அக்கறையை செலுத்துவார் என்று அமெரிக்க ஊடகங்கள் கணிக்கின்றன. தற்போது அவர் முன் முக்கிய பிரச்சினையாக சிரிய விவகாரம் இருந்தாலும் இலங்கை விவகாரத்திலும் அவர் கூடுதல் கவனம் செலுத்துவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

அடுத்து இராஜாங்கத் திணைக்களத்தில் இடம்பெறவுள்ள மற்றொரு மாற்றம் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான உதவி இராஜாங்கச் செயலராக உள்ள றொபேட் ஓ பிளேக்கிற்குப் பதிலாக இந்திய வம்சாவளிப் பெண்ணான நிஷா தேசாய் பிஸ்வால் பொறுப்பேற்கவுள்ளதாகும். 2009 இல் இலங்கைத் தூதுவர் பதவியில் இருந்து சென்ற பின்னர் பிளேக் தெற்கு மத்திய ஆசியப் பிராந்திய விவகாரங்களைக் கையாண்டு வந்தார். அவரது கூடுதல் கவனம் இலங்கை மீது இருந்து வந்தது. ஆனூல், புதிய உதவி இராஜாங்கச் செயலராகப் பொறுப்பேற்கவுள்ள நிஷா தேசாய் யுஎஸ் எய்ட்டில் தான் பணியாற்றியவர். அவரது போக்கு எத்தகையதாக இருக்கும் என்று கணிக்கமுடியாது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இடம்பெறவுள்ள இந்த மாற்றங்கள் இலங்கையில் தாக்கத்தை செலுத்த வாய்ப்புகள் அதிகம்.

ஏனென்றால், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகள் எப்போதுமில்லாதளவுக்கு இப்போது நெருக்கமடைந்துள்ளது. இது அமெரிக்காவின் பார்வையில் அதன் நலனுக்கு எதிரானது. இந்தியப் பெருங்கடலும் பசுபிக் பிராந்தியமும் அமெரிக்காவின் பாதுகாப்புத் திட்டத்தில் முக்கியமானவை. இத்தகைய பின்னணியில் அமெரிக்காவுடனான உறவுகள் ஒரு பக்கத்தில் தேய்ந்து கொண்டிருக்க சீனாவுடன் இலங்கை நெருங்கிப் போவதை அமெரிக்கா விரும்பாது.

ஒபாமாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக சுசன் ரைஸ் பொறுப்பேற்கவுள்ள நிலையில் சீனாவுடன் பாதுகாப்பு ரீதியாக நெருங்கிவரும் இலங்கையை அவர் புறந்தள்ளிச் சிந்திக்க முடியாது. அதே வேளை மனித உரிமைகள் விவகாரத்தில் கூடுதல் கவனம் செலுத்துகின்ற சமந்தா பவர் ஐ.நா.வில் இலங்கை விவகாரத்தை இறுக்கிப் பிடிக்கின்ற ஒருவராக மாறலாம். சீனாவுடன் கொண்டுள்ள உறவை வைத்து இந்தியாவை மடக்கிப்போடுகின்ற உத்தியை கையாளும் கொழும்புக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் ஏற்படப்போகும் இந்த மாற்றங்கள் திண்டாட்டத்தையே ஏற்படுத்தக் கூடும்.

இராணுவ ஆய்வாளர்-
ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தச் சட்டம் மக்களின் விருப்புடன் கொண்டுவரப்பட்டதல்ல

## ஜனாதிபதியின் செயலாளர்

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் நாட்டின் நிர்வாக முறையில் ஏற்படுத்தப்பட்ட முழுமையான மாற்றம் நாட்டு மக்களின் விருப்பதற்கிணங்க மேற்கொள்ளப்பட்டதல்ல என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

காணி சீர்திருத்த ஆணைக்குழு ஏற்பாடு செய்திருந்த "ரன்பிம" காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஜனாதிபதியின் தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய லலித் வீரதுங்க, நாட்டு மக்களின் விருப்பமோ அல்லது சர்வஜன வாக்கெடுப்போ இன்றி அரசியமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் நாட்டின் நிர்வாக முறைமை முழுமையாக மாற்றப்பட்டது.



அன்று மேற்கொள்ளப்பட்ட வடமாரட்சி நடவடிக்கையை நிறுத்துமாறு இந்திய உயர்ஸ்தானிகர் அப்போதிருந்த இலங்கை ஜனாதிபதியைக் கோரியிருந்தார். நாட்டை ஆக்கிரமிப்பதா? அல்லது 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதா என்ற வகையில் அந்த அழுத்தம் அமைந்திருந்தது.

மாகாண சபைகள் மூலம் எந்தளவு சேவைகள் கிடைக்கக் கூடியதாகவுள்ளன என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு மக்களுடையதே. அன்று சிலர் வசம் இருந்த இரகசியங்கள் இன்று வெளிப்பட்டு வருகின்றன.

அப்போது தாம் உதவி அரசாங்க அதிபராக பதவி வகித்தபோது மக்களுக்கு காணித்துண்டொன்றைவழங்குவதற்கு, தமக்கு அதிகாரம் இருந்ததாயினும் மாகாண சபை மற்றும் மாவட்டச் செயலாளரிடம் காணிகளுக்கான உரிமைகள் இருந்தமையால் ஒரு காணித்துண்டை ஒருவருக்கு வழங்குவதற்கு 20-30 இடங்களுக்கு அலைய வேண்டிய நிலை இருந்ததாகவும் அவர் கூறினார்.

சில அரச அலுவலகங்களால் மக்களுக்கு எந்தப் பயனும் கிட்டுவதில்லை. இத்தகைய அலுவலகங்கள் மூடப்படவேண்டும் என ஜனாதிபதி கூறுவதுண்டு. அதிகாரிகள் என்ற வகையில் தீர்மானமெடுப்பதற்கு எமக்கு பயமாக உள்ளது. ஆனால், மக்களுக்கு சேவை செய்யாத நிறுவனங்கள் பிரயோசனமற்றவை என ஜனாதிபதி கூறுகின்றார்.

பாராளுமன்ற முன்னாள் செயலாளர் நாயகத்துடன் நான் கலந்துரையாடிக்கொண்டிருந்த போது, அவர் என்னிடம் "நாம் இருவரும்" மேல் மாகாண சபை பிரதேசத்திலேயே வாழ்கின்றோம். எனினும் மாகாண சபை மூலம் எமக்கு என்ன சேவை கிடைத்துள்ளது என அவர் வினவினார். அப்போது தான் நானும் சிந்தித்துப் பார்த்தேன். இந்த மாகாண சபை, இருந்தாலும் இல்லாவிட்டாலும் நான் இங்கு வாழமுடியும் தானே என்பது, அப்போது தான் எனக்குப் புரிந்தது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதிகள் அத்தனையும் நிறை வேற்றியுள்ளார். காணியற்ற வர்களுக்கு காணி வழங்குவதாக கூறிய வாக்குறுதி மட்டுமன்றி, அனைத்து வாக்குறுதி களையும் முறையாக நிறை வேற்றியுள்ளார் என்கிறார். (அ-2)

# காலநிலையால் ஏற்பட்ட மரணங்கள் தொடர்பில் ஆராய குழு நியமனம்

(கொழும்பு)

நாட்டின் சீரற்ற கால நிலை காரணமாக இடம் பெற்றுள்ள மரணங்கள் மற்றும் காயமுற்றவர்கள் தொடர்பில் ஆராய்வதற்கு குழுவொன்றை உடனடியாக நியமிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரது செயலாளர் லலித் வீரதுங்கவைப் பணித்துள்ளார்.

மீனவர்களின் மரணத் திற்கான காரணம் மற்றும் மோசமான காலநிலை தொடர் பில் மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு அறிவித்தல் வழங்கப்பட்டதா என்பவை குறித்து ஆராயும் பொறுப்பு மேற்படி குழுவுக்கு வழங்கப்படவுள்ளது.

அக் குழு இது தொடர்பில் ஆராய்ந்து காலதாமதமின்றி அறிக்கையொன்றைத் தம்மிடம் கையளிக்க வேண்டுமென்றும், தமது செயலாளரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

டாக்டர் டபிள்யு. மொஹட்டால தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இக் குழுவில் ஏ.திஸாநாயக்க, சி.ராஜபக்ஷ ஆகியோர் அங்கம் வகின்றனர். (அ-2)

# சூரிய சக்தி மின் விநியோகம்



நாட்டின்பிரதான நகரங்களில் ஒளி ரும் மின் விளக்கு களை சூரியசக்தி மூலம் ஒளிர வைப்பதற்கான வேலைத் திட்டம் நேற்றையதினம் நுகேகொட வாராந்த சந்தைக்கு அருகில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

சுற்றாடல் மற்றும் மீள் உற்பத்தி வலுசக்தி அமைச்சு இத் தகவலைத் தெரிவித்துள்ளது.

தேசிய சுற்றாடல் வாரத்திற்கு அமைவாக, இலங்கை நிலையான சக்திவள அதிகார சபையின் ஏற்பாட்டில், சகல நகரங்களிலும் காணப்படும் மின் விளக்குகளை சூரிய சக்தி மூலம் ஒளிர வைப்பதற்கான திட்டம் முன்னெடுக்கப்பட்வுள்ளது. (அ-2)




பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் இன் உலக சுற்றாடல் தினம் அண்மையில் அனுசரிக்கப்பட்டது. இந் நிகழ்வில் குறித்த நிதி நிறுவனத் தின் யாழ். மாவட்ட முகாமையாளர் ரீ.கே. ஆனந்தராஜா வாடிக் கையா ளர் ஒருவருக்கு மாமரக் கன்று ஒன்றை வழங்குவதையும், இந் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இலங்கை மீனவர்களுக்கு உலக மீனவர்கள் இரங்கல்

காலநிலை சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உலக மீனவ சமூகம் கவலையை வெளியிட்டுள்ளது.

கடும் காற்றின் சீற்றத்தினால் அண்மையில் பெரும் எண்ணிக்கையிலான மீன்பிடிப் படகுகள் காணாமற் போனதுடன் 50 இற்கும் மேற்பட்ட மீனவர்களும் உயிரிழந்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவிப்பதாக உலக மீனவ சமூகத்தின் செயலாளர் அலிஷா தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் பாரிய துயரங்களை எதிர்நோக்க நேரிட்டமைக்கான காரணங்கள் கண்டறியப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர, வளிமண்டலவியல் திணைக்கள ஆணையாளர் உள்ளிட்ட பலரிடம் தனித்தனியாக இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அரசாங்க அதிகாரிகளின் கவனயீனத்தினால் இவ்வாறான நிலைமை ஏற்பட்டதா என்பது விசாரணை செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். அனர்த்த எச்சரிக்கை தொடர்பில் வினைத்திறனான கட்டமைப்பு ஒன்று ஒருவாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர்தெரிவித்துள்ளார். (அ-2)

### சட்டமா அதிபரின் மேன்முறையீட்டு மனு ஒத்துவைக்கப்பட்டது

பாராளுமன்ற தெரிவிக்குழு தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு அனுமதிக்குமாறு கோரி சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நேற்று முன்தினம் உயர் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசரான ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கையை செல்லுபடியற்றதாக்கிய மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்வதற்கு சட்டமா அதிபர் விசேட அனுமதியைக் கோரிநின்றார்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் இருவர் சட்டமா அதிபரின் மனுவை ஏற்கக் கூடாது என்று நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இந்த மனுக்களை ஆராய்ந்ததன் பின்னரே உயர் நீதிமன்றம் சட்டமா அதிபரின் மனுவை ஒத்திவைத்துள்ளது. (அ-2)

# முஸ்லிம் மக்களுக்கு பல்கலைக்கழகமா? நாம் அங்கீகரிக்கப் போவதில்லை

## பொதுபல சேனா போர்க்கொடி

இலங்கை பௌத்த சிங்கள இராச்சிய நாடாக இருப்பதனால் இங்கு முஸ்லிம்களுக்கென்றொரு பல்கலைக்கழகம் சவுதிஅரேபியாவின் உதவியுடன் உருவாகுவதை பொதுபலசேனா ஒருபோதும் அங்கீகரிக்காது.

இந்நாட்டில் சிங்களம், தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற போதும் தனியாக ஒரு இனத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் எந்தவொரு நிறுவனத்தையும் எமது அமைப்பு ஏற்றுக் கொள்ளாது என்று பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொதுபல சேனாவின் கிழக்கின் முதலாவது மாவட்ட மாநாடு நேற்றுமுன்தினம் அம்பாறை நகரில் நடைபெற்றது. இம் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவின் ஏற்பாட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை காத்தான்குடியிலுள்ள ஹிஸ்புல்லா அரங்கில் முஸ்லிம்களுக்கான பல்கலைக்கழகம் உருவாகுவதற்கான சகல ஒப்பந்த நடவடிக்கைகளும், சவுதிஅரேபியாவின் உதவியுடன் கைச்சாத்திட உள்ளமை நன்கு அறிந்த விடயமே. இதற்காக 40 ஏக்கர் காணிகள் ஒதுக்கப்பட்டு அப்புதிய பல்கலைக்கழகத்திற்கான பெயர் சவுதிஅரேபியாவின் மன்னனின் மகனுடைய அப்துல் மலிஜ் எனும் பெயர் வைக்கப்பட வேண்டும் என்ற நிலையிலேயே இப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட இருக்கின்றது. இப்பல்கலைக்கழகத்தில் விஹாமி என்ற இஸ்லாமிய சட்ட அம்சங்களைக் கொண்ட பாடத்திட்டம் உள்வாங்கப்படவுள்ளது. இவற்றைத் தடை செய்வதற்கு அரசு முன்வர வேண்டும்.

எமது பௌத்த கலாசாரம் கொண்ட நாட்டை ஐரோப்பிய இனத்தவர்கள் சுமார் ஐநூறு வருடங்கள் தமது ஆட்சிக் குட்படுத்திய போதும், கண்டி இராச்சிய காலத்திலே கண்டி அரசனால் சிறை பிடிக்கப்பட்ட றொபட் நொக்ஸ் என்பவர் சிறையிலிருந்து கொண்டே இலங்கையின் வரலாறு என்ற நூலை எழுதினார். அந்நூலிலே கண்டியிலிருந்து திருகோணமலை வரையிலான பகுதியிலே 96 சிங்கள கிராமங்கள் இருந் ததாக எழுதப்பட்டுள்ளது. தற்போது அக் கிராமங்களுக்கு என்ன நடந்தது என கேள்வி எழுப்பினார்.

கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தில் திகாமடுல்ல மாவட்டத்தில் 600 பொலிஸார் கொல்லப்பட்டனர். அறந்தலாவையில் பிக்குகள் கொலை செய்யப்பட்டனர்.

ஆனால், அந்த நிலை இன்று இல்லை. பொதுபல சேனா அமைப்பு கிழக்கிற்கு வரவுள்ளது என்ற செய்தி கேட்டு அக்கரைப்பற்று, சம்மாந்துறை, கல்முனை, காத்தான்குடி, ஏறாவூர் போன்ற பிரதேசங்க ளில் முஸ்லிம்கள் ஹர்த்தால் செய்தனர். இன்று நடைபெறும் மாநாட்டைக் கூட அம்பாறையில் நடத்தக் கூடாது என்று ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் எழுதி நேரில் சென்று கொடுத்துள்ளனர் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜோதிடக் களம்

# புதிராய் தெரியும் புத்திர பாக்கியம்

மனித வாழ்க்கையில் முக்கிய அங்கமான திருமணமே முறையான வாரிசுகளை -சந்ததிகளை உருவாக்குவதற்காகத்தான் இப்பிரபஞ்சத்தில் சிந்திக்கத் தெரிந்த மனித இனம் மட்டுமே இயற்கையுடன் போராடி பல யுகங்களாக தன் இனத்தை விருத்தி செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறது. சிந்திக்கத் தெரியாத உயிரினங்கள் எத்தனை யோ அழிந்து விட்டன.பூமியில் பிறந்த பெரும்பாலான மனிதர்கள் தன்மூலம் ஒரு வாரிசு உலகில் இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் தான் இருப்பர். மழலைச் செல்வத்தை விரும்பாத மனிதன் இல்லை .

ஒருவருக்குத் திருமணம் ஆகும் வரை ஏன் இன்னும் திருமணம் ஆகவில்லை ?வயது போய்க் கொண்டே இருக்கிறதே என்று அக்கம் பக்கத்தினர் ,உறவினர்கள் அன்றாடம் கேட்பார்கள். அதேபோல் திருமணம் ஆனவுடன் ஏதாவது விசேடம் உண்டா? என்று ஆரம்பித்து விடுவார்கள். திருமணமான பெரும்பாலான தம்பதிகளே சீக்கிரம் குழந்தை பெற்று கொஞ்சி மகிழ ஆசையுடன்தான் இருப்பர்.ஏதாவது சூழ்நிலை காரணமாக தாமதமானால் அவர்களை காயப்படுத்தி பேசி மகிழ்வதில் அக்கறை காட்டும் பலரை நாம் பார்க்கின்றோம்.தாமதமாக குழந் தை பெற்றுக்கொள்ளலாம் என்ற எண்ணம் கொண்டவர்களையும்கூட பேசியே விரைவாக குழந்தை பெற்றுக் கொள்ளச் செய்து விடுவர்.

### புத்திர ஸ்தானம்

ஒருவர் ஜாதகத்தில் லக்னத்துக்கு 5ஆம் இடம் புத்திரஸ்தானம். 5ஆம் இடம் 5இல் உள்ள கிரகங்கள்,5ஆம் இடத்தைப் பார்க்கும் கிரகங்கள் 5 ஆம் அதிபதி, 5ஆம் அதிபதி இருக்கும் வீடு , 5 ஆம் வீடு அதிபதியுடன் சேர்ந்த கிரகங்கள்,பார்க்கும் கிரகங்கள், புத்திரகாரக கிரகமான குருவின் நிலை போன்றவற்றை ஆராய்ந்து புத்திரயோகத்தைக் கண்டறியலாம். ஆணா? பெண்ணா? நாட்கடந்து குழந்தை பிறக்குமா? தத்து புத்திர யோகமா?புத்திர தோஷம் உண்டா போன்ற அனைத்தையும் புத்திர ஸ்தானத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

### புத்திர தோஷம்

லக்னத்திற்கு 5ஆம் இடத்திற்கு பாவ கிரகங்கள்,நீச கிரகம் இருந்தாலும் ,5ஆம் அதிபதி பாவ கிரகச் சேர்க்கை பார்வை பட்டாலும் 5 ஆம் அதிபதி நீசம் ,காரக கிரகமான குரு நீசம், குரு,சூரியன் சாரம் பெற்றாலும் புத்திர தோஷம் ஏற்படும். புத்திர தோஷத்தினால் கருக்கலைதல், குழந்தை பிறந்து இறத்தல், தாமதமாகப் பிறத்தல்,உடல் அங்கவீனம் ஏற்படுதல்,ஆண் , பெண் குழந்தைகளில் ஏதேனும் ஒன்று மட்டும் பிறத்தல் ,புத்திரப்பிரிவு போன்றவை ஏற்படும்.

### குருநீசம்

குழந்தை பிறப்பிற்கு அடிப்படையாக இருக்கும் காரக கிரகம் குரு; முழு சுப கிரகம் ,எந்த லத்னமாக இருந்தாலும் குரு நீசம் பெற்றிருத்தல் நல்லதல்ல,குழந்தை பிறப்பு தாமதம் , வயோதிப வயதில் பிள்ளைகள் பிறத்தல், பிறந்து இறந்து போதல், குழந்தைகளால் நன்மை இல்லாமல் இருப்பது, பிரிவு போன்றவை ஏற்படும். சிம்ம ராசி அல்லது லக்னத்திற்கு 5,8க்குரிய குரு நீசம் பெற்றால் புத்திர சம்பத்து குறைவு அல்லது இருக்காது.5ஆம் இடத்தில் வேறு ஏதாவது கிரகம் வலுப்பெற்றிருந்தால் பாதிப்பு குறையும்.ஆனால் சிம்மத்திற்கு 5இல் வேறு எந்த கிரகமும் மூலத் திரிகோண ஆட்சி உச்சம் பெறமுடியாது .யோக கிரகமான செவ்வாய், சுக்கிரன் சேர்ந்தோ அல்லது தனித்தோ 5இல் இருந்தால் புத்திர பாக்கியம் உண்டு. கன்னி லக்கினம் அல்லது ராசிக்கு 5ஆம் இடத்தில் குரு நீசம் பெற்று அந்த வீட்டு அதிபதியும் 6,8,12இல் இருந்தால் புத்திரர்களால் நன்மை இருக்காது. ஆண்பிள்ளை பிறந்தாலும் தந்தையை விட்டு பிரிவார். இந்த அமைப்பு உடையவரின் முதல் மனைவியும் ஜாதகரை விட்டுப் பிரிவார். விருச்சிக லக்னம் அல்லது ராசிக்கு 5ஆம் அதிபதிக்கு நீசமானாலும் ஆண் வாரிசு இல்லாமல் இருப்பது காலத்திற்கு உதவா மல் போவது, பிறருக்கு தத்துக் கொடுக்க வேண் டிய நிலை ஏற் படும்.



### ஐந்தாம் அதிபதி நீசம்

புத்திர பாக்கியம் ஏற்பட பூர்வ புண்ணிய பலன் இருக்க வேண்டும். பூர்வ புண்ணிய ஸ்தானமான 5ஆம் இடத்தை அதனால்தான் பார்க்கிறோம்.ஒவ்வொரு லக்னத்திற்கோ அல்லது ராசிக்கோ வரும் 5ஆம் அதிபதி நீசம் பெற்றால் புத்திர ஸ்தானம் பாதிக்கப்படும் .மேஷ ராசி அல்லது லக்னத்திற்கு சூரியனும் ரிஷபம் ,கும்பத்துக்கு புதனும்; மிதுனம் மகரத்திற்கு சுக்கிரனும் சிம்மம் விருச்சிகத்திற்கு குருவும் கன்னி துலாமிற்கு சனியும் கடகம் தனுசுக்கு செவ்வாயும் மீன லக்னத்திற்கு 5ஆம் அதிபதி சந்திரனும் நீசமானால் பூர்வ புண்ணியம் கெட்டு ,புத்திர விருத்தி, புத்தி முதலான இன்றியமையாத விடயங்கள் எல்லாம் பலம் குறைந்து விடும். இதனால் புத்திர தோஷம் ஏற்பட்டு விடும்.

### நாள் கடந்து குழந்தை பிறத்தல்

நல்ல உடல் நலத்துடன் இருக்கும் சிலருக்கு திருமணமாகி இரண்டு,மூன்றாண்டுகள் கடந்தும் குழந்தை பாக்கியம் கிடைக்காமல் புதிராய் இருக்கிறது. அதற்குள் சுற்றியிருப்பவர்கள் ஜாடை பேசுவது,மலடி என்ற வார்த்தைகளால் வசை பாடுவது, நேரடியாகவோ மறைமுகமாகவோ குத்திக் காட்டிப் பேசுவதால் ஆண்களை விட பெண்கள் அதிகம் மனதளவில் பாதிக்கப்படுகிறார்கள்.சிலருக்கு ஏன் இப்படி குழந்தை பிறப்பு தாமதமாகிறது.

சனி,ராகு-கேது,குரு ஆகிய, கிரகங்கள் தனித்தோ,சேர்ந்தோ 5ஆம் இடத்தில் இருந்தால் புத்திர பாக்கியம் தாமதமாகும். லக்னாதிபதி 5 ஆம் அதிபதி சொந்த வீட்டில் இல்லாமல் ஏனைய வீடுகளில் இருந்து 5ஆம் இடத்தைப் பார்க்கவில்லையென்றால் ஐந்து வருடத்திற்கு மேல் தான் குழந்தை பிறக்கும்.லக்னத்தில் சனி, 8இல் குரு, 12இல் செவ்வாய் இருந்து 5ஆம் இடத்திற்கு சுப கிரகக் பார்வை இருந்தால் காலங்கடந்து பிறக்கும். 5- ஆம் இடத்தில் 6,8,12 ஆம் அதிபதி தனித்தோ,சேர்ந்தோ இருந்து குரு ,சுக்கிரன் பார்வை பெற்றால் நாள் கடந்து குழந்தை பிறக்கும். 5ஆம் இடம், 5ஆம் அதிபதி , குரு கெட்டி ருந்து அல்லது குரு பலமிழந்திருந்து 10இல் செவ்வாய் ஆட்சி உச்சம் பெற்றாலும் நாள் கடந்தே குழந்தை பிறக்கும்.சனியுடன் 5ஆம் அதி பதி கூடி 8இல் இருந்தாலோ அல்லது குருவோடு 5ஆம் அதிபதி சேர்ந்து 9இல் இருந்தாலோ அந்திமக் காலத்தில் குழந்தை பிறக்கும்.

### ஆணா? பெண்ணா?

இயற்கையாகவே குழந்தை பிறந்தவுடன் ஆணா? பெண்ணா? என்பது தான் முதல் கேள்வியாக இருக்கும்.5ஆம் அதிபதி ,5ஆம் அதிபதி நிற்கும் நட்சத்திராதிபதி ,5இல் உள்ள கிரகம் அதன் நட்சத்திராதிபதி ஆண் கிரகமானால் ஆணாகவும் பெண் கிரகமா னால் பெண்ணாகவும் கிரக வலிமையைப் பொறுத்து முதலில் ஆண்-பெண் பிறத்தல் நிர்ணயிக்கப்படுகிறது. சூரியன், செவ்வாய், குரு ,சனி இருந்தா லும் பார்த்தாலும் ஆண் குழந்தையும் சந்திரன், சுக்கிரன் புதன் இருந் தால் பெரும்பாலும் பெண் குழந்தையும் பிறக்கும்.5இல் பாவ கிரகங்கள் இருந்தால் முதலில் பெண்குழந்தை பிறத்தலே உத்தமம். 5ஆம் இடத் திற்கு குரு பார்வை ஏற்பட்டால் வாரிசு யோகம் உண்டு. பெண் கிரகம் வலுப் பெற்றிரு க்கும் ஜாதகருக்கு இரண்டாவது குழந்தை ஐந்து வருட இடைவெளியில் பிறந்தால் ஆண்குழந்தை பாக்கியம் சிலருக்கு கிட்டும். இன்றைய கால கட்டத்தில் ஆணோ ,பெண்ணோ ஆரோக்கிய மான குழந்தை பெறுவதே வரம்.

### நாகதோஷம்

இவ்வுலகைத்தாங்கி நிற்கும் ஆதிசேஷனின் இனமான பாம்புகளைக் கொள்வது ,அடிப்பது, தீமை செய்வதால் பிறவிகள் தோறும் தொடர்ந்து நாகதோஷத்தால் புத்திர தோஷம் ஏற்படும். என்பது சாஸ்திர பிரமாணம். லக்னத்திற்கு 1,5,9 இல் ராகு அல்லது கேது இருந்தாலோ ,5ஆம் இடத்துடன் ராகு-கேது; குருவுடன் ராகு-கேது சேர்ந்தால் புத்திர தோஷத்தைத் தரவல்ல நாக தோஷத்தை உண்டாக்கிவிடுகிறது. நாகதோஷம் உள்ள ஜாதகருக்கு புத்திரப்பேறுகிட்ட நீண்ட நாட்கள் ஆகும்.

### நாகப் பிரதிஷ்டை

பூர்வ ஜென்மத்தில் அதாவது முற்பிறவியில் செய்த பாவத்தால் உண்டாண நாக தோஷத்திற்கு பரிகாரமாக நாகப் பிரதிஷ்டை செய்தால் தோஷம் விலகி புத்திர பாக்கியம் கிடைக்கும் என்பது அனுபவ உண்மை.ஒரு முகமோ அல்லது ஐந்து முகமோ உடைய இரண்டு சர்ப்பங்கள் பின்னியபடி இருப்பது போல் கருங்கல்லில் செய்து ஒரு மாதம் தண்ணீரிலும் ஒரு மாதம் தானியத்திலும் ஒரு மாதம் எண்ணெயிலும் மூழ்கி இருக்குமாறு வைத்து ஒரு சுபமுகூர்த்த நன்னாளில் அரசு,வேம்பு இரண்டும் இணைந்துள்ள இடத்தில் பீடம் அமைத்து வேதியர்களைக் கொண்டு பிரதிஷ்டை செய்து ஏழை களுக்கு அன்னதானம் வழங்க தோஷ நிவர்த்தி ஏற்பட்டு குழந்தை பிறக்கும். பசு,பூமி,எள்,பொன் ஆகியவற்றை தானம் செய்தால் நாகதோஷம் மட்டுமின்றி கால சர்ப்ப தோஷமும் விலகி வாரிசுகளும் தோஷமின்றி யோகமுடன் வாழ்வர்.

### அரச மர வழிபாடு

அடிப்பாகத்தில் பிரம்மாவும் நடுப்பாகத்தில் விஷ்ணுவும் ,நுனிப்பாகத்தில் ருத்ரனும் என மும்மூர்த்திகள் வாசம் செய்யும் அரச மரத்தைச் சுற்றுவதால் வழிபடுவோரின் குறையை நீக்கி புத்திர பாக்கியம் உண்டாக மும் மூர்த்திகள் அருள்புரிகின்றனர். திங்கட்கிழமையில் வரும் அமாவாசையிலோ அல்லது ஞாயிற்றுக்கிழமையில் வரும் சப்தமி திதியிலோ அல்லது செவ்வாய்க்கிழமையில் வரும் சதுர்த்தி திதியி லோ அரச மரத்திற்கு பூஜை செய்து ஈரத்துணியுடன் 108 முறை வலமாக சுற்றி வந்து வழிபாடு செய்து விரதமிருக்க வேண்டும். அவ்வாறு கடைப்பிடித்தால் கொடிய வியாதியும குணமடையும் என்பது ரிஷிகளின் வாக்கு.

இவ்வுலகில் பல கோடிக்கணக்கான மரங்கள் இருந்தும் நம் முன்னோாகள் அரச மரத் தை ஏன் சுற்றி வரச் சொன்னார்கள் ?அரசு மரத்தில் தாமிரச்சத்தும் மின்சாரமும் இருக் கின்றது. ஒரு அரச மரம் தினந்தோறும் 150 குடும்பங்கள் சுவாசித்து விடும் கரியமில வாயுவை பிராண வாயுவாக மாற்றும் திறன் கொண்டுள்ளது.சூரிய உதயத்துக்கு 40 நிமிடத்திற்கு முன்பு எழுந்து சுத்தமாகக் குளித்து ஈரத் துணி அணிந்து கொண்டு அரச மரத்தைச் சுற்ற வேண்டும். அதிகாலைக் குளிரில் சுவாசிக்கும் திறன் அதிகமாகி ஒக்சிசனை அதிகமாக சுவாசிப்பதால் உடல் தூய்மை அடையும் .அரச இலை நுனியிலிருந்து காந்தசக்தி கீழே பூமிக்குச் செல்லும்.ஈரத்துணியால் அந்த காந்தசக்தி உடலில் சில மாற்றங்களை ஏற்படுத்தும்.நரம்புத் தளர்ச்சி குணமடையும்.அரச மரத்தைச் சுற்றியிருக்கும் காற்று பெண்களின் கருப்பையிலுள்ள ஆணிடம் இருந்து செல்லும் விந்தணுக்களை உணவாகக் கொள்ளும் பூச்சிகளை அழிக்கும். இதனால் ஆணின் அணுக்கள் பெண்ணின் கரு முட்டையோடு சேர வழிபிறக்கிறது.புத்திர சம்பத்தைத் தடுக்கும் உடற் சுற்றிலுள்ள குறைகளை சரி செய்து புத்திர பாக்கியம் ஏற்பட வழி செய்கிறது.இந்த அறிவியல் உண்மையைத்தான் இறைவன் மீது ஊற்றி வழிபடுமாறு நம் முன்னோர்கள் கூறியுள்ளனர்.அரச மரத்தை முறைப்படி சுற்றி வழிபட்டு வந்தால் புத்திர தோஷம் நீங்கி புத்திர பாக்கியம் பெற்று சிறப்புடன் வாழலாம்.

# வடக்கு, கிழக்கில் காணியற்றவர்களுக்கு காணி உரிமை கிடைத்துள்ளது-ஜனாதிபதி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் ஒரு அங்குல நிலமேனும் சொந்தமாக இல்லாதவர்களுக்கு தற்போது காணி உரிமை கிடைத்துள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அலரி மாளிகையில் நடைபெற்ற ரன்கிம காணி உறுதி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு அங்குலம் காணியையேனும் சொந்தம் என சொல்லிக் கொள்ள முடியாத சூழ்நிலையில் பலர் இருந்தனர்.அவ்வாறான ஒரு சமூகத்தவருக்கு தற்போது காணியுரிமை கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்தக் காணிகளை விற்கவோ குத்தகைக்கு விடவோ முடியும். எனி னும் தயவு செய்து இந்தக் காணிகளை விற்க வேண்டாம் உங்கள் பிள்ளைகளும் இதனை அனுபவிக்க இடமளிக்கவும்.

உங்கள் வீட்டுத்தோட்டத்தில் பூக்கன்றுகளுக்கு பதிலாக ஒரு மிளகாய் செடியையேனும் நாட்டவும். பழங்களையோ மரக்கறி வகைகளையோ பயிரிடுவதன் மூலம் நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவுரை கூறினார்.

அத்தோடு நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்தவர்களும் இங்கு வந்துள்ளனர். நாட்டு மக்களுக்கு பேதமின்றி சேவையாற்றுகின்றோம். இந்த நாட்டில் அனைவரும் மகிழ்ச்சியுடனும் சுய கௌரவத்துடனும் வாழ வேண்டும்.

நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்ப தனை ஒருபோதும் மறந்துவிட வேண்டாம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் வடக்கு, கிழக்கு மாகா ணங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு ரன்பிம காணித்திட்டத்தின் கீழ் காணி உரிமைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடக்கதக்கது. (அ-2)

# நீராவியடி விநாயகர் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா இன்று புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் நடைபெறவுள்ளன.


மஹோற்சவத்தில் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 2.30 மணிக்கு புதிய தேர் வெள்ளோட்ட நிகழ்வும் மாலை 6 மணிக்கு சப்பறமும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தமும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆம் திருத்தம் தொடர்பில் கட்சிகள் சுயாதீனமாக கருத்து வெளியிடலாம்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

**அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொட ர்பில் கட்சிகள் தமது கருத்துக்களை சுயாதீனமாக தெரிவிக்க முடியும். இந்த விடயத்தில் யாரும் அநா வசிய மாகத் தலையீடுகளை மேற்கொள்ளமாட்டார்கள். அதனூடாகவே புதிய அரசியலமைப்பின் செயற்பாட் டிலும் சுயாதீனமாக செயற்பட முடியுமென ஜனாதி பதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

அமைச்சர்களான சம்பிக்க ரண வக்க மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரை நேற்று முன்தினம் சந் தித்து பேச்சுவார்த்தை நடத் திய ஜனா திபதி இந்த விடயங்களைத் தெரிவித் ததாக ஜனாதிபதி பேச்சாளர் மொஹான் சமரநாயக்க குறிப்பிட்டார்.

மேலும் 13 ஆவது திருத்தச் சட் டம் தொடர்பில் பாராளுமன்ற செயற் பாடுகளில் சுயாதீனமாக செயற்பட எவ்விதமான தடையும் இல்லையென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகளின் பிரதி நிதிகளை நேற்று முன்தினம் மாலை தனித்தனியே ஜனாதிபதி சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். இதன் போது 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மேற் கொள்ளப்படவுள்ள திருத்தங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இது குறித்து ஜனாதிபதியின் பேச்சாளர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதியை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளி கட்சிக ளான ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஈ.பி.டி.பியினர் நேற்று முன் தினம் மாலை அலரிமாளிகையில் தனித்தனியே பேச்சுவார்த்தை நடத்தி னர். இதன்போது 13 ஆவது திருத் தச்சட்டம் உட்பட அரசியலமைப்பில் கொண்டு வரப்படுகின்ற திருத்தங் கள் மற்றும் செயற்பாடுகள் தொடர் பில் சுதந்திரமாகவும் சுயாதீனமா கவும் செயற்பட முடியும் என ஜனாதி பதி கூறினார்.

குறிப்பாக 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தத்தமது கருத்துக் களை சுயாதீனமாக தெரிவிக்க முடி யும். யாரும் அநாவசியமாக தலை யீடுகளை மேற்கொள்ளமாட்டார் கள். அதனூடாகவே புதிய அரசிய லமைப் பின் செயற்பாட்டிலும் சுயாதீனமாக செயற்பட முடியுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஜாதிக ஹெல உறுமய மற் றும் ஈ.பி.டி.பியினருக்கு தெரிவி த்தார் என கூறினார். (அ-2)

# 13ஆவது திருத்தத்தில் கைவைக்கும் உரிமை எவருக்குமே கிடையாது

## த.வி.கூ. செயலாளர் ஆனந்தசங்கரி

மாகாண சபைத் தேர்தல் முறை மையானது இந்திய-இலங்கை ஒப் பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப் பட்டது. இதில் கைவைக்கும் உரிமை இந்தியா மற்றும் இலங்கைக்கு கூட கிடையாது என்று தமிழர் விடு தலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வி.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் சிறுபான்மையி னர் இல்லை என்று அரசாங்கம் சொல்லி வருகின்றது. அவ்வாறு சிறுபான்மை இனத்தினர் இல்லை என்ற உணர்வை அரசாங்கமே தனது நடவடிக்கைகள் மூலம் மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவி க்கையில்,

நான் ஜனாதிபதியிடம் கூறியுள் ளேன். நாட்டை உங்களிடம்தான் தந்துள்ளோமே தவிர உங்களது சீடர்களிடம் வழங்கவில்லை. நீங் கள் நாட்டை பாதுகாக்க வேண் டுமே தவிர உமது சீடர்கள் பாதுகா க்க கூடாது. நாட்டை சீடர்கள் அழிக் கின்றார்கள்.

அத்தோடு ஊடகத்தொழில் என் பது இன்று ஒரு பயங்கரமான தொழி லாக இந்த நாட்டில் மாறி விட்டது. இங்கு நடக்கும் அனைத்து விட யங்களையும் 10 நிமிடங்களில் உல கம் பூராகவும் வெளிப்படுத்தக் கூடிய நிலையில் இன்றைய விஞ்ஞான உலகம் வளர்ந்து நிற்கின்றது.

இந்த வகையில் ஊடகங்கள் உண்மையான விடயங்களை மக் களுக்கு தெளிவு படுத்த வேண்டும். இவ்வாறான பயங்கரமான தொழிலை மேற்கொள்பவர்கள் தாங்கள் எழு துவதை நன்றாக யோசித்து எழுத வேண்டும்.

கடந்த 1959 ஆம் ஆண்டு தொடக் கம் நான் தேர்தலில் போட்டியிட்டு வருகின்றேன். 60 வருடகால அர சியல் அனுபவத்தினை நான் பெற் றிருக்கின்றேன். இந்த அரசியலில் நான் நிறைய அடிவாங்கியிருக்கி ன்றேன். என்னை அழிப்பதற்கு பலர் முயற்சித்தார்கள். ஆனால் அவர்க ளால் என்னை அழிக்க முடியவில்லை. என்னை எவராலும் அழிக்க முடி யாது. கிளிநொச்சி இன்று ஒரு சிறந்த நகரமாக விளங்குவதற்கு நானும் ஒரு காரணம். நான் இல்லா விட்டால் கிளிநொச்சி இந்தளவிற்கு வந்திருக்காது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது அனைவரும் ஒன்றுசேர வேண் டும் என்று வலியுறுத்தியிருந்தேன். இருப்பினும் யுத்தம் முடிந்த பின் னர் இராணுவத்தின் தொகையை இரட்டிப்பாக்க வேண்டும் என்று தெரி வித்திருந்த முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவை ஜனா திபதியாக்க வேண்டும் என்று தமி ழ்த்தேசிய கூட்டமைப்பு விரும்பி யது. தேர்தல் முடிந்த பின்னர் எல் லோரும் ஒன்று சேரவேண்டும் என த.தே. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அழைப்பு விடுத் திருந்தார். கூட்டமைப்பு வெளிநா டுக ளுக்கு அடிக்கடி பயணங்களை மேற் கொண்டு வருகின்றது. இந்தப் பயண ங்களின் போது எனக்கு ஒரு அழை ப்பையேனும் விடுப்பது கிடையாது. அல்லது வெளிநாட்டில் கதைப்ப தற்கு ஏதாவது யோசனை வைத்திரு க்கின்றீர்களா என்றுகூட கேட்பது கிடை யாது. ஆனால் நாடாளு மன்றத்தில் பேசும் போது மட்டும் ஆனந்த சங்கரி இவ்வாறு ஊடகங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறார் என்று தெரிவிப்பார்கள்.

இந்த நாட்டில் சிறுபான்மை யினர் இல்லை என்று நாங்கள் சொல்ல வேண்டும். அத்தகைய உண ர்வை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். மாகாணசபைத் தேர்தல் முறைமையானது இந்தியா- இல ங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டது.

அரசியல் தெரியாத தேரர்களி னால் மாத்திரமன்றி இதில் கை வைக்கும் உரிமை இந்தியா மற்றும் இலங்கைக்கு கூட கிடையாது என்று அவர் மேலும் தெரிவித்துள் ளார். (அ)

# அனர்த்தம் தொடர்பான அறிக்கை சமர்ப்பிப்பு

காலநிலை மாற்றம் மற்றும் அது தொடர்பில் மக்களுக்கு அறி வூட்டப்பட்ட முறை குறித்த அறிக்கை நேற்று முன்தினம் மாலை ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கைய ளிக்கப்பட்டதாக அனர்த்த முகா மைத்துவ அமைச்சர் மஹிந்த அமர வீர தெரிவித்தார்.

முன்னெடுக்கப்பட்ட விசாரணை களின் அடிப்படையில் வானிலை அவதான நிலையம் தந்த நேரத் தில் உரிய முறையில் காலநிலை மாற்றம் குறித்து மீனவர்களுக்கு அறி வூட்டியுள்ளமை தொழில்நுட்ப ரீதியாக ஊர்ஜிதம் ஆகியிருப்பதாக வும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை வீசிய கடும் சுழல் காற்றினால் சுமார் 50 இற்கும் அதிகமான மீனவர்கள் பலியாகியுள்ளனர். இச்சம்பவம் குறித்து உடனடி விசாரணைகளை மேற்கொண்டு தனக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதி கடந்த ஞாயிற்றுக்கிழமை பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக் கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்



நயினை
நாகபூசணி அம்மன்
பாமாலை

## இன்று நான்காம் திருவிழா

### நம் தேசம் காத்தருள்வாய் நாகத்தம்மா

ஆதியந்தமானவளே நாகத்தம்மா
ஆனந்த வாழ்வளிப்பாய் நாகத்தம்மா
சோதி வடிவானவளே நாகத்தம்மா
துணையாக நீ வர வேண்டும் நாகத்தம்மா
மணிபல்லவத்தில் மகிழ்ந்திருக்கும் நாகத்தம்மா
மறு வாழ்வு எமக்கு வேண்டும் நாகத்தம்மா
மடி ஏந்திப் பிச்சை கேட்கின்றேன் நாகத்தம்மா
மாளும் எம் வாழ்வை மாற்றிடுவாய் நாகத்தம்மா
படகேறி நின் வாசல் வந்தோம் நாகத்தம்மா
பாவிகளை இரட்சிப்பாய் நாகத்தம்மா
நாக படம் குடை பிடிக்க நாகத்தம்மா
நம்தேசம் காத்தருள்வாய் நாகத்தம்மா

குறிஞ்சிக்கவி செ.ரவிசாந்,
வீரமனை, குப்பிளான்.

### ஆவணங்கள் தேவை தானோ அருட் பொலிவு கூறுவதற்கு

ஊமையொடு முடவர்களும் உனை நம்பி வந்தாலம்மா
ஊனங்கள் நீக்கி வைத்து உளப்பிணியும் தீர்ப்பாயம்மா
கரும்பாம்பு செம்பாம்பு தொட்டிலொடு கண் மலரும்
தரும் சாட்சி போதுமம்மா தாயின் அருள் பொழிவதற்கு
ஆனியின் பூரணையில் அன்னை நீயும் நீராடும்
அரிய இப் பெருவிழாவில் அவனியுள்ளோர் வந்து
ஆவலாய் கிள்ளித் தர அதற்கு நீ அள்ளிக் கொடுத்த
ஆவணமே நீதானம்மா அதை விடவேறேதுமுண்டோ

கவிமணி அன்னைதாஸன்,
ஊரெழு

### அறம் வளர்த்த நாயகி

நயினைப் பதியின் கரையோரத்தில்
நாகம்மாவின் அரசாங்கம் அவளை
அண்டியவர்க்கு அருளமுதம் தருவாய்
அதுமட்டுமா?
அமுத சுரபியை நாடித் தேடி
வருவோர்கெல்லாம் நல்ல சோற்றுப் பிரசாதம்
அவள் அண்டமெல்லாம் நிறைந்து வந்த
அறம் வளர்த்த நாயகி அல்லவா
புவனேஸ்வரி மாதாவே உன் கருணை
கணக்கிலடங்காதது தாயே

கௌரி சிறிதரராஜன்,
வேலணை

### எம்மைக் கரை சேர்த்து அருளும்மா

ஆதியும் அந்தமும் இல்லாத
நாயகனின் நாயகியே- நயினை
நாகபூசணி அம்மா!
மானிடம் ஆகிய நாம் வெந்தரையில்
வேகுகின்றோம் தாயே!
எம் குரல் கேட்டு ஓடி வாரும் அம்மா
பக்தியோடு உன் வரம் வேண்டி பூசிக்கின்றோம்
உன்னை நம்பினோர் கெடுவதில்லை
நாகபூசணித் தாயே- கண்
திறந்து பாரும் அம்மா
எம்மைக் கரை சேர்த்து அருளும் அம்மா

எஸ். சூரியா,
கொழும்புத்துறை

# தே.க.க. அனுமதிக்கான தகைமைகளில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும்

## சிறிதரன் எம்.பி. கல்வி அமைச்சருக்கு கடிதம்

வடமாகாண கல்வியியல் கல்லூரிகளில் மாணவர்களை அனுமதிப்பதற்கான தகைமைகளில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். அவர் அனுப்பிவைத்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

இவ்வாண்டு கல்வியியல் கல்லூரிகளுக்கான அனுமதி கோரப்பட்டு தற்பொழுது நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில் ஆரம்பக்கல்வி, வர்த்தகமும் கணக்கியலும் பாடங்களுக்கு க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலம், தமிழ், கணித பாடங்களில் திறமைச் சித்தி கேட்கப்பட்டுள்ளது.

கணித பாடத்தில் சாதாரண சித்தி பெற்ற ஒருவர் ஆங்கில பாடத்தில் சித்தி பெறா விட்டாலும் பல்கலைக்கழக அனுமதியை பெறக் கூடியதாக உள்ளது. ஆனால், கல்வியியல் கல்லூரி அனுமதிக்கு மட்டும் கணிதம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தி கேட்பது அதிலும் மிகவும் பற்றாக்குறையாகவுள்ள ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு ஆங்கிலபாட திறமைச் சித்தி கேட்பது எந்தளவுக்கு நியாயமாகும்?

இதிலும் வட மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 362, கிளிநொச்சி மாவட்டத்தில் 125, முல்லைத்தீவில் 140, மன்னாரில் 78, வவுனியாவில் 165 என மொத்தமாக 870 ஆங்கிலபாட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை உள்ள நிலையில் தமிழ் மாணவர்களிடம் ஆங்கிலம், கணிதத்தில் திறமைச் சித்தியைக் கட்டாயமாக்குவது பாதகமானது.

குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, மடு, துணுக்காய், தீவக வலயங்களும் வடமராட்சி வடக்குக் கோட்டமும் ஆங்கில, கணிதபாட ஆசிரியர்களின் பற்றாக்குறையை பாரியளவில் சந்தித்துள்ள இடங்களாகும்.

எனவே, தாங்கள் கூடிய கவனம் செலுத்தி க.பொ.த. (உ/த) சித்தி பெற்ற பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தவிர்ந்த கல்வியியல் கல்லூரிக்குத் தெரிவான மாணவர்களுக்கு கணிதம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியைக் கட்டாயமாக்காது அனுமதி கிடைக்க ஆவண செய்யுமாறுவேண்டுகிறேன். என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# நயினைக்கு படகுசேவை

தீவகப் பகுதி மக்களின் நன்மை கருதி நயினாதீவு நாகபூசனி அம்மன் ஆலயத்திருவிழாவிற்கு யாத்திரிகர்கள் செல்வதற்காக ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் இறங்கு துறையில் இருந்து எதிர்வரும் 20 ஆம் திகதி வரை காலை 9.15 மணியிலிருந்து ஏனைய விசேட தினங்களில் யாத்திரிகர்களின் எண்ணிக்கைமைவாக பி.ப.2.மணியிலிருந்து நயினாதீவுக்கான படகு சேவைகள் ஊர் காவற்றுறை பிரதேச செயலகத்தினால் ஒழு ங்கு செய்யப்பட்டுள்ளதாக மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள் ளார். (அ)

# 1755ஆம் ஆண்டு கால நாணயங்கள் தாழிகள் கற்பிட்டியில் கண்டுபிடிப்பு

புராதன காலத்துக்கு உரியதென நம்பப்படும் நாணயங்கள், தாழி என்பன கற்பிட்டி இலந்தையடி பிரதேசத்தில். அப்பகுதி மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளன.



இவை 1755 ஆம் ஆண்டு மற்றும் 1773 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குரியவை என நம்பப்படுகிறது.

குறித்த பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பையடுத்து அங்கு தெரியவந்த சிவப்பு நிறத்திலான வலயத்தினை மீட்க முற்பட்ட போதே அது புராதன கால தாழி என தெரியவந்துள்ளது.

இதனையடுத்து மீனவர்கள் அதனை மீட்டு மீனவர் ஒருவரின் வீட்டில் வைத்துள்ளார்கள். இத்தாழியை மீட்கும் போது அதனுள்ளிலிருந்து புராதன கால நாணயங்களும் மீனவர்களினால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட புராதன பொருட்கள் தொடர்பில் கிராம சேவையாளரூடாக பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பளு தூக்கும் போட்டியில் யாழ்.இந்துவுக்கு 12 பதக்கங்கள்

(மானிப்பாய்)

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பளு தூக்கும் போட்டி கடந்த 6 ஆம் திகதி பருத்தித்துறை Y.M.C.A. மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 6 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கல பதக்கங்கள் உள்ளடங்கலாக 12 பதக்கங்களைப் பெற்று வடமாகாணத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

வெற்றிபெற்ற மாணவர்கள் விபரம் பின்வருமாறு,

20 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 56 கிலோ எடைப் பிரிவில் எஸ்.சரணியன் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

17 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவின் 56 கிலோ எடைப் பிரிவில் எஸ்.பிரகலாதன் முதலாமிடத்தையும் எஸ்.திலக்ஷன் இரண்டாம் இடத்தையும் ரி.கவிச்சரன் மூன்றாமிடத்தையும் தட்டிக் கொண்டனர்.

17 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவின் 62 - 69 கிலோ எடைப் பிரிவில் எஸ்.மிதுன் முதலாம் இடத்தையும் எஸ்.விதுரசன் இரண்டாவது இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

17 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவின் 69-77 கிலோ எடைப் பிரிவில் எஸ்.சுபிதன முதலாம் இடத்தையும் டி.மாலவன் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

17 வய்திற்குட்பட்ட ஆண்கள் பிரிவின 77-85 கிலோ எடைப் பிரிவில் ஆர்.விதுஷன் முதலாம் இடத்தையும் வி.நித்தியப் பிரகாஷ் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

105 கிலோவிற்கு மேற்பட்ட பிரிவில் எஸ்.கிரீஷன் முதலாம் இடத்தைக் கைப்பற்றினார்.

யாழ்.இந்துக் கல்லூரி இந்த வருடமே பளுதூக்கும் அணிக்கான பயிற்சிகளை ஆரம்பித்து 12 பதக்கங்களை சுவீகரித்தமை சிறப்பம்சமாகும். (அ-3-23)

# கொடிகாமம் வாசியின் ஆட்டோ ஓட்டுமடம் பகுதியில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தில் காணாமற்போன முச்சக்கரவண்டி, யாழ்ப்பாணம் ஓட்டுமடத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

கடந்த மாதமளவில் கொடிகாமத்திலுள்ள பிரதேசமொன்றிலிருந்த ஆட்டோ ஒன்று காணாமற் போயிருந்தது.

இதனையடுத்து ஆட்டோ உரிமையாளரால் தனது ஆட்டோ களவு போயுள்ளது என கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் களவு போனதாக கூறப்படும் ஆட்டோ தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்தனர். பொலிஸாரின் விசாரணை இடம்பெற்று வரும் நிலையில் யாழ்ப்பாணம் ஓட்டுமடப் பகுதியில் அநாதரவான நிலையில் ஆட்டோ 3 நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்த அநாமதேய ஆட்டோ தொடர்பில் சந்தேகித்த மக்கள் உடனடியாக யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு அது பற்றி தெரியப்படுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் யாழ். பொலிஸ் நிலைய சிறு குற்றப்பிரிவு தடுப்பு பொலிஸார் அநாதரவாக வீதியில் நின்ற ஆட்டோவை மீட்டு யாழ். பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

ஆட்டோ காணவில்லை என்ற முறைப்பாடு யாழ். பொலிஸ் நிலையத்தில் பதிவாகவில்லையென்பதனையும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதனால் மீட்கப்பட்ட ஆட்டோ கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

மேலும் குறித்த ஆட்டோ மீட்கப்படும் போது இலக்கத்தகடுகள் எவையும் அதில் காணப்படவில்லை.

இந்த ஆட்டோ கடத்தல் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளனர் என யாழ்.பொலிஸ் நிலைய சிறுகுற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி விக்கிரமரட்சி தெரிவித்தார். (அ-4)


மகளிரின் எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டியாக
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....

யாழ். கலாலயா
பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதான வைத்தியசாலை பின் புற வீதி)
Yaarl Kalaa layah Academy
Victoriya Road, Jaffna

மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!


✌ கேக் ஐசிங், உணவு தயாரித்தல், ✌ Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
✌ முக அழகுக் கலை (Facial)
✌ Pedicure,Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)

✌ இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,
மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
✌ (B)பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள்.
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 19-06-2013
புதன் காலை 9.30 மணி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 23-06-2013
ஞாயிறு காலை 9.30 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தித்தால் கேட்டதைப் பெறுவோம். அல்லது கேட்டிருக்க வேண்டியதைப் பெறுவோம்.
-லெய்ட்டன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அத்வானி விட்டாலும் அவரை விட்டுவிடாதீர்கள்

எங்கள் தேவைக்காக - எங்களுக்கு உதவுவ் என்ற அடிப்படையில், வெளியில் தெரியாமல் எங்களுக்குள் நாங்கள் நடத்தும் பிரார்த்தனை குறித்து யாரும் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் அந்தப் பிரார்த்தனைகள் மிகவும் வலிமையானது.

இராம-இராவண யுத்தத்தில் இராவணன் தோற்க வேண்டும் என்று சீதையை விட அவளோடு இருந்த திரிசடையே அதிகம் பிரார்த்தித்ததாகக் கூறுவர் உளர்.

சீதையின் துன்பம், அவளின் ஏக்கம், அவளின் நல்ல குணம் என்பனவற்றுடன் ஒரு நல்ல குடும்பம் இராவணனால் பிரிந்து பரிதவிக்கின்றது என்ற மன ஆதங்கம் சேர்ந்து தனது நாட்டு மன்னன் ஆகிய இராவணன் போரில் தோற்க வேண்டும் என்று திரிசடையை நினைக்க வைத்தது.

இத்தகைய நினைப்பில் நியாயம் உண்டா? என்று கேட்பது நியாயம் அற்றது.

ஒரு நியாயத்திற்காக ஏங்கக்கூடிய நியாயவாதிகள், இது நடந்தால் நியாயம் கிடைக்கும் என்பதன் அடிப்படையில், உள்ளார்ந்தமாகப் பிரார்த்தனை செய்வதை யாரும் தடுக்கவோ தவிர்க்கவோ முடியாது.

அந்த வகையில் இலங்கைத் தமிழர்களின் பிரார்த்தனைகளில் ஒன்று; இந்திய மத்திய ஆட்சியை பாரதிய ஜனதாக் கட்சி கைப்பற்ற வேண்டும் என்பதாகும்.

இந்தப் பிரார்த்தனை பற்றி பாரதிய ஜனதாவுக்கோ அல்லது காங்கிரஸ் கட்சிக்கோ தெரிந்திருக்க நியாயமில்லை.

ஆனால், எங்களுக்கு எங்கள் நாட்டில் நடக்கும் நெட்டூரம் காரணமாகவும் எங்கள் வதைபடுபடலத்தில், இந்திய மத்திய அரசில் இருக்கும் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் செய்த மோசங்கள் காரணமாகவும் இப்படியொரு பிரார்த்தனை.

இந்தப் பிரார்த்தனை வங்கக் கடல் கடந்து இந்திய மத்திய ஆட்சியைக் கவிழ்க்கும் என்ற நம்பிக்கைகளின் மத்தியில், பாரதிய ஜனதாக் கட்சியின் அதிவேக பிரசாரப் பீரங்கி எல்.கே. அத்வானி, கட்சியில் தனக்கு இருக்கக்கூடிய அத்தனை பதவிகளையும் தூக்கி எறிந்து விட்டார் என்ற செய்தி ஈழத் தமிழர்களுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

எல்.கே.அத்வானியின் வேகம்,துடிப்பு பாரதிய ஜனதாக் கட்சிக்கு நிச்சயம் தேவை என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள்.

அத்தகைய ஒருவர் தனக்கு இருக்கக்கூடிய பொறுப்பான பதவிகளை ராஜினாமா செய்து விட்டால் அது பாரதிய ஜனதாவுக்கு வீழ்ச்சி என்பது மட்டுமன்றி காங்கிரஸுக்கு சாதகம் என்றாகிவிடும்.

எனவே எல்.கே.அத்வானி தனது ராஜினாமாவை மீளப்பெறுவதற்கான முயற்சியை பாரதிய ஜனதா எடுக்க வேண்டும்.

அதேநேரம் காங்கிரஸ் ஆட்சியை வீட்டுக்கு அனுப்புகின்ற குறிக்கோளை நிறைவேறுதல் என்ற எதிர்பார்ப்பை நிறைவேற்றும் தார்மீகப் பொறுப்பு தனக்கு உண்டென்பதை அத்வானியும் உணர்ந்து செயற்படுவது கட்டாயமானதாகும்.

# தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்படும்

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பாடசாலைகள் தேசிய பாடசாலையாக விரைவில் தரமுயர்த்தப்படவுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

இதற்கான நடவடிக்கையை உயர் கல்வி அமைச்சு மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்.வலய பாடசாலைகளிலிருந்து பரீட்சைகளில் தோற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும், கலாசார நிகழ்வும் நேற்று முன்தினம் யாழ்.வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையிலே இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார். (அ-6)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

வன்னி மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு இம்மாத இறுதிக்குள் நிரந்தர நியமனம் வழங்குவதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டு துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் புலமைப்பரிசில் மற்றும் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது இதில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த கால யுத்த சூழலில் வன்னி மாவட்டத்தில் கல்வி கற்பித்து வந்ததோடு தமக்கான நிரந்தர நியமனம் வழங்கக்கோரி பல கவனயீர்ப்பு போராட்டங்களிலும் ஈடுபட்டு வந்த நிலையில் 500 இற்கும் மேற்பட்ட வன்னி மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு இம்மாத இறுதிக்குள் நிரந்தர நியமனம் வழங்குவதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல்

கல்வியற் கல்லூரியில் சாதாரணப் பரீட்சையில் ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் சிறப்பு சித்தி இன்றி அனுமதி கிடைக்காத தென்மராட்சி மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் தென்மராட்சியில் நடைபெற்றது.

அக்கலந்துரையாடலின் பின் அது தொடர்பான கருத்து தொகுப்பு ஒன்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் பெருமாள் ஆலயத்திற்கு முன்பாக ஒன்று கூடி கலந்துரையாடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.எனவே சம்மந்தப்பட்ட அனைவரும் இதில் பங்கேற்றுமாறு கேட்கப்படுகின்றனர். (அ-2)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

எல்.பி.பினான்ஸ் நிதி நிறுவனத்தின் வடபிராந்திய கிளைகளினால் வருடாந்தம் நடத்தப்படும் இரத்ததான முகாம் இன்று புதன்கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் 2 மணிவரை நிறுவனத்தின் சுன்னாகம் கிளைக்காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (அ-5)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு மத்தாளோடை ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளது. மஹோற்சவத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தமும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெற்று 24ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு 108 சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ)

***

கோப்பாய் அருள்மிகு வெள்ளெருவை பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தொடர்ந்து பதினொரு நாட்கள் நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தின் இறுதி நிகழ்வுகளான சப்பறம் எட்டாம் திருவிழாவான 21-ம் திகதி வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமை காலை தேர்த்திருவிழாவும் 23-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தமும் இரவு கொடியிறக்கமும் இடம் பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (செ)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்



## பக்குவம் பெற்றால் துன்பமில்லை

❖ மக்களில் பலர் புகழ் வேண்டியோ அல்லது புண்ணியம் பெற வேண்டியோ தர்மம் செய்கின்றனர். அத்தகைய செயல்கள் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டவை. பரோபகாரம் செய்பவர்கள் இறைவனுக்காக மட்டுமே செய்வதே சிறந்ததாகும்.

❖ இறைவனுடைய நியதியில், உலகில் உள்ள அனைத்து விஷயங்களுக்கும் இடமுண்டு. அதனால், நம்முடைய கொள்கை தான் சிறந்தது, மற்றவர்கள் கொள்கைகள் தப்பானவை என்று எண்ணம் கொள்வது கூடாது. பிறருக்குப் போதிப்பது சுலபமல்ல.

❖ ஒருவன் வாழ்வில் இறைவன் அருளைப் பரிபூரணமாகப் பெற்ற பின்னரே பிறருக்குப் போதனை செய்ய முன்வர வேண்டும். அப்போது தான் அது நல்ல பயனைப் பிறருக்குத் தரும்.

❖ மனிதனைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் அவனைப் பெரிதும் பாதிக்கின்றன. அதனால் தெய்வீகப் படங்களை, நாம் இருக்குமிடத்தில் எப்போது கண்ணில் படும் வகையில் வைத்திருப்பது நல்லது. அவற்றைப் பார்க்கும் போதெல்லாம் நம்மனதில் அருள் உணர்வு உதிக்கத் தொடங்கும்.

❖ செடி பெரிய மரமான பிறகு, அதற்கு வேலி தேவையில்லை. ஒரு யானையைக் கூட அதில் கட்டி வைக்கும் அளவிற்கு வலிமை அந்த மரத்திற்கு உண்டாகி விடும். அதைப் போல பக்குவம் உண்டான மனிதனுக்கும் உலக விஷயங்கள் எந்த இன்னலையும் உண்டாக்குவதில்லை.

# நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய கொடியேற்றம் இன்று

கர்ணபரம்பரைச் செய்திகளின்படி ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் இந்தியா காரைக்காலிலிருந்து வேதாரணியம் வழியாக நீராவிப் பதியில் குடியேறிய பெரும் நிலக்கிழாரும் வணிகருமான பூதர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது.

அவர் வரும்போது தமது குல தெய்வமான, இராவணனை கொன்றதனால் ஸ்ரீ இராம பிரானை பீடித்த பிரம்மகத்தியை உதைத்த நீக்கிய திருமறைக்காடு வீரகத்தி விநாயகரையும் தம்முடன் கொணர்ந்து தமது இல்லத்திற்குப் பக்கத்தில் மண்குடிசையில் ஸ்தாபித்தார்.

ஒல்லாந்தர் அரசில் திறைச்சேரித் தலைவராக இருந்த பூதன்மகன் புலோக முதலியார் தனதும் தனது பிற் சந்ததியினரதும் ஊர்ப் பொதுமக்களினதும் ஆன்மா இலாபத்திற்கும் தனது குலதெய்வமாக வேதாரணியத்தில் இருந்து வரவழைத்து தமது வீட்டின் பக்கத்தில் அவர்கள் வசிக்கக் காணியும் கொடுத்து அவர்களை நன்கு பராமரித்து வந்தார்.

அவருக்குப் பின் அவர் புத்திரன் சிவகுருநாத முதலியாராலும் அவருக்குப்பின் ஆங்கில அரசில் கச்சேரியில் சிறாப்பராகக் கடமையாற்றிய Gate Mudaliar (ஈரசவாசல்) இரகுநாத முதலியாராலும் இவ்வாலயம் பராமரிக்கப்பட்டது. இவர் காலத்தில் ஓலையால் வேயப்பட்ட ஆலயம் தீக்கிரையாக அவர் செங் கட்டிகளாலும் சுண்ணம் பாலும் இவ் வாலயத்தைக் கட்டுவித்தார்.

அவருக்குப்பின் அவர் மகன் சம்பந்தநாத முதலியாராலும் அவருக்குப்பின் அவர் மக்களாலும் இவ்வாலயம் பராமரிக்கப்பட்டு வந்தது. அம்மக்கள் காலத்தில் இவ்வாலயத்தின் கருவறை அர்த்தமண்டபம், சண்டேஸ்வரர் சந்நிதி என்பன வெள்ளைக் கற்களால் கட்டப்பட்டன. கடைசி மகன் இராமநாதமுதலியாரின் மகன் சம்பந்தநாதர் ஆலயத்திற்கு மணிக்கோபுரம் அமைப்பித்தார்.

இரண்டாவது மகன் இரகுநாதமுதலியார் மகன் (சம்பந்தநாதருடைய ஒன்றுவிட்ட சகோதரி) செல்லம்மா வைத்திலிங்கம் ஆலயப் பொறுப்பை ஏற்றதும் தமது காணியின் சுமார் 50 பரப்பை ஆலயத்துக்கே கொடுத்துவிட்டார். அவர் விருப்பை நிறைவேற்ற அக்காணிகளை விற்று நீராவிப் பிள்ளையாருக்கு அழகிய சொக்கட்டான் மண்டபம், திருவாசி மண்டபம், வசந்த மண்டபம்,ஐந்து நிலை இராஜ கோபுரம், சுற்று மண்டபங்கள் என்பன கட்டப்பட்டன.

செல்லம்மாவின் தம்பியார் சம்பந்தநாதர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அலங்காரத் திருவிழா இன்று அவர் மருமகன் இரகுநாதர் முதலியார் காலத்தில் கொடிமரம், தேர் என்பன அமைக்கப்பட்டு மகோற்சவமாக வளர்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமருக்கு எதிராக துருக்கியில் ஆர்ப்பாட்டம்

துருக்கியின் துணைப் பிரதமர் அரின்க் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவரும் குழுக்களின் தலைவர்களில் சிலரை இன்றைய தினம் சந்திக்கவுள்ளார்.

இச் சந்திப்பின் போது இந்த நாட்டில் நடைபெற்றுவரும் ஆர்ப்பாட்டம் தொடர்பாக பேசவுள்ளதாகவும் அவா குறிப்பிட்டுள்ளார்.

படிப்படியாக அவர் ஏனையவர்களையும் சந்திக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



துருக்கி நாட்டில் கடந்த 11 நாட்களாக பிரதமர் எர்டோகனை எதிர்த்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இஸ்தான்புல்லில் பூங்கா ஒன்றை கட்டிடங்கள் அமைப்பதற்காக சீரமைக்கத் தீர்மானித்தபோது, அதனை எதிர்த்து பொதுமக்கள் போராட்டத்தில் இறங்கினர். அது நாளடைவில் பிரதமரை எதிர்க்கும் போராட்டமாக வலுப்பெற்றது தற்போது. தக்சிம் சதுக்கம் முழுவதும் ஆர்ப்பாட்டக்காரர்கள் நிறைந்துள்ளனர்.

பொலிஸாருக்கும், ஆர்பபாட்டக்காரர்களுக்கும் இடையே நேற்றுமுன்தினம் மோதல்கள் நடைபெற்றன. தொடர்ந்து மூன்றாவது நாளாக பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியும், தண்ணீரைப் பீச்சி அடித்தும் ஆர்ப்பாட்டக்காரர்களை விலக்கிவருகின்றனர். இதுவரை மூன்று பேர் பலியாகினர். 5ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

முதலில் ஆர்ப்பாட்டக்காரர்களை கொள்ளையர்கள் என்றும், தன்னுடைய பொறுமையை சோதிக்கின்றனர் என்றும் பிரதமர் அறிக்கை விடுத்தார்.

ஆனால, தற்போது துணைப பிரதமர் அரின்க், ஆர்ப்பாட்டம் நடத்தும் குழுக்களின் தலைவர்களில் சிலரை இன்று புதன்கிழமை அன்று சந்தித்து பிரச்சினைகள் பற்றிப் பேச ஒத்துக் கொண்டுள்ளதாகவும், படிப்படியாக அவர் மற்றவர்களையும் சந்திப்பார் என்றும் தெரிவித்துள்ளார். (அ-2)

# அமெ.வின் தீவிர கண்காணிப்பில் இந்தியாவுக்கு 5 ஆவது இடம்

(லண்டன்)

அமெரிக்காவின் தீவிரமாக கண்காணித்து வரும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 5ஆவது இடத்தில் உள்ளது.

இணையதளத்தைப் பயன்படுத்தி உலகின் அனைத்து நாடுகளில் இருந்தும் பல்வேறு இரகசிய தகவல்களைக் சேகரிப்பது, இ-மெயில் விவரங்களைத் தெரிந்து கொள்வது உள்ளிட்ட பல்வேறு வேலைகளை அமெரிக்க உளவு அமைப்புகள் மேற்கொண்டிருப்பது சமீபத்தில் வெளி உலகத்துக்கு தெரிய வந்துள்ளது.

இதில் ஈரான் முதலிடத்தில் உள்ளது. அந்நாட்டில் இருந்து கடந்த மார்ச் மாதம் மட்டும் 14 கோடி இரகசிய தகவல்களை அமெரிக்கா திரட்டியுள்ளது. இதற்கு அடுத்தபடியாக பாகிஸ்தான், ஜோர்டான் ஆகிய நாடுகளிடம் இருந்து அதிக தகவல்களை இணைய தளம் மூலம் அமெரிக்க உளவு அமைப்புகள் திருடியுள்ளன.

அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடுகளாகக் கருதப்படும் அரபு நாடுகள் இப்பட்டியலில் 3ஆவது இடத்தில் உள்ளன.

இதற்கு அடுத்தபடியாக எகிப்தை, அமெரிக்கா அதிகம் கண்காணித்துள்ளது. இப்பட்டியலில் 5ஆவது இடத்தில் உள்ள இந்தியாவில் இருந்து 6 கோடியே 30 இலட்சம் முக்கிய தகவல்களை அமெரிக்கா இரகசியமாக சேகரித்துள்ளது.

இதில் பச்சை வண்ண குறியீடு கொடுக்கப்பட்டுள்ள நாடுகள் அதிகம் கண்காணிப்புக்கு உள்ளாகவில்லை. சிவப்பு நிறம் குறியீடு உள்ள நாடுகள் அதிகம் கண்காணிக்கப்பட்டுள்ளன. (அ-2)

# சிறந்த தந்தைக்கான விருது பில் கிளின்டனுக்கு

உலக தந்தையர் தினம் எதிர்வரும் 16ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளது. இந் நிலையில் இந்த வருடத்திற்கான விருது அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனுக்கு வழங்கப்பட இருப்பதாக பல நோக்க மற்ற தேசிய தந்தையர் தின குழு தகவல் வெளியிட்டுள்ளது.



அமெரிக்காவில் உள்ள 'லாப நோக்கமற்ற தேசிய தந்தையர் தின குழு' ஒவ்வொரு ஆண்டும் சிறந்த தந்தைக்கான விருதை வழங்கி வருகிறது. இந்தக் குழு 'பாதர் ஆப் த இயர் (Father of the year) என்ற பெயரில் 1941ஆம் ஆண்டு முதல் இவ் விருதினை வழங்கி வருகிறது.

கிளின்டன் ஜனாதிபதியாக இருந்த போது, அவருடைய 12 வயதான மகள் செலஸ்-சை வெளியுலக பார்வையிலிருந்து பாதுகாத்து வந்தார். அவர் தனது பணியையும் தந்தை பொறுப்பையும் சரிவர நிறை வேற்றியதை பாராட்டும் விதமாக இந்த விருதை அவருக்கு வழங்குவதாக அக் குழு கூறியுள்ளது. இந்த விருது கடந்த ஆண்டுகளில் ஜான் கென்னடி, ரோனல்ட் ரீகன், கோலின் பாவெல் ஆகியோருக்கும் வழங்கபபடடமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மற்றுமொரு விண்கலத்தை சீனா விண்ணுக்கு ஏவியுள்ளது



சீனா மற்றுமொரு விண்கலத்தை விண்ணுக்கு ஏவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று விண்வெளி வீரர்களுடன் இந்த விண்கலம் தமது பயணத்தை ஆரம்பித்துள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்குப் போட்டியாக சீனாவும் விண்ணில் நிரந்தர ஆய்வுமையத்தை அமைத்து வருகிறது. இதற்காக பயிற்சி பெற்ற விண்வெளி வீரர்களை அனுப்பி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இப்போது 5ஆவது முறையாக விண்வெளக்கு மனிதர்களை அனுப்பியுள்ளது. கான்சூ மாகாணத்தில் உள்ள ஜியூகான் செயற்கைக் கோள் ஏவு தளத்தில இருந்து நேற்று ஷென்சூ-10 விண்கலம், வெற்றிகரமாக செலுத்தப்பட்டது.

லாங் மார்ச் என்ற ராக்கெட் மூலம் செலுத்தப்பட்ட இந்த விண்கலத்தில், வாங் யாபிங் (வயது 35) என்ற விண்வெளி வீராங்கனையுடன், நீ ஹைஹெஷங், ஜாங் ஜியாகாங் ஆகிய வீரர்களும் சென்றுள்ளனர். நேற்று பிற்பகல் பூமியின் சுற்று வட்டப் பாதையில் வெற்றிகரமாக நுழைந்த இந்த விண்கலத்தில் இருக்கும் வீரர்கள், 15 நாட்கள் ஆய்வுப் பணிகள் மற்றும் பரிசோதனைகளை மேற்கொள்வார்கள்.

விண்கலம் விண்ணில் செலுத்தப்படும் நிகழ்வை, பிரதமரும் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளருமான ஜி ஜிங்பிங் நேரில் சென்று பார்வையிட்டார. இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்திய சீன விஞ்ஞானிகளுக்கு, அவர் பாராட்டு தெரிவித்தார்.

மேலும் சீனாவின் கனவுத் திட்டமான இந்த விண்கலத்தில் சென்றுள்ள வீரர்கள் தங்கள் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் [illegible] வித்தார். (அ-2)

# முஷாரப், சவுகத் ஆகியோருக்கு பிடியாணை பிறப்பிப்பு

(கராச்சி)

அரசியல் பிரமுகர் கொலை வழக்கில் பயங்கரவாத தடுப்பு நீதிமன்றம் ஜனாதிபதி முஷாரப்பிற்கு பிணையில் வெளிவரமுடியாத வகையில பிடியாணை பிறப்பித்துள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் கடந்த 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட்டில் அவரது ஆட்சியின் போது இராணுவததினரால் பலுசிஸ்தான் தலைவர் அக்பர்பக்டி, என்ற அரசியல் பிரமுகர் கொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாக முஷாரப், முன்னாள் பிரதமர் சவுகத் அஜிஸ் உள்ளிட்டோர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

பயங்கரவாத தடுப்பு நீதிமன்றில் விசாரணை நடைபெற்று வருகிறது. இதில் இருவருக்கும் அழைப்பாணை அனுப்பியும் ஆஜராகவில்லை.

நேற்றுமுன்தினம் நடந்த விசாரணையில் முஷராப், சவுகத் அஜிஸ் ஆகியோருக்கு பிணையில் வெளிவரமுடியாத பிடியாணை பிறப்பித்து நீதிபதி உத்தரவிட்டார். (அ-2)

# நைல் நதிக்கு அணைகட்டும் விவகாரம் ஆபிரிக்காவில் போர் பதற்றம்

(கெய்ரோ)

நைல் நதியின் குறுக்கே அணை கட்டுவதற்கு எத்தியோபியா அரசு முடிவு செய்துள்ளது.

அணை கட்டினால் வாழ்வாதாரம் பாதிக்கும் என்று கூறி எகிப்து கடுமையான எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது. இது ஆபிரிக்காவில் போர் பதற்றத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது.



இந்நதி வடக்கு- கிழக்கு ஆபிரிக்காவில் ஆரம்பித்து 11 நாடுகளை கடந்து வந்து இறுதியில் மத்தியதரைக கடலில் கலக்கிறது. நைல் நதியை மட்டுமே நம்பி தான்சானியா, உகாண்டா, ருவாண்டா, புரூண்டி, காங்கோ, கென்யா, எத்தியோபியா, எரிட்ரியா, தெற்கு சூடான், சூடான், எகிப்து ஆகிய 11 நாடுகள் உள்ளன.

இந் நதிநீர்தான் 11 நாடுகளின் குடிநீர்ப்பாசனத்துக்கு ஆதாரம். நைல் நதிக்கு வெள்ளை நைல், நீல நைல் என்ற 2 துணை நதிகள் உள என. வடகிழக்கு ஆபிரிக்காவில் தொடங்கி இரண்டாக பிரியும் நைல் நதியில், துணை நதியான வெள்ளை நைலே மிக நீளமானது. இந்த துணை நதி ருவாண்டா, புரூண்டி, தான்சானியா, உகாண்டா, தெற்கு சூடான் வழியாக பாய்கிறது.

இந்நிலையில், நீல நைல நதிக்கு குறுக்கே அணை கட்டும் பணியை எத்தியோபியா ஆரம்பித்து விட்டது. இதற்கு எகிப்து அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. எத்தியோபியா அணை கட்டிவிட்டால் நைல் நதிநீர் எகிப்துக்கு கிடைக்காமல் போய் விடும். அல்லது நீர்வரத்து குறையும். "நைல் இல்லாவிட் டால். எகிப்து இல்லை" இது தான் பெரும் பிரச்சினை.

நைல் நதி நீர் எங்கள் வாழ்வாதார உரிமை. அதில் இருந்து ஒரு சொட்டு நீரைக் கூட விட்டுத்தர முடியாது. அணை கட்டுவதை எத்தியோபிய அரசு உடனே நிறுத்த வேண்டும். இது குறித்து சர்வதேச நதிநீர் ஆணையத்தில் மேல் முறையீடு செய்வோம். எத்தியோபிய அரசு அணை கட்டுவதை நிறுத்தாவிட்டால் இராணுவ நடவடிக்கையை தவிர வேறு வழியில்லை என்று எகிப்து வெளியுறவு அமைச்சர் முஹ மத் கமேல் அமர் கடுமையாக எச்சரித்துள்ளார்.

ஆனால், நைல் நதியின் குறுக்கே அணை கட்டி 6 ஆயிரம் மெகாவாட் மின் சாரம் தயாரிக்கும் திட்டத்தில் எத்தியோபிய அரசு உறுதியாக உள்ளது. அணை கட்டும் பணிகளையும் தொடங்கி விட்டது.

அணை கட்டினால் எகிப்தைப் பாதிக்காது. நதியில் இருந்து கிடைக்கும் தண்ணீரின் அளவும் குறையாது என்று விளக்கம் சொல்கிறது எத்தியோபியா.

மேலும், இதுசம்பந்தமாக எகிப்து தூதரை அழைத்தும் எத்தியோபிய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். 'அணை கட்டினால் போர் தொடுப்போம். அணையை தகர்ப்போம் என்ற ரீதியில் எகிப்து அமைச்சர்கள் பேசியது குறித்து விளககம் அளிக்குமாறும் உத்தர விட்டுள்ளனர்.

நைல் நதி அணை விவகாரம் ஆபிரிக்க நாடுகள் இடையே இராணுவ மோதல உருவாகும் சூழலையும் போர் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரோகித், தவான் விளாசல்; அரையிறுதியில் இந்தியா

மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான சம்பியன்ஸ் டிராபி பி பிரிவு லீக் ஆட்டத்தில் இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் அபாரமாக வென்று அரை இறுதி வாய்ப்பை உறுதி செய்தது. லண்டன் ஓவல் மைதானத்தில் நேற்று நடந்த இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற இந்தியா முதலில் பந்துவீசியது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 233 ஓட்டங்களைக் குவித்தது.

அடுத்து 50 ஓவரில் 234 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா களமிறங்கியது.

தொடக்க வீரர்கள் ரோகித் ஷர்மா, ஷிகார் தவான் இருவரும் முதல் விக்கெட்டுக்கு அபாரமாக விளையாடி 101 ஓட்டங்களைச் சேர்த்தனர்.

ரோகித் 52, ஹோலி 22 ஓட்டங்கள் எடுத்து சுனில் சுழலில் ஆட்டமிழந்தனர். இந்தியா 39.1 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 236 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

தவான் அதிகபட்சமாக 102, தினேஷ் கார்த்திக் 51 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக ரவீந்திர ஜடேஜா தேர்வானார்.

மேற்கிந்தியத் தீவுகளுடனான இந்த வெற்றியுடன் இந்திய அணி அரை இறுதி வாய்ப்பை உறுதி செய்தது.

## இலங்கை இராணுவத்...

அளிக்கக்கூடாது, அவர்களை உடனே வெளியேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி பல்வேறு கட்சியினரும், அமைப்பினரும் நேற்று முன்தினம் இராணுவ முகாமை முற்றுகையிட முயன்று கைதாயினர்.

இந்நிலையில் முகாமிலுள்ள இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கான 10 மாத பயிற்சி திட்டமிட்டபடி நேற்று முன்தினம் தொடங்கியது. இதற்கு இடையூறு ஏற்படாத வகையில் வெலிங்டன் பகுதியில் 3 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. ஆயுதப்படை மற்றும் சிறப்பு படை பொலிஸார் 160 பேர் குன்னூரின் நுழைவாயிலான லெவல் கிராஸ், பிளாக்பிரிட்ஜ், பெட்போர்டு, வெலிங்டன் ஆகிய இடங்களில் குவிக்கப்பட்டுள்ளனர்.

அனைத்து வாகனங்களும் சோதனைக்கு பின் அனுமதிக்கப்படுகிறது. விடுதி, ஹோட்டல்களில் அதிரடி சுற்றிவளைப்பு நடந்து வருகிறது. பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளால் வெலிங்டன் பகுதிகளில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. (செ)

## ஈழத்து அகதிகளு ...

உரிமையை வழங்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு.

"இந்தியாவில் அகதி முகாம்களுக்குள் 80ஆயிரம் ஈழ அகதிகள் இருக்கின்றனர் என்றும் வெளியில் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேர்வரை வாழ்கின்றனர் என்றும் ஐ.நா தகவல்கள் கூறுகின்றன. இவர்கள் தங்களது சொந்த மண்ணுக்கு திரும்புவதற்கு ஆசைப்படுகின்றனர். ஆனால், இவர்களின் காணிகளில் படைதரப்பு குடிகொண்டுள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள ஏற்பாடுகள் போன்று இந்தியாவிலுள்ள ஈழ அகதிகளுக்கும் வாக்குரிமை வழங்கப்படவேண்டும் என நாம் கோரியிருந்தோம். அண்மையில் தேர்தல் ஆணையாளருடனான சந்திப்பின்போதும் இந்த விடயத்தை சுட்டிக் காட்டியிருந்தோம்.

பிரான்ஸில் தேர்தல் நடைபெற்றால் இந்தியாவின் பாண்டிச்சேரியிலிருந்து வாக்களிக்கும் நிலை இருக்கின்றது. எனவே, குறைந்தபட்சம் இந்தியாவிலுள்ள ஈழ அகதிகளுக்காவது அரசாங்கம் வாக்களிக்கும் உரிமையை வழங்க வேண்டும்.

எதிர்வரும் வடக்கு மாகாண சபைத் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தலில் இந்தியாவிலுள்ள ஈழ அகதிகள் வாக்களிக்கக்கூடிய வசதிகளை அரசாங்கம் உடன் செய்யவேண்டும் என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா. (செ-11)

## வட-கிழக்கை இணை...

கொழும்பில், நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

13வது திருத்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டுள்ள மாகாண சபையானது ஒரு வெள்ளை யானையைப் போன்றதாகும். அதிலிருக்கின்ற அதிகாரங்களின் பிரகாரம் தேர்தலை நடத்தினால் அது நாட்டின் இறைமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கு பாரிய பிரச்சினைகளை தோற்றுவிக்கும்.

அரசியலமைப்பின் பிரகாரம் 2 மாகாண சபைகளை இணைத்து அதனை ஒரு சபையாக நிர்வகிக்கும் உறுப்புரையை திருத்துவதற்கு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

முதலாவதாக, வடக்கு தேர்தல் வியூகம் மற்றும் கிழக்கில் தேர்தல் வியூகம் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற மாகாணம் வடக்காகும். கிழக்கில் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் இன மக்கள் வாழ்கின்றனர்.

இந்நிலையில் இரு மாகாணங்களையும் ஒன்றாக இணைப்பதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையாக வாழ்கின்றவர்களின் எண்ணங்களுக்கும் சிந்தனைகளுக்கும் இடையூறு ஏற்படுத்துவதாக அமையும்.

அத்துடன் இரு மாகாணங்களையும் இணைப்பதனால் கிழக்கு மாகாணத்தில் ஒன்றுகொன்று சமமாக வாழ்கின்ற சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் சிறுபான்மை இனத்தவராக மாற்றப்படுவர். அத்துடன் இன விகிதாசாரங்களிலும் மாற்றங்கள் ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உதாரணமாக கிழக்கு மாகாணத்தில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் இன விகிதாசாரமானது வடக்கு-கிழக்கை இணைப்பதனால் மாற்றமடையும் என்றும் சுட்டிக் காட்டினர்.

அத்துடன், வடக்கு கிழக்கிலிருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் இன்னும் மீள்குடியேற்றப்படவில்லை.

சர்வதேசத்தை சேர்ந்தவர்கள் தமிழ் மக்கள் மீள்குடியேற்றம் தொடர்பில் பாரியளவில் குரல் கொடுத்து வருகின்றனர் எனினும், புலிகளினால் விரட்டியடிக்கப்பட்ட சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் மௌனம் காப்பது கண்டிக்கத்தக்க விடயமாகும்.

அதேபோல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுமாறு கோரிவருகின்றதே தவிர வெளியேற்றப்பட்ட சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களை குடியேற்றுமாறு ஒருதடவையேனும் கூறவில்லை. இதுவும் வன்மையாக கண்டிக்கத்தக்கவிடயமாகும் என்றார். (செ-11)

## அத்வானியின்...

தேசிய நலனைக் கருத்தில் கொண்டு அவர் தொடர்ந்து கட்சிக்கு வழிகாட்ட வேண்டும் என்றும் பாரதிய ஜனதா கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் முடிவை மதிக்க வேண்டும் என்றும் மோகன் பகவத் கேட்டுக் கொண்டார். மோகன் பகவத்தின் ஆலோசனையை ஏற்க அத்வானி முடிவு செய்துள்ளார்". என்றார் ராஜ்நாத் சிங்.

கட்சியின் தலைவர்கள் தமது சுய விருப்புக்களின் அடிப்படையில் செயல்படுவதாகவும் கட்சி போகும் பாதை தனக்கு ஏற்புடையதாக இல்லை என்றும் எல் கே அத்வானி தனது ராஜினாமா கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், குஜராத் முதல்வருக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை அவர் விரும்பாததாலேயே பதவி விலக முன்வந்ததாக நோக்கர்கள் கூறுகின்றனர்.

பாரதிய ஜனதா கட்சியை தோற்றுவித்தவர்களில் ஒருவரான அத்வானி, அக் கட்சி தலைமையிலான கூட்டணி, நாட்டில் ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்கு அதன் செல்வாக்கு உயர முக்கிய காரண கர்த்தா ஆவார்.

தற்போது 85 வயதான அத்வானி பிரதமராக வேண்டும் என்ற ஆசையோடிருப்பதாக கூறப்படுகிறது. மோடிக்கு கொடுக்கப்பட்டுள்ள பதவி உயர்வு அடுத்த தேர்தலில் அத்வானி பிரதமர் வேட்பாளராக முன்நிறுத்தப்படக்கூடிய வாய்ப்பை பெருமளவு மட்டுப்படுத்திவிட்டது என்றே கருதப்படுகிறது. (செ)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமானந்தம் சின்னத்தங்கம்

### (6-ம் வட்டாரம் -மண்டைதீவு)

6-ம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமானந்தம் சின்னத்தங்கம் நேற்று (11.06.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பரமானந்தத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சறோஜினிதேவி, திருமதி வனிதாமணிதேவி, காலஞ்சென்ற சுசிலாமணிதேவி, திருமதி யாழினிதேவி (மதி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஏகாம்பரம் மற்றும் அருளானந்தம், அருள்குமரன் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான வியாழம்மா, சுப்பையா மற்றும் செல்லாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாஸ்கரன், ஞானசேகர், சந்திரசேகர், அமரர் குணசேகர், விக்னேஸ்வரி, பிரபாகரன், அருளினி, சிவகுமாரதாஸ், தனுசன், பரமஹம்சன், அமரர் கஸ்தூரி, பவித்திரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.06.2013 இன்று புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் மண்டைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

6ம் வட்டாரம்,
மண்டைதீவு

(இ)

தகவல்:
குடும்பத்தினர்


**பதவி வெற்றிடம்** (முந்தும் 25 பேர் மட்டும்)

இன்று அழையுங்கள் நாளை இணையுங்கள் (Call now join tomorrow)

நீங்கள் அடிப்படைக் கல்வி O/L படித்தவரா? உங்களுக்கு எமது அமெரிக்க கம்பனியில் பணிபுரிய ஓர் அரிய சந்தர்ப்பம். யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் & மலையக பிரதேசத்தில் உள்ளவர் பணிபுரிய 04 பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- மேற்பார்வையாளர் (Supervisor)
- முகாமைத்துவ பயிற்சியாளர் (Management Trainee)
- சந்தைப்படுத்துநர் (Distributor)
- களஞ்சியப்படுத்துநர் (Store Keeper)

குறிப்பு: தங்குமிட & உணவு வசதிகள் இலவசம்.

அனுபவம் அவசியமற்றது. வயதெல்லை 18-30

இலவசமாக ஆங்கிலம் & சிங்களம் வகுப்பு நடைபெறும்.

Call Now: 0778602777, 0777981471, 021 7200 867

உங்கள் நல்லதோர் எதிர்காலத்துக்காக இன்றே அழையுங்கள்.

(C-3597)



**கொமர்ஷல் வங்கியின் சேமிப்பு ஒளி கவிதைப்போட்டி**

எமது வங்கியின் சேமிப்பு ஒளி மாதத்தை முன்னிட்டு கவிதைப்போட்டி ஒன்றை யாழ்., கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட பாடசாலை சிறார்களிடையே நடாத்தவுள்ளோம்.

தலைப்பு– "கொமர்ஷல்வங்கியே சேமிப்பின் வழிகாட்டி" [100 சொற்களுக்கு மேற்படாமல்]

வயது எல்லை– இவ்வருடம் 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ளோர்.

போட்டியில் பங்குபற்றுவோர் உங்கள் அருகில் இருக்கும் கொமர்ஷல் வங்கிக் கிளைக்கு பெயர், வயதை உறுதிப்படுத்தும் வகுப்பாசிரியரின் கடிதத்துடன் வியாழக்கிழமை (13.06.2013) மாலை 3.00 மணியளவில் சமுகமளிக்கவும்.

அவ் வங்கிக்கிளை முகாமையாளர் முன்னிலையில் போட்டி இடம்பெறும். போட்டியில் முதல் மூன்று இடங்களை பெறும் வெற்றியாளர்களுக்கு கொமர்ஷல் வங்கியில் அருணலு சிறுவர் கணக்கு திறக்கப்பட்டு

ரூபா 5000/= வெற்றித்தொகை வைப்பிலிடப்படும். இவர்கள் வங்கியினால் வருடா வருடம் வழங்கப்படும் புலமைப்பரிசில் பரீட்சையின் வெற்றியாளர்களிற்கான பரிசில்களை பெறும் வாய்ப்பினை பெறுகின்றார்கள்.

"நடுவரின் தீர்ப்பே இறுதியானது"

COMMERCIAL BANK

கொமர்ஷல் வங்கி
வட பிராந்திய காரியாலயம்.

(C-3599)



**SUNJEYS TOURISM தின் யாத்திரை**

**வவுனியாவிற்கு அப்பால் உள்ள கோயில்களுக்கான யாத்திரை**

SUNJEYS TOURISM ஊடாக 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான சுற்றுலா யாத்திரை. இவ் அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.



உணவு, தங்குமிடம், போக்குவரத்து (குளிரூட்டப்பட்ட, தொலைக்காட்சி, adjustable Seat) போன்ற சகல வசதிகளுடனும் கீழ்க்காணும் இடங்களை சுற்றிப்பார்க்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கதிர்காமம், நுவரெலியா, கண்டி

மேற்குறிப்பிட்ட இடங்களிலுள்ள முக்கிய வணக்க ஸ்தலங்களுக்கும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கும்

5 நாட்களுக்கு 11900/=மட்டுமே 20பேர் மட்டும். ஆரம்பம்: 14.06. 2013 காலை 7.00 மணிக்கு

தொடர்புகளுக்கு: Sunjeys Tourism
713, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:0777474111, 0212217070

(C-3595)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாஸ் குணவர்த்...

குற்றப் புலனாய்வுப் பிரிவின் அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் வரவழைக்கப்பட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தன காலை முதல் மாலை 6 மணிவரையில் நீண்டநேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவரிடம் வாக்கு மூலமும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் வர்த்தகரின் கொலை சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் பேலியகொட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உப-பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட மூன்று பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ள நிலையிலேயே பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தனவிடம் குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)

TRANSITION

## பதவி வெற்றிடம்

முல்லைத்தீவு, முள்ளியவளை

எமது நிறுவனத்தின் முல்லைத்தீவு, முள்ளியவளை கிளைகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| முழுநேர கணனி போதனாசிரியர் | : 10 (ஆண் / பெண்) |
| சந்தைப்படுத்தல் பிரதிநிதிகள் | : 10 (ஆண் / பெண்) |
| வரவேற்பாளர் | : 5 (ஆண் / பெண்) |

உங்கள் விண்ணப்பங்களினை சுயவிபரக்கோவையுடன் வருகின்ற 25.06.2013 ற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்க்காணும் எமது முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

E-TRANSITION,
Software Development Company
166/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9230

(C-3006)

## வேலையாட்கள் தேவை

மல்லாகம் றோட் கே.கே.எஸ் றோட் – மல்லாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அதிநவீன கணனி, தொலைத் தொடர்புச் சாதனங்கள் விற்பனை ஸ்தபானத்திற்கு சக ஊழியர்கள் பலர் தேவை.



க.பொ.த உயர்தரம், கணனியியல், இலத்திரனியல் தகைமையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பம், தராதரச் சான்றிதழ்களுடன் 15.06.2013 காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரையில் தேர்வுக்காக விண்ணப்பம் மற்றும் தராதரச் சான்றுகளுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு:

077 009 5119 – திருஞானம்
www.microwin.Pc.com

ISHI TECHNOLOGY
k.k.s.Road, Mallagam Road
Puliyamthoddam (Near Court),
Mallagam

(3000)

# ...ரணில்...

ஐதேக பாராளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

மீன்பிடி தொழிலுக்குச் சென்று கடும் காற்று காரணமாக அனர்த்தத்திற்குஉள்ளாகி உயிரிழந்த சிலரது மரண வீடுகளுக்கு எதிர்க் கட்சித் தலைவர் உள்ளிட்ட குழுவினர் சென்றுள்ளனர்.

அதன்போது நூற்றுக்கும் அதிகமான நபர்கள் தங்களை நோக்கி கல் வீச்சுத் தாக்குதல் நடத்தியதாகவும் அதில்எதிர்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டதாகவும் விஜேதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டார். (செ-11)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

### Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திறகமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

### Diploma In English (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

### IELTS

Toping centre for registering more IELTS candidates in Jaffna
&
Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 1/2 Months

### BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

### A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

### Young Learners for English (YLE) [வயதெல்லை : 7 - 12]

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 15-06-2013 | 17-06-2013 | 22-06-2013 | 24-06-2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

(C-3587)

## திறப்பு விழா

## நெல்லியடி நகரில் ...
## சாம் மெடி கிளினிக்
## SHAAM MEDI CLINIC
## 12.06.2013 முதல்



இடம் : ம.ம.வி.வீதி, வதிரிச்சந்தி அருகில், நெல்லியடி.

பிரதம விருந்தினர் : DR.S.ரவிராஜ்
(சத்திரசிகிச்சை நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை)

கௌரவ விருந்தினர் :
Mr.K.பாலசுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி பொதுமுகாமையாளர்)

சிறப்பு விருந்தினர் :
சிவஸ்ரீ.மகாகணபதி
சிவானந்தராஜா குருக்கள் J.P

தினமும் காலை 8.00 மணி முதல் மாலை 1.00 மணி வரை நோயாளர்கள் பார்வையிடப்படுவர்.

எமது வைத்தியசாலையில்
- வெளிநோயாளர் பிரிவு
- உள்ளக மருந்தகம்
- ECG, இரத்த, சல பரிசோதனைகள் சலரோக, உயர் குருதி அழுத்த நோயாளர் களுக்கான கிளினிக் வசதி உண்டு

Dr.B.கரிகரன் (MBBS)
T.P: 021 320 7257

(C-3591)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.